# பிழைக்கும் வழி

## PRACTICAL LIFE.

ஜி. எ. வைத்தியராமன், பி. எ.,
பத்திராதிபர்

**G. A. VaidyaRaman, B. A.**
EDITOR.

புஸ்தகம் 4. Vol. 4. — பரீதாபி௵ ஆனி௴, JUNE, 1912. — ஸஞ்சிகை 6. No. 6.


## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... ... | 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 | ... ... | 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | அந்நிய நாடு. |
|---|---|---|---|
| வருஷம் 1 க்கு ... | 4 0 0 | ... | 6 0 0 |
| தனிப்பிரதி ... | 0 6 0 | ... | 0 8 0 |
| மாதிரி காபி ... | 0 2 0 | ... | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் | ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, | ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, | ,, | 1 4 0 |

**வியாஸம் எழுதுகிறவர்கள்கவனிக்கவேண்டியவை**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக கிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில், அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருப நேயர்கள் அறியவேணும்.

**ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,**
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

## IMPROVEMENTS IN PADDY CULTIVATION.

BY

R. C. WOOD.

### நெல் ஸாகுபடியில் சீர்திருத்தங்கள்.

இதனடியில் சொல்லப்பட்டிருக்கும் குறிப்புகள் சென்னை ராஜதானியின் வெவ்வேறு இடங்களில் ஸ்தாபித்திருக்கும் ஸர்க்கார் விவஸாயப்பண்ணைகளில் பரிட்சார்த்தமாய் செய்த முறைகளின் அனுபவத்தையும், ஆங்காங்கு இம்முறைகளை விஸ்தாரமாய் கையாடி இவைகள் ஸரிதானென்று உறுதிப்படுத்திய கிருஷிகளுடைய அனுபவத்தையும் பொருத்து எழுதப்பட்டிருக்கின்றன. இங்கு சொல்லியிருக்கும் ஒவ்வொன்றையும் அதே பிரகாரம் கையாடவேண்டுமென்பது கருத்தல்ல. சீர்திருத்தங்களை கிருஷிகர் மேல்சொன்ன வழிகளில் செய்யலாமென்பதே.

2. இப்பயிர் ஸாகுபடி செய்வதில் முதல் முதல் செய்யும்வேலை நாற்றங்காலில் நாற்று விடுதலென்று சொல்லலாம். நெற்பயிர் செய்வதில் முடிவில் கிடைக்கும் மாஸூல் (மேனி, ராசி) பயிர் நடும்போது நாற்றுகளிருக்கும் ஸ்திதியையும் திடத்தையும் பொருத்திருக்கிறதென்பதை யோசித்துப்பார்த்தால் நாற்றங்காலில் விடும் நாற்றின் செய்நேர்த்தியைக் குறித்து கவனம் செலுத்துதல் நல்லதென்று புலப்படும். நாற்றங்காலை நன்றாய் உழுது பரம்படித்து ஸமப்படுத்துவதுடன் அதற்குத் தக்கபடி எருவிடவும் வேண்டும். ஸாதாரணமாய் நெல் நடும் வயல்களில் ஒரு குறித்த விஸ்தீரணத்திற்கு உபயோகிக்கும் எருவைப்போல் இரண்டுபங்கு எரு அதே விஸ்தீரணத்தில் விடும் நெல் நாற்றுக்கு உபயோகிக்கவேண்டும். நாற்று விடும் இடம் ஸமமாயில்லாமல் ஒரு பக்கத்தில் மேடும் மற்றொரு பக்கத்தில் பள்ளமுமாயிருந்தால் அதில் முளைக்கும் நாற்று செழித்தோங்கி வளர யிடமில்லாமல் போகும். ஆகையால் நாற்றங்காலை ஸரியானபடி பரம்படித்து மேடு பள்ளங்களில்லாமல் ஸமப்படுத்தவேண்டும். நாற்றுவிட உத்தேசித்திருக்கும் இடம் ஸுலபமாய் தண்ணீர் பாயக்கூடியதாயும், தண்ணீர் வடியக்கூடியதாயுமிருக்கவேண்டும். நாற்றங்காலில் விதைக்க வேண்டிய விதையின் அளவு இவ்வளவுதானென்று தீர்மானிப்பது, எவ்விதமாய் நாற்றை நட உத்தேசித்திருக்கிறோமோ அதைப் பொருத்திருக்கும். ஆனால் இதனடியில் சொல்லப்போகும் யோசனையை எடுத்துக் கொண்டு ஒற்றை நாற்று நடுதலை அனுஷ்டித்தால், சாதாரணமாய் நாற்று விடுவதற்கு வேண்டிய விதை யளவைவிட குறைத்த விதை நாற்றுவிட்டால் போதுமானதாயிருக்கும். ஒரு ஏக்கர் பூமியில் நெல் நாற்று நடவேண்டுமானால், 7 செண்டு விஸ்தீரணமான நாற்றங்காலில் 7 பட்டணம் படி (20 ராத்தல்) விதை விதைத்தால்போதும். ஸாதாரணமாய் ஒரு ஏக்கர் நடும்பொருட்டு 150 ராத்தல் விதைவரைக்கும் தற்காலம் விதை உபயோகித்துவரும் குடியானவர்களுக்கும், காரியஸ்தர் மூலமாய் இவ்வளவு விதை உபயோகிக்கிற அநேகர்களுக்கும் மேற்சொன்ன விதையின் அளவு குறைச்சலாய்த் தோணலாம். ஆனால் நாற்றங்காலில் நாற்று செழித்து ஓங்கி வீரியமாய் வளர்வதிலும், அப்படிப்பட்ட நாற்றை ஒவ்வொன்றாய் நடுவதிலும் சற்று கவனம் செலுத்தினால் மேற்சொன்ன அளவு விதை ஒரு ஏக்கர் பூமிநட போதுமான நாற்றைத் தராதென்று பயப்படவேண்டியதில்லை. பயிரிட உத்தேசித்திருக்கும் நெல் தினிஸின் வயஸை கவனித்து அது எத்தனை மாதத்துப் பயிரோ அத்தனை வாரங்கள் நாற்று, நாற்றங்காலிலிருக்கவேண்டும். ஐந்து மாதத்தின் நெல் தினுஸூ நாற்று, நாற்றுவிட்ட 35 நாட்

களுக்கு பின் நடவேண்டும். ஆனால் நடும் ஸமயத்தில் வேலை பரப்பாயிருக்கு மாகையால், நாற்றங்காலில் நாற்றை முன்னும் பின்னுமாய் விடுவதுடன், ஒரு ஏக்கராவுக்கு வேண்டிய விதையின் அளவையும் ஏற்றக் குறைச்சலாய் அநேக விதங்களில் நாற்று விடலாம். நாற்றங்காலில் விதையளவைக் குறைத்தும் எல்லாவற்றிற்கு முன்விட்ட நாற்று நெருக்கமாய் ஜாஸ்தி விதையளவு உபயோகித்து பிந்திவிட்ட நாற்றைவிட முன் கூட்டியே நடத்தயாராயிருக்கும். இப்படிச் செய்யும் உபாயத்தால் நடுகைநடும் நாட்களை சற்று ஜாஸ்தியாக்கி ஸாவகாசமாய் நட்டுக் கொள்ளலாம். நெல்நடுகை ஒற்றை நாற்றாய் நடவேண்டுமானால் நிலத்தை ஸரியானபடி உழுது பண்படுத்துவதில் ஸரியானபடி கவனம் செலுத்தவேண்டும். ஏனென்றால் மேற் சொன்னபடி செய்யாவிட்டால் இப்படி நட்ட பயிர் தேறி ஸரியானபடி கிளைக்குமுன் அதிலிருக்கும் காலியிடத்தில் சாதாரண ஊர்வழக்கப்படி (கொத்துக்கொத்தாய்) நட்டவயல்களில் முளைக்கும் களைகளைவிட ஜாஸ்தி களைப்பூண்டுகள் முளைக்கும். சிவகிரி ஜமீன் விவஸாயப் பண்ணையில் உபயோகித்து ஸரியான பயன் தந்த சிறு இரும்புக்கலப்பைகளைக் குறித்து இங்கு பேசுதல் நலம். 6 ரூ. கிரையமுடைய இந்த ஸகாயமான கலப்பைகள் மணல் பாங்கான நிலங்களில் நல்ல வேலைசெய்யுமென்று உறுதியாய்ச் சொல்லலாம். முன் சொன்ன பரம்புப் பலகை சில ஜில்லாவில் உபயோகப் படுத்துவதேயில்லை. அநேகவித தினுஸு பரம்புப்பலகைகளிருக்கின்றன. இப்பரம்புப் பலகை உபயோகித்து நிலத்தை மேடுபள்ள மில்லாமல் ஸமப்படுத்தும் வேலை நெல்நாற்று நடுமுன் அவசியம் செய்யவேண்டும்.

3. எவ்வித எரு உபயோகிக்க வேண்டுமென்பது இனி யோசிக்கவேண்டிய விஷயம் இந்தத் துண்டுப் பத்திரிகையில் முக்கியமாய் குறித்துச்சொல்லும் சீர்திருத்தம் என்னவென்றால், நெல்நாற்றை கொத்துக்கொத்தாய் நடாமல் ஒவ்வொன்றாய் நடவேண்டுமென்பதே. இப்படிச் செய்வதினால் அநேகமாய் மாஸூல் ஜாஸ்திகிடைக்க யிடமிருக்கும். ஜாஸ்தி மாஸூல் அகப்படும்போது நிலத்தின் பூஸாரமும் ஜாஸ்தியாய் பயிருக்கு உபயோகப்படும். ஆகையால் நிலத்தின் வளம் இயற்கையாகவே குறைந்து போகலாமென்ற பயம் உண்டு. இது காரணத்தால் நிலத்தின் பூஸாரத்தை குறையாமலிருக்கும்படி செய்ய, எருச்சேர்த்தல் அவசியமான காரியம்.

இத்தேசத்தில் நெல்பயிருக்கு எல்லாரும் ஸமானமாய் உபயோகிக்கும் எரு, தழை எருவே. கொழுஞ்சி, (கொள்ளுக்காவேளை) எருக்கம்; ஆவாரை முதலிய தழைகளை, தலைச்சுமைகளிலும் வண்டிகளிலும் ஏராளமாய் நெல் நடுமிடங்களுக்கு சிலமாதங்களில் கொண்டுபோய் அவைகளை சேற்றில் எருவுக்காக சிதறி மிதித்தல் எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். ஒரு ஏக்கர் பூமியில் எவ்வளவு தழை எருப்போடவேண்டுமென்பது இலைதழைகள் ஸுலபமாய் அகப்படுவதற்கும் அகப்படாததற்கும் தக்கபடி வெவ்வேறு இடங்களில் ஏற்றக்குறைச்சலாயிருக்கும். ஆனால் ஸாதாரணமாய் ஒவ்வொருவரும் ஏக்கரா ஒன்றுக்கு ரூ. 10 க்கு குறையாத இலை தழைகளை உபயோகிப்பார்களென்றும், அது சுமார் 50 தலைச்சுமைகளுக்கு குறையாதென்றும் வைத்துக்கொள்ளலாம். நெல்ஸாகுபடி அப்பால் இடையில் நிலம் காலியாயிருக்கும் காலத்தில் தழை எருப் பயிர்களை அந்நிலங்களில் ஸுலபமாய்ப் பயிர் செய்வதால் முன் சொன்ன இலை, தழை எரு, வாங்கும்படி செலவுசெய்யும் பணத்தை மீத்த முடியுமாவென்பதை சற்று யோசிக்கலாம். அநேக கிருஷிகர் நெல்ஸாகுபடி செய்யுமிடங்களில்

நெல்லைத் தவிர மற்றப்பயிரிடல் நல்லதல்ல வென்றும், நிலம் சேராயிருக்கும்போது தான் அந்நிலங்களில் ஸாகுபடி செய்யலாமென்றும் ஆக்ஷேபனை சொல்வதுண்டு. நன்செய் நிலங்களில் நெல்நாற்று புழுதியில் (சேறுசெய்யாமல்) அடிக்கடி விடும் வழக்கமிருப்பதாலும் அநேக யிடங்களில் நெல்ஸாகுபடி செய்யுமிடங்களில் பசுந்தாள் எருப்பயிர்களை விதைத்து சிலாக்கியமான தழை எரு அகப்பட்டுமிருக்கிறதாலும் சில கிருஷிகரால் சொல்லப்படும் மேலேசொன்ன ஆக்ஷேபணை ஸரியானதல்ல வென்றும், அது செய்ய மனமில்லாததினாலும், சோம்பேரித்தனத்தினாலும் சொல்லும் புகலென்றும் சொல்லலாம்.

எந்த தினுஸுப் பயிர்களை பசுந்தாள் எருவுக்காக நெல் ஸாகுபடி செய்யும் நிலங்களில் விதைக்கலாம். பயறு, அவுரி, மொச்சை போன்ற ஒரு பொது இனத்தைச்சேர்ந்த அநேக பயிர்களிருக்கின்றன. இவைகள் பயிர்களுக்கு சிலாக்கியமான பயிருணவாகிய நைட்ரொஜன் என்று சொல்லும் வெடியுப்பு வாயுவை காற்றிலிருந்து இழுத்து நிலத்திற்குள் சேர்த்து பயிர்களுக்கு உபகாரமாகும்படி செய்யும் சக்தியுடையன.

முதலாவது.—தக்கைப்பூண்டு. இதற்கு சித்தகத்தி என்றும் ஒரு பெயர். இது ஸாதாரணமாய் எங்கும் வளர்ந்துகிடைக்கும் ஒருவித பூண்டு. இது எல்லாவித நிலங்களிலும் நன்றாய் வளரும். களர் நிலங்களில்கூட பயிராக்கக்கூடியது. இப்பயிர் அநேக நாட்களுக்கு வளர்ந்து நீடித்திருக்கக்கூடியதுடன் மழையில்லாமல் போனாலும் செத்துப்போகாது. ஆகையால் இதற்குத் தண்ணீர் பாய்ச்சவேண்டியதில்லை. இதை எருவாய் உபயோகிப்பதற்கு 3 முதல் 6 மாதத்திற்குமுன் விதைக்கவேண்டும். ஆகவே ஒருபோக நன்செய் நிலங்களில் நெல் அருவடைசெய்தவுடனே விதைத்து விட்டால் மறுபடி நெல் பயிர்செய்யும்போது தழை எருவுக்காக உபயோகப்படுத்தலாம். இதை நெல் அறுவடைசெய்ய ஸுமார் 15 நாளைக்குமுன் கூட நெல்பயிர் இருக்கும் போது, கடைசியாய் நெல்லுக்கு தண்ணீர் பாய்ச்சிய ஈரத்தில் முளைக்கும்படி விதைக்கலாம். நெல் அருவடை செய்தபின் அந்நிலத்தில் இந்தப்பயிர் சிறு செடிகளாயிருந்து மறுபடி அந்நிலத்தில் நெற்பயிருக்காக சேர்த்து உழவுசெய்யுமுன் ஓங்கிவளர்ந்து ஸுமார் 3 அடி முதல் 8 அடி உயரம் வளர்ந்துவிடும். நெல் பயிர் அருவடை செய்தபின் வாய்க்காலில் தண்ணீர் கிடைக்கும்பக்ஷத்தில் இந்த விதையை நிலத்தில் விதைத்து விதை மறையும்படி ஒரு உழவுபோட்டு அதன்மேல் தண்ணீர் கட்டலாம். இப்படி தழை எருப்பயிருக்கென்று பாய்ச்சும் தண்ணீருக்குத் தீர்வை கிடையாது.

கொளுஞ்சி (கொள்ளுக்காவேளை) த்தழை ஸாதாரணமாய் நன்செய் நிலங்களுக்கு சிலாக்கியமான எருவென்று எல்லாரும் மதிக்கிறார்கள். இதையும் முன்சொன்ன பிரகாரம் நெல் பயிரிடும் நிலத்திலேயே விதைத்து தழையுண்டாக்கலாம். இவ்விதைகளை பொறுக்கி சேர்க்கும்பொருட்டு சிறுப்பிள்ளைகளை அனுப்பி கொளுஞ்ச்செடிகளுக்கு அடியிலிருக்கும் மேல்மண்ணை சேகரித்துக் கொண்டுவரும்படி செய்யலாம். இவ்விதைகளின் மேல்தோல் சற்று கெட்டியாயிருப்பதால் இவைகள் ஸரியானபடி முளைக்கும்படி மண்ணையும் விதையும் சேர்த்து விதைகளின் மேல்தோல் சற்று உராஞ்சும்படி (கசங்கும்படி) உரலில் போட்டுக் குத்தி அப்பால் விதைக்கவேண்டும்.

மேற்சொன்ன 2 தினுசு பயிர்களும் நெடுநாள் வளரும்பயிர்கள். ஆகையால் ஒருபோக நன்செய் நிலங்களில் மாத்திரம் விதைக்கலாயக்குள்ளவை. இருபோக நன்செய் நிலங்

களில் 2 நெல்பயிர்களுக் கிடையில் நிலம் காலியாயிருக்கும் நாட்கள் சொற்பமாகையால் அப்பேர்பட்ட நிலங்களில் சடம்புப் பயிர்செய்தல் நலம். இச்சடம்புப்பயிர் விதைத்த 60 முதல் 80 நாளைக்குள் பூத்துக் காய்க்க ஆரம்பிக்கும். இப்பயிரை பூத்துக் காய்த்தபின் நிலத்தில் விட்டுவைத்தல் எருவுக்கு சிலாக்கியமில்லை. நெல்பயிர் அருவடைசெய்த பின் நிலத்திலிருக்கும் ஈரம் பதத்தைக்கொண்டாவது அல்லது அப்பால் முன்கூட்டிப் பெய்யும் கோடை மழைகளின் உதவிகொண்டாவது இப்பயிர் செய்யவேண்டும். மறுபடி நெல்லுக்காக நிலம் தயார்செய்வதற்கு ஸுமார் 2 மாதத்திற்குமுன் விதைக்கவேண்டும். இப்பயிர் கூட ஸாதாரணமாய் உழாத நிலத்திலேயே விதைக்கலாம். ஆனால் தழை எரு ஜாஸ்தியாய் கிடைக்கவேண்டுமானால் விதைத்தபின் விதை மறையும்படி ஒருதரம் உழுவது நலம். ஒருபோக நன்செய் நிலங்களில்கூட நெல் பயிரிருக்கும்போதே அருவடைக்குமுன் சடம்புப்பயிர் விதைத்து பரீக்ஷை செய்யப்பட்டிருக்கிறது. இப்படி விதைத்த பயிர் பூக்க ஆரம்பித்தவுடன் இப்பயிரை கீழே ஸுமார் ஒரு அடிதாள்விட்டு அதற்குமேலே அறுத்து அதைமாட்டுத் தீவனத்திற்காக உபயோகப்படுத்தலாம். இதை கொஞ்சம் வாடவைத்து உபயோகித்தால் நலம். இதை நன்றாய்க் காயவைத்து, அதை நெல்வைக்கோலுடனாவது அல்லது கடலை ஒப்படிசெய்தபின் அகப்படும்பொருட்டு சருகு முதலியவைகளுடன் சேர்த்து போர்கட்டிவைத்து புல் அகப்படாத காலத்தில் உபயோகித்தல் நல்ல ஸத்துள்ள உணவாகும். அறுத்த கட்டைகள் மழைக்குப்பின் துளிர்த்து மறுபடியும் வளரும். இது மழைகள் ஒத்துக்கொண்டால் ஸரியானபடி பயிராகி ஏக்கரா 1-க்கு 30 முதல் 40 தலைச்சுமைகளுக்குக்குறையாத எருத்தழைகளைக் கொடுக்கும். இதை நிலத்தில் எருவுக்காக உபயோகித்து சேற்றில் மிதிக்கலாம். விதையை சும்மா நிலத்தில் விதைத்துப் பயிர் உண்டாகச் செல்லும் செலவு விதைவாங்கக்கொடுக்கும் க்ரையம் மாத்திரமென்றே சொல்லவேண்டும். அல்லது விதையைப் பொறுக்கி சேகரிக்கப் பிடிக்கும் செலவுதானென்று சொல்லவேண்டும். இது ஏக்கர் 1-க்கு ஸுமார் 2 முதல் 6 ரூபாய்க்குமேல் போகாது. ஆனால் இப்படிச் செய்வதினால் உண்டாகும் பலனோ மெத்த ஜாஸ்தி. பின் குறிக்கும் திருஷ்டாந்தங்கள் இதை நன்றாய் வெளிப்படுத்தும். பாலூர் ஸர்க்கார் விவஸாயப்பண்ணையில் ஒரு வயலில் இப்படிச் செய்வதில் ஏக்கரா ஒன்றுக்கு 924 ராத்தல் நெல் பிரகாரம் மாஸூல்கிடைத்தது. இந்த வயலில் நெல் ஸாகுபடி செய்தபின் நிலத்தை ஒரு தரம் உழுது சித்தகத்தி என்று சொல்லும் தக்கைப்பூண்டை விதைத்து மறுபடி விதை மறையும்படி ஒருதரம் உழுதார்கள். இதில் முளைத்த தக்கைப்பூண்டை அந்நிலத்திலேயே 4 மாதத்திற்கு அப்பால் நெல் பயிர் செய்யுமுன் உழுது மடித்துவிட்டு அப்பால் நெல் நட்டார்கள். இதிலிருந்து கிடைத்த மாஸூல் ஏக்கரா ஒன்றுக்கு 2086 ராத்தல் வீதம் கிடைத்தது. இந்தத் தக்கைப்பூண்டை இந்த நிலத்தில் ஸாகுபடி செய்ய ஏக்கரா ஒன்றுக்குப் பிடித்த செலவு ரூ. 6-11-0. இதில் கிடைத்த ஜாஸ்தி நெல்லின் க்ரயமோ ஏக்கரா ஒன்றுக்கு ரூ. 46-6-0. இதேமாதிரி சிவகிரி ஜமீன் பண்ணையிலும் சடம்பு விதைத்து உழுது மக்கவைத்து நெல் பயிர் செய்வதினால் ஏக்கரா ஒன்றுக்கு 2,000 ராத்தல் நெல் கிடைத்த பூமியில் ஏக்கரா ஒன்றுக்கு 3,400 ராத்தல் கிடைத்திருக்கிறது. இப்படி பலன்கள் இவ்விரண்டிடங்களிலும் அடைந்திருக்கும்போது இம்முறையை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர ஒருவரும் யோசனை செய்யக்கூடாது.

நெல்பயிருக்குவேண்டிய எல்லாவித உணவுப்பொருள்களும் கிடைக்க பசுந்தாள் எருவை உபயோகித்துக்கொண்டுவந்தால் போதுமென்று எப்போதும் எண்ணிக்கொண்டிருக்கக்கூடாது. நெற்பயிருக்கு லாபகரமாய் பரிட்சைசெய்து பார்த்த வேறு சில எருக்களைக் குறித்து இதனடியில் சொல்லப்படும். 2,240 ராத்தல் கொண்ட ஒரு டன் மீன் எரு ரூ. 50 முதல் 80 வரை கிரையமாகும். இதன் கிரையம் இவ்வெருக்கிடைக்கும் இடத்தின் அருகாமைக்கும் அதன் தாரதம்மியத்தையும் பொருத்து சற்று ஏற்றக்குறைச்சல் விலையாயிருக்கும். இவ்வெரு நெல்பயிருக்கு நல்ல பலனைத் தருகிறது. இத்துடன் இதன் காரத்தால் மருவருஷத்திற்கும் நல்ல மாஸூல் கிடைக்கின்றது. இதைத் தனியாயாவது அல்லது தழை எருவுடன் சேர்த்தாவது உபயோகிக்கலாம். தனியாய் உபயோகித்தால் ஏக்கரா ஒன்றுக்கு ஸுமார் 560 ராத்தல் நிறை எரு உபயோகப்படுத்தலாம். இப்படிக்கில்லாமல் தழை எருவுடன் சேர்த்து உபயோகித்தால், தழை எருவைக் குறைத்துக்கொள்ளலாம். ஸூப்பர் பாஸ்பேட் என்று சொல்லப்படும் எரு வெண்ணிறமான தூள்போன்ற ஒரு ரஸாயன எரு. இதை 2,240 ராத்தல்கொண்ட ஒரு டன் ரூ. 100-க்கு இராஜதானியில் ஸ்தாபித்திருக்கும் ரஸாயன எருக்கிடங்குகளில் * வாங்லாம். இதை ஏக்கரா 1-க்கு 112 ராத்தல் முதல் 168 ராத்தல் வரை உபயோகிக்கலாம். இதுவும் அநேக ஸந்தர்ப்பங்களில் நல்ல பலனைக் கொடுத்திருக்கிறது. இதை உபயோகம் செய்வதில் பயிருக்கு ஒரே பயிருணவுதான் கிடைக்கும். இந்த எருவிலிருந்து பாஸ்பாரிக்காஸிட் என்று சொல்லப்படும் பிரகாசதாமில பயிருணவு மாத்திரந்தான் கிடைக்கும். ஆகையால் இதை இலைதழைகளோடாவது அல்லது கொட்டைமுத்து என்று சொல்லப்படும் ஆமணக்கு பிண்ணாக்கோடாவது சேர்த்து உபயோகிக்க வேண்டும்.

4. நிலத்தை ஸரியாய் உழுது பண்படுத்தி எருவிட்டு தயார் செய்தபின் கவனிக்கவேண்டிய விஷயம் நாற்று நடுகையைக்குறித்து தான். இந்தப் பத்திரிகையில் முதலில் சொன்ன பிரகாரம் நாற்றை விசாலமாயும், கலப்பாயும் விட்டிருந்தால் அவைகள் நன்றாய் மட்டை வைத்து செழிப்பாயிருக்கும். அதை வெவ்வேறாய் நடும்போது எடுக்கவும் லாயக்காய்த் தானிருக்கும். ஆகையால் நடும் கூலி ஆட்கள் ஸாதாரணமாய் கொத்துக்கொத்தாய் நடுதலைப்போல் நடாமல் தனித்தனிப் பிரித்து ஒவ்வொன்றாய் நடவும் கஷ்டமிருக்கமாட்டாது. ஒரு நாற்றுக்கும் மற்றொரு நாற்றுக்கும் மத்தியில் காலியாயிருக்கவேண்டிய தூரம் நிலத்தின் வளத்தை பொருத்தது. சாதாரண வளமுள்ள நிலங்களில் 2 நாற்றுகளுக்கு மத்தியில் ஸுமார் 6 அங்குல இடம் விடலாம். கேவலமான வளம் ஜாஸ்தியில்லாத நிலங்களில் நாற்றுகளை சற்று நெருக்கமாகவும், நல்ல வளமுள்ள நிலங்களில் ஒரு ஜாண் தூரத்திற்கு சற்று ஜாஸ்தியாயும் இடம்விட்டு நடுதல் நல்லது. மேலேசொன்ன ஒற்றை நாற்றாய் நடுவதின் அநுகூலங்கள் பல உள :—

**விதைக்கும் விதையில் மீதமிருக்கிறது.**— தற்காலம் ஏக்கரா 1-க்கு அநேக இடத்தில் உபயோகித்துவரும் 100 முதல் 150 இராத்தல் விதைக்குப் பதிலாக 20 ராத்தல் விதை போதும். நாற்றுப்பிடுங்குவதிலும் நடும் இடத்திற்கு நாற்றைக் கொண்டுபோவதிலும் நடுவதிலும் பிடிக்கும் கூலி குறைவாகிறது. இப்படி நட்ட பயிர்கள் வீரியமாயிருப்பதுடன் தண்ணீர்த்தட்டுள்ள காலங்களில் காய்ச்சலை சற்று

* எருக்கிடங்குகள்—வட ஆற்காடு ஜில்லா, ராணிப்பேட்டை பாரி அண்டு கம்பெனி, கோயம்புத்தூர் ஸ்டேன்ஸ் கம்பெனி, கள்ளிக்கோட்டை பியர்ஸ் லெஸ்லி கம்பெனி.

தாங்குகின்றன. இத்துடன் இப்படி பயிரிட்ட பயிர் ஒரே மாதிரி பழுத்து ஜாஸ்தி மாஸலில் கொடுப்பதுடன் சிலாக்கியமான தானியத்தையும் கொடுக்கிறது. இதற்குக்காரணம் என்னவென்றால் இப்படி நட்ட பயிரின் இளமைப் பருவத்தில் அதற்கு விசாலமாய் இடமிருக்கிறது. இது காரணம்பற்றி பயிரின் வேர்கள் நன்றாய்ப் பரவி, பயிர் அனேகமாய்க் கிளைத்து செழிப்பாய் ஓங்கிவளருகிறது. ஒவ்வொரு முதலிலும் 20 முதல் 30 கிளைகள் வெடித்திருப்பதை எண்ணிப் பார்க்கலாம். கொத்துக்கொத்தாய் நட்ட மூடுகளிலோ எரு மூட்டில் நட்ட நாற்றுகள் ஒன்றோடு ஒன்று சேர்ந்திருப்பதால் அவைகளுக்கு காற்று, பயிருணவு, தண்ணீர் முதலியவைகள் ஸரியானபடி கிடைக்காமல், ஒன்றோடொன்று போராடித் தத்தளித்து, கஷ்டப்பட்டு, பயிர்கள் ஸாதாரணமாய் வளரும் பருவத்திலேயே பலஹீனமடைகின்றன. ஸாதாரணமாய் 1 பசுவிலிருந்து அகப்படும் பால் பூராவும் குடிக்கும் ஒரு கன்று என்னபலமாயும் வீரியமாயுமிருக்குமோ அதுபோல் ஒவ்வொன்றாய் நட்ட பயிருமிருக்குமென்று ஒரு இந்து தேசத்துக் கிருஷிகர் உதாரணம் காட்டியிருக்கிறார்.

5. இப்படி நட்டபின், பயிருக்குக்கட்டும் தண்ணீரைக்குறித்து கவனம் செலுத்தி, தண்ணீர் ஸரியானபடி விடப்படுகிறதா என்று கவனிக்கவேண்டும். ஸாதாரணமாய் குடியானவர்கள் இப்பயிருக்கு அவசியமென்று எண்ணும் அளவு தண்ணீரைவிட, கொஞ்சம் அளவுத்தண்ணீரை கட்டி, நல்ல பலன் சிவகிரி ஜமீன் பண்ணையில் அடைந்திருக்கிறார்கள். அவ்விடத்தில் நெற்பயிருக்கு ஒருதரம் தண்ணீர் பாய்ச்சியபின்னும், மறுபடி தண்ணீர் பாய்வதற்கு முன்னும் நிலத்தின்மேல் பரப்பில் ஈரப்பதமில்லாமல் வெடிக்கும்வரை தண்ணீர் கட்டாமல் பயிர் லாபகரமாய் செய்திருக்கிறார்கள். இவ்விஷயத்தைக்குறித்து ஆற்றுக்கால்வாய் ஆதாரம் வைத்து நெல் ஸாகுபடிசெய்பவர்கள் அவ்வளவு ஜாஸ்தி கவனம் செலுத்தவேண்டியதில்லையென்றாலும், ஜல ஆதாரங்களில் சற்று கஷ்டப்படும் நிலத்தையுடையவர்கள் இதை முக்கியமாய் கவனிக்கவேண்டும். சிலயிடங்களில் குளங்களிலிருந்தும் ஊற்றுக்கால்களிலிருந்தும் நன்செய் ஸாகுபடி செய்பவர்கள் இவ்விதமுறையை அநுஸரித்தால் நலம். இப்படித் தண்ணீர் பாய்ச்சி அப்பியாஸப்பட்ட நெல்ப்பயிர் தண்ணீர்த்தட்டுகாலங்களில் எப்போதும் ஜலம் பாய்ந்துக்கொண்டிருந்த நெல்பயிரைவிட ஜாஸ்தி நாளைக்குத் தாக்குபிடிக்கும்.

6. ஒவ்வொரு கிருஷிகரும் தாங்கள் உபயோகிக்கும் விதையை பொறுக்கி எடுத்து விதைப்பதில் செலுத்தும் கவனம் வீண்போகாது. ஆகையால் அவ்விஷயத்தில் சற்று கவனம் செலுத்தவேண்டும். அறுவடை ஸமயத்தில் விதைபொறுக்கி எடுக்க உத்தேசிக்கும் ஒவ்வொரு கிருஷிகரும் தனக்கு ஒத்தாசை செய்ய மற்றொருவரை கூட்டிக்கொண்டு பழுத்திருக்கும் வயல்களில் வேலைசெய்ய ஆரம்பிக்கவேண்டும். நன்றாய் செழித்தோங்கி நோய்நொடிகளால் பீடிக்கப்படாமல் நெருங்கி மணிபிடித்து, நீர்ச்சாவி, பதர் முதலானவையில்லாததும், பயிரிட்ட ஜாதி நெல்லின் குணங்கள் பூராவும் ஸரியாய் அமைந்த செடிகளாய்ப்பார்த்து நிலஸ்வான் காண்பித்துக்கொண்டு போவதை அவர் கூடப்போகும் ஆள் வேறாய் அறுத்து சேகரித்துக் கொள்ளவேண்டும். இப்படித்தெரிந்தெடுத்த விதைகளை மற்றவைகளோடு கலக்காமல் தனியாய்க் காயவைத்து மண்பானைகளிலாவது, ஜாடிகளிலாவது பத்திரப்படுத்தி, அப்போதைக்கப்போது எடுத்து வெயிலில் காயவைத்துக் கொண்டிருக்கவேண்டும். இப்படிச் செய்வதால் நல்ல விதை கிடைக்கிறது. களைக

ளுடன் கலக்காத விதையுமாயிருக்கும். ஸரியானபடி கவனம் செலுத்தி பொறுக்கி எடுக்காத நெல்விதையில், களைப்பூண்டுகளின் விதையும், கலந்து வருவதால், அவ்விதை மறுவருஷம் விதைக்கும்போது பயிருடன்களைப்பூண்டுகளும் ஜாஸ்தி பரவ ஹேதுவிருக்கிறது. மேல்சொன்ன கவனம் செலுத்தி பொறுக்கி பத்திரப்படுத்தும் முறையில் செல்லும் ஜாஸ்தி செலவுக்குமேல் லாபம், அவ்வித விதைகளிலிருந்து பயிராகும் பயிர், ஒரே ஜாதிப்பயிராய் கலப்பில்லாமலும், ஒரே தருணத்தில் வளர்ந்து அறுவடைக்கு லாயக்காகும் விஷயத்திலிருந்து கிடைக்கும்.

7. ஸாதாரணமாய் நெற்பயிர் நோய்நொடிகளால் பாதைப்படாத பயிர்களில் ஒன்றானாலும் சில வேளைகளில் புழுக்களால் பிடிக்கப்படும். அப்படி ஸம்பவித்தால் அதை உடனே அங்கங்கேயுள்ள ரெவினியூ உத்தியோகஸ்தர்கள் மூலமாயாவது அல்லது விவஸாய இலாகாதார்களுக்காவது அல்லது கோயமுத்தூர் விவஸாய கலாசாலையில் வேலை பார்க்கும் கவர்ன்மெண்டு பாடனிஸ்டு அவர்களுக்காவது நேரே எழுதி ஸரியான சிகிச்சைகள் நோய் நொடிகள் பரவுமுன் பெற்றுக்கொள்ளலாம்.

ஆர். ஸி. உட்,
பிரின்ஸிபால், விவஸாய காலேஜ்,
கோயமுத்தூர்.

---

## SALE.
## விற்பனை.

வருஷத்திற்கு இரண்டொரு முறை இரண்டு மூன்று நாள் அல்லது ஒருவாரம் ஸேல் அதாவது விற்பனை என்று பழைய ஸாமான்களை குறைந்த விலைக்குக் கொடுப்பதாக பயிரங்கபடுத்துவது மேல்நாட்டு வியாபாரிகளின் வழக்கம். அப்படி செய்வதினால் லாபமுண்டு. ஆனால் சில ஸாமான்கள் அவசியமானவைகளாக ஏற்பட்டிருக்கின்றன. அவைகளை என்ன விலை கொடுத்தாகிலும் வாங்கத்தான் வேண்டும். அப்பேர்ப்பட்ட ஸாமான்களை ஸேலில் குறைந்த விலைக்குக் கொடுப்பதினால் லாபம் ஒன்றுமில்லை. ஸேல்களினால் லாபமடைவதற்கு மீதிப்பட்ட துண்டு ஸாமான்களாயும் மற்றநாளில் வாங்காத ஸாமான்களாயுமிருக்க வேண்டும். அவைகள் ஸேல்கட்டிட அடாபடியில் விற்றுப்போய்விடும். ஆகையால் பல சரக்கு வியாபாரிகள் தானிய வியாபாரிகள் முதலான சிலர் ஸேல்வைக்க முடியாது. ஸேல் நடத்துவதற்கு ஸாதாரண காரணமென்னவெனில், பழைய ஸாமான்களை விற்றுவிட்டு புதிதாக வரும் ஸாமான்களுக்கு இடம் உண்டாக்கிகொள்வது. அமெரிக்காவில் இன்னொரு விதமான ஸேல் உண்டு. அவைகளுக்கு "ரெயினிடே ஸ்பெஷல்" அதாவது மழை நாள் ஸேல் என்றுபேர். மழைநாள்களில் ஜனங்கள் வெளியே போவதில்லை, ஆதலால் கடைக்காரர்களுக்கு அந்த நாள்களில் மற்ற நாள்கள் மாதிரி வியாபாரம் ஆகிறதில்லை. அதற்காக அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், கடை திறக்கும்போது மழை யிருக்கிறநாள்கள் ஸேல்ஸ் நாள்களாக பாவிக்கிறோம். அன்றயதினம் ஸாமான்கள் மற்ற நாள்களில்விட மலிவாகக் கிடைக்குமென்று விளம்பரம் செய்கிறார்கள். அநேக நாள்களில் அந்தமாதிரி மழை பெய்யும் என்கிற சங்கையிருந்தால் திங்கிட்கிழமையோ அல்லாது வெள்ளிக்கிழமையோ ஏதாகிலும் ஒருநாள் குறிப்பிட்டு அந்த நாளில் கடைதிறக்கும்போது மழைபெய்தால் ஸேல்ஸ் நாள்கள் என்று ஏற்படுத்தலாம். ஸேல்ஸ் நடத்தப்படுமென்று பயிரங்கப்படுத்துவதுடன் இன்ன ஸாமான்கள் அன்றயதினம் விற்கப்படுமென்பதையும் அவைகளின் ஸாதாரண விலையையும் நோட்டீஸ்களில் பயிரங்கபடுத்துவது உத்தமம்.

## THE HORSE'S PRAYER

BY
S. R. ANANTANARAYANA AIYAR.

### குதிரையின் பிரார்த்தனை.

"அன்று கொள், நின்றுகொள், என்றுங் கொள்ளாதே" என்ற பழமொழி ஸாதாரணமாக நம்முள் வழங்கிவருவது அனேகருக்குத் தெரியும். இதன் தாத்பர்ய மென்னவென்றால், விலைக்குக் கிடைக்கும் சரக்குகளில் பசுமாட்டை, கண்டவுடனே வாங்கி விடவேண்டும், புதிய வஸ்திரங்களை தாமதித்து வாங்கினவரையில் லாபம், குதிரையை வாங்குவதினால் நஷ்டமே யாதலால் அதை யென்றும் வாங்கக்கூடா தென்பதாம். இதனாலே குதிரையை வாங்குவோ ரெல்லாருமே நஷ்டமடைவாரென்று ஊஹிக்கக்கூடாது. குதிரையைப் பாதுகாப்பது லகுவான கார்யமல்லவென்றும், அதைப் பேணுமுறையை யறிந்தவர்தான் அதை வாங்குவதற்குத் தகுதியுடையவ ரென்றும், மற்றயோர்கள் வாங்கினால் நஷ்டமடைய நேரிடு மென்பதுமே, இதன் கருத்தாகும். வாஸ்தவத்தில் குதிரையைக் காப்பாற்றுவது கஷ்டமான கார்யந்தான். அதற்கு வ்யாதி வந்தால் அது வ்யாதிநீங்கிப் பிழைப்பதும் அரிது. ஆயினும் குதிரைகளை யுடையவர் அதைச் சிறிது புத்திசாலித் தனத்துடன் நடத்திவந்தால் அவர்கள் நஷ்டமடைய ஹேதுவிராது. குதிரையும் வ்யாதி முதலானவைகளுக்கு உள்ளாகாமல் ஸுகமாகவிருக்கும். ஆகவே, குதிரையை எவ்விதம் நடத்தவேண்டும்? என்கிற கேள்வி உண்டாகிறது. இதற்கு பதில் கீழே வரைந்திருக்கும் குதிரையின் பிரார்த்தனையில் இருக்கிறது. இந்த பிரார்த்தனையானது கெட்டிக் காகிதங்களில் தடித்த எழுத்துகளில் அச்சிடப்பட்டு அமெரிக்காவில் நியூ யார்க்கிலும் போஸ்டனிலும் முனிஸிபல் லாயங்களில் குதிரைக்காரர்களுக்கு உபயோகமாகும்படி மாட்டப்பட்டிருக்கிறது. நம்மவரில் தமிழ் தெரிந்தவர்களுக்கு அந்த பிரார்த்தனையின் தமிழ் மொழிபெயர்ப்பு உபயோகமாகலாம்.

### குதிரையின் பிரார்த்தனை.

"என் எஜமானே, என்னுடைய பிரார்த்தனையைக் கேளும்.

எனக்குத் தீனிபோடும், தண்ணீர் காட்டும், என்னைப் பாராட்டும், தினமும் என்னுடைய வேலை தீர்ந்தவுடன் நான் தங்குவதற்கு நிழலுள்ள ஒரு இடமும், சுத்தமும் முறமுறப்புமான ஒரு படுக்கையும் கொடும். நான் ஸுகமாகப் படுத்துக்கொள்வதற்கு விசாலமான ஒரு லாயமும் திட்டம் செய்யும்.

எப்பொழுதும் என்னிடம் சாந்த ஸ்வபாவமுள்ளவராகவிரும். என்னோடு அடிக்கடி பேசும். கடிவாளத்தினால் எனக்கு எவ்வளவு ஸந்தோஷ முண்டாகிறதோ அவ்வளவு ஸந்தோஷம் தங்களது குரலினாலுண்டாகிறது. எனக்கு அடிக்கடி செல்லங்காட்டும். இதனால் தங்களுக்கு உழைப்பதில் த்ருப்தியுள்ளவனாகவும், தங்களிடம்ப்ரீதியுள்ளவனாகவுமாகிறேன். மேடேறும் பொழுது கடிவாளத்தைப் பரபரவென்று இழுக்காமலும் குரடாவினால் அடிக்காமலுமிரும். எனக்குத் தங்களது கருத்து இன்னதென்று தெரியாதிருக்கையில் என்னை அடித்தாவது, குத்தியாவது, காலினால் உதைத்தாவது, உபத்ரவம் செய்யாதேயும். நான் தங்கள் கருத்தை யுணரும்வரை பொறுமையாயிரும். தங்களது இஷ்டப்படி நான் நடவாவிட்டால், என்னைக் கவனித்துப்பார்த்து, என்னுடைய ஜேணத்திலாவது, கால்களிலாவது ஏதேனும் பிசகுண்டா வென்று பாரும்.

எனக்குக் கட்டியிருக்கும் வார்களை நெருக்கிப் பிடிக்காதேயும். அப்படிப் பிடித்தால் எனக்குத் தலையை யசைக்க இயலுவதில்லை. ஆகையால் என் தலையை என்னிஷ்டப்படி யசைக்க இடங்கொடும். நான் அப்புறம் இப்

புறம் பார்க்காம லிருக்கும்படி எனக்குக் கண் மூடிகள் போடவேண்டுவது அவசியமென்று பட்டால், அவைகளைப் போட்டுவிடும். ஆக்ஷேபமில்லை. ஆனால் அவைகள் என் கண்களில் அழுந்தாமல் மாத்திர மிருக்கட்டும்.

என் சக்திக்கு மீறின பாரத்தை இழுக்கும்படி என்னை ஏவாதேயும். மழையில் நனையும்படி என்னைக் கட்டியும் வைக்காதேயும். எனக்கு செவ்வையாய் லாடங்கட்டிவைவும். நான் தீனிகொள்ளாம லிருக்கையில் என் பற்களைப் பரிசோதித்துப்பாரும். அவைகளில் ஏதேனும் புண்கள் உண்டாயிருக்கலாம். அவை ஸஹிக்க முடியாதவை யென்பது தங்களுக்கே தெரியும். என்னை லாயத்திற் கட்டும்போது என் தலையை ஸ்வபாவத்துக்கு விரோதமாகக் கட்டாதேயும். என் வாலையும் கத்தரிக்காதேயும். வாலைக் கத்தரித்தால் ஈ கொசுகு முதலியவற்றை ஓட்டுவதற்கு ஏற்பட்ட ஸாதன மில்லாமற் போகிறது.

எனக்கு இன்னபொழுது தாகமாகிறது என்று சொல்ல இயலாது. ஆகையால் எனக்கு அடிக்கடி சுத்தமான குளிர்ந்த ஜலம் கொடும். வெயிலினால் நான் உபத்ரவப்படாமலிருக்கவேண்டிய ஏற்பாடுகள் அனைத்தையும் செய்யும். நான் குளிரில் நின்றுகொண்டிருக்கையில் எனக்கு ஒரு போர்வைபோடும். நான் வேலை செய்யும்போது எனக்கு இந்தப் போர்வை அவசியமில்லை.

மிகவும் ஆறி உலர்ந்துபோன தீனியைத் தின்னும்படி என்னை நிர்ப்பந்தம் செய்யவேண்டாம். எனக்குக் கொடுக்குமுன் தீனியை அடுப்பில் வைத்தோ அல்லது தங்களது கையில் தேய்த்தோ சிறிது சூடேற்றிக்கொடும்.

தாங்களிட்ட வேலையை ஸந்தோஷமாகச் செய்ய முயலுவதே எனக்கு ப்ரியம்: நான் தங்களுடைய கட்டளைகளை யெதிர்பார்த்து அஹோராத்ரம் பொறுமையுடன் நின்றுகொண்டிருப்பதே இதற்குப் போதுமான ஸாக்ஷி. முடிவில் நான் செய்துகொள்ளவேண்டிய ப்ரார்த்தனை யொன்றுண்டு. அதாவது, நான் திடங்குறைந்து வேலை செய்வதற்கு இயலாமல் வ்ருத்தாப்ய தசையடையுங் காலத்தில் பசியினாலும் குளிரினாலும் வருந்தும்படி என்னைத் துரத்தி விடாதேயும். அல்லது க்ரூரஸ்வபாவமுள்ள வேறொருவனுக்கு விற்றுவிடாதேயும். அவன் என்னைப் பட்டினிபோட்டு என் ப்ராணனைச் சிறுகச்சிறுக வாங்கிவிடுவான். ஆதலால் என் எஜமானே! அக்காலத்தில் என்னை அதிக ப்ரீதியுடன் பராமரித்துவாரும். கடவுளும் தங்களுக்கு இஹபரஸௌகங்களைக் கண்டிப்பாய்த் தருவர். லாயத்திற் பிறந்த லோக ரக்ஷகரான யேசுகிறிஸ்து பகவானது பெயரால் இந்த ப்ரார்த்தனையைத் தங்களுக்கு ஸமர்ப்பிக்கிறேன். இந்தக் கடைசி வார்த்தையினால் நான் கிறிஸ்து பகவானது நாமத்தை அவமர்யாதையுடன் உபயோகித்ததாகக் கருதக்கூடாது."

எஸ். ஆர். அநந்தநாராயண ஐயர்.

---

## CANVASSING FOR NEWSPAPERS.

BY

A CANVASSER.

### வர்த்தமானப் பத்திரிகைகளுக்கு சந்தாதார்கள் சேர்ப்பது.

பொதுவாய் கான்வாஸிங் என்றதைப்பற்றி நாம் ஒருமுறை நமது பத்திரிகையின் 1910-ம் வருஷத்து ஜூன் மாஸத்து ஸஞ்சிகை வாயிலாக ஸாங்கோபாங்கமாக ஒரு வியாஸம் வரைந்திருக்கிறோம். அப்போது கான்வாஸிங் மற்ற கௌரவ அலுவல்களைப்போல் கௌரவம் பெற்றதேயாகும் என்றும், ஆனால் மற்ற அலுவல்களைவிட கஷ்ட முள்ளதென்றும் கான்வாஸிங் அலுவலை ஸரிவரச் செய்ய கல்வி கேள்விகளில் நன்றாயறிந்தவனாக விருக்க வேண்டியதுடன், உலக நடைகளைத் தீவரமாக

அறிந்தவனாகவு மிருக்கவேண்டு மென்று சொன்னோம். பிரஸ்தாபத்தில் நாம் வர்த்தமானப் பத்திரிகைகளுக்குச் சந்தாதார் சேர்க்க வேண்டிய ஏஜண்டுக்கோ கான்வாஸருக்கோ வேண்டிய அம்சங்கள் இன்னின்னவை யெனப் பிரஸ்தாபிப்போம்.

இந்தியாவில் வர்த்தகம், கைத்தொழில், வியவஸாயம், பத்திரிகைகள் முதலானவைகளை இங்கிலாந்து, அமெரிக்கா, ஜர்மனி, ப்ரான்ஸ் முதலான அந்நிய நாடுகள் நடத்திவரும் விதங்களைப் பார்த்து நடத்துகிறவர்களாக விருக்கிறோம். மேலே சொல்லிய அந்நியர்களோ மேற்சொல்லிய விஷயங்களைத் தீவரமாக நடத்திவர பல நூற்றாண்டுகளாக அனுபோகப் பட்டவர்கள். நாமோ சென்ற 40, 50 வருஷங்களாக அவர்களைப் பார்த்து மேற்கண்ட விஷயங்களை நடத்த ஆரம்பித்திருக்கிறவர்கள். அந்நியர்களைப்போல் விமர்சையுடன் மேற்கண்ட விஷயங்களை .நம்மால் நடத்த முடியவில்லை யென்று நாம் மனச் சலிப்படைவது உசிதமல்ல. நாம் அவர்களைப்போல் முக்கியமாய் சாஸ்திரியக் கல்விகளை ஸாங்கோபாங்கமாய்க் கற்றறியவில்லை. இப்பொழுதுதான் அவைகளைக் கற்றறிய அவாக்கொண்டு பிரதம சிக்ஷை பெற ஆரம்பித்திருக்கிறோம்.

ஆகவே, இந்த ஆரம்ப தசையிலிருக்கும் நம்மை நம்மவர்களே கிஞ்சித்தேனும் யோசியாமல் பத்திரிகைகளை நன்றாய் நடத்தத் தெரியவில்லை, கைத்தொழிலை நூதன முறைப்படி நடத்தத் தெரியவில்லை, என்று குறைகூறி வருகிறார்கள். அப்படியாகக் குறைகூறுகிறவர்கள் அந்நியதேச எழுச்சிகள் எவ்வாறாக முன்னுக்கு வந்தனவென்று சரித்திர பூர்வமாய்க் கண்டறியாதவர்களாவார்கள். பிரஸ்தாப கான்வாஸிங் தொழிலும் அந்நியர்களைப் போல் நம்மவர்கள் நடத்திவரவில்லை யென்று சொல்லலாம். மற்ற விஷயங்களைப்போல் இந்த கான்வாஸிங் வித்தையையும் நாம் சில ஆண்டுகளாகத்தான் அந்நியர்களைப் பார்த்து நடத்திவருகிறோம். அந்நிய தேசங்களில் ஒவ்வொரு தொழிலையும் அப்பியஸித்து நற்சாட்சிப் பத்திரம்பெற தொழிற்சாலைகளுண்டு. அப்படியான பற்பலதொழிற்சாலைகளில் ஜனங்கள் அமர்ந்து தொழில்களைக் கற்றுத் தேர்ச்சிபெற்று வெளியேறுவார்கள். இந்தியாவிலோ அப்படியான தொழிற்சாலைகளில்லை. ஆகவே நம்மவர்கள் அவைகளைக் கற்றுவர அவகாசமும் இல்லை. இந்த ஸ்திதியில் கான்வாஸிங் போன்ற வேலைகளுக்குத் தகுந்த ஆள்கள் வேண்டுமானால் அகப்படுவது கஷ்டமாக விருக்கிறது. நூதனமாகக் கம்பெனி வைப்பவர்களோ அல்லது பத்திரிகைகள் நடத்துகிறவர்களோ அவரவர்கள் வேலைகளை விருத்திசெய்ய விரும்பி ஏஜண்டுகளைத் தேடினால் தக்க ஏஜண்டுகள் கிடைப்பதில்லை. தொழிலொன்றும் அகப்படாதவர்கள் மரண பண்டிறகோ பத்திரிகைகளுக்கோ அல்லது கம்பெனிகளுக்கோ கையொப்பம் சேற்க லாயக்குள்ளவர்களாகக் கிளம்பி விடுகிறார்கள். தொழில் ஸ்தாபகர்களும் கான்வாஸிங் என்றதில் நூதனர்களாகவே இன்னின்னார் பொருத்த முள்ளவரென்று கண்டறிய முடியாமல் கண்டவர்களை மேற்படி வேலையில் அமர்த்தி விடுகிறார்கள். அன்றி தொழில் ஸ்தாபகர்கள் ஸ்தாபிக்கும் தொழில்களுக்குத் தக்கவாறு ஆரம்பத்திலேயே அவரவர்கள் தொழிலைப்பற்றி பத்திரிகைகளில் பிரஸித்தி செய்யவும் ஏஜண்டுகள் நியமிக்கவும் இன்னம் இவைபோன்ற அவசியச் செலவுகளுக்கு திட்ட ஜாபிதா தயார் செய்துகொண்டு அந்த திட்டத்திற்குத் தக்கபடி மேற்கண்ட அம்சங்களில் செலவுசெய்து வரவேண்டும். தகுந்த கான்வாஸிங் ஏஜண்டு தேவையானால் அவனை நல்ல சம்பளத்தில் அமர்த்தி வெளியே போகச் செய்யவேண்டும். தொழில் நடத்து

வதில் அந்நியநாட்டு முறைகளை அனுஸரித்தால் செலவு விஷயங்களிலும் அவர்களைப்போல் தொழில்களுக்குத் தக்கவாறு செலவு செய்யப் பின் வாங்கக்கூடாது. அன்னியர்கள் ஒரு தொழிலை நடத்த முன்வந்தால் அவர்கள் சில வாண்டுகளுக்கு அந்தத் தொழிலிலிருந்து லாபம்பெற வேண்டுமென்று யோசியாமலே திரவியத்தைப்பாராமல் பலமாய் வாரி யிறைப்பார்கள். பின்னால் அப்படியாக வாரியிறைத்த மலைபோன்ற பொருளை சன்னம்சன்னமாக நாளாவட்டத்தில் பொறுக்கி அநேக ஆண்டுகளில் அநேகம்மலைகள் சேர்ந்து குவியல்களைச் சேர்த்து விடுவார்கள். உதாரணமாக தேயிலை வியாபாரி தன் தேயிலை பிரபலப்பட வேண்டுமென்று எப்படி ஜன ஸமூகங்கள் தேயிலைப் பானம் செய்துவர முதல் முதல் அப்பியாசப் படட்டுமென்று லக்ஷம் கோடிக்கணக்காய் விலை அன்றி தேயிலை பொட்டணங்களை கண்டவர் கைகளில் எல்லாம் வாரிவாரிக் கொடுப்பானோ, அப்படியாக நூதன மார்க்கங்களில் ஜனங்கட்கு ருசி உண்டுபண்ண வர்த்தமானப் பத்திரிகைகளை சிற்சில ஸமாஜங்களுக்கு இனாமாகக் கொடுத்து அவைகளை வாசிக்கும் பழக்கங்களுக்கு அவர்களைக் கொண்டுவரவேண்டும். நம்மவர்களுக்கு இப்பொழுது காபி, டி, பானமில்லாமல் எப்படிப் பொழுது போவதில்லையோ அவைபோல் ஜனங்கள் மனதில் பத்திரிகை பாராமல் பொழுது போவதில்லை யெனப் படவேண்டும்.

பத்திரிகைகளுக்குச் சந்தா சேர்க்கும் ஏஜண்டுக்கு முக்கியமாய் லோக வர்த்தமானங்கள் நிருடியாகத் தெரிந்திருக்கவேண்டும். அவன் நல்ல வாக்மியாக விருக்கவேண்டும். படபட.வென்று சுருசுருப்புள்ளவனாக விருக்கவேண்டும். அவன் பேசவாரம்பிக்கும்போதே ஜனங்கள் அவன் சொல்வதைக்கேட்டே தீரவேண்டுமென்று நினைக்கும்படியான பேச்சுக்காரனாக விருக்கவேண்டும். ஆடை பாதி ஆபரணம் பாதி என்றதைப்போல் அவன் எப்போதும் நல்ல உடுப்புத் தரித்திருக்கவேண்டும். பேசும்போது அதிகப் புறளிக்காரனாகக் காணப்படும்படி பேசவும் கூடாது. ஜனங்கள் மதிப்புக்கு லாயக்கான பேச்சாக விருக்கவேண்டும். ஏஜண்டு உத்தேசிக்கும் காரியத்தில் சித்திபெற வேண்டுமானால் சிலரைத் தனியாகப் பார்க்கவேண்டியதாக விருக்கும். சிலரை ஸமாஜத்தில் பார்க்கவேண்டியதாகவிருக்கும். அவைகளைத் தான் இடம் பொருள் ஏவல்களைக்கண்டு ஸமயோசிதம் போல் நடந்துகொள்ள வேண்டியவைகளென்று சொல்லுவது. ஜனங்களிடம் எப்போதும் மரியாதையா யிருக்கவேண்டும். மரியாதைகொடுத்து மரியாதை வாங்கவேண்டும். சிறுமீன்விட்டு, பெருமீன் அடைவதுபோல் இனாமாகப் பத்திரிகைகள் கொடுக்கு மிடங்களில் பத்திரிகைகளைக் கொடுக்க ஏஜண்டுகளை அனுமதிக்கவேண்டும். ஏஜண்டு ஸமாசாரப்பத்திரிகையின் உபயோகங்களை இன்னின்னவையென்று ஜனங்களுக்கு எடுத்துச் சொல்ல வல்லவனாக விருக்கவேண்டும். வெளியூர்களுக்குப் போகும்போது ஆங்காங்கு நேரிடும் அபூர்வ ஸமாசாரங்களைப் பத்திரிகைகளுக்கு எழுதும் சக்தியுள்ளவனாக விருக்கவேண்டும். முக்கியமாய் அந்நியர்களால் ஆளப்படும் நமக்கு தேச பாஷாப்பத்திரிகைகள் அவசியம் என்பதையும் கவர்ன்மெண்டுக்கும் பிரஜைகளுக்கும் மத்திய ஸ்தானத்தை பத்திரிகைகள் வகித்து கவர்ன்மெண்டார் பிரஜைகளுக்குச் செய்கிற விஷயங்களையும் பிரஜைகள் கவர்ன்மெண்டாரிடம் எதிர்பார்க்கும் விஷயங்களையும் அந்நிய தேச அதிசய வர்த்தமானங்களையும் நவீன சாஸ்திரியப்பயிற்சிகளை அப்போதைக்கப்போது எடுத்துச் சொல்லுகிறவைகளானதால் பத்திரிகைகள் ஒவ்வொருவராலும் கையாளப்படவேண்

டியது அவசியமாகுமென்று ஏஜண்டு ஜனங்களுக்கு வற்புறுத்தவேண்டும். ஸமயம் வாய்த்தால் ஜனகோஷ்டிகளில் லோகோபகாரமான பற்பல விஷயங்களைப்பற்றி வாசாம கோசரமாகப் பிரஸங்கம் செய்ய சக்தியுள்ளவனுகவு மிருக்கவேண்டும்.

இப்படியாக எல்லா விஷயங்களிலும் சக்தியுள்ள ஏஜண்டை நல்ல சம்பளம் கொடுத்து பத்திரிகா நாயகன் வெளியனுப்பினல் அவனுல் நல்ல லாபம் பெறுவதோடு பத்திரிகைக்கு நற்கியாதியு முண்டாகும். ஆகவே மேற்சொல்லிய விஷயங்கள் பொருந்தியவன்தான் தகுந்த பத்திரிகா ஏஜண்டாவானென்போம்.

ஒரு கான்வஸ்ஸர்.

---

## APATH SAHAYAN.

BY

T. K. RAMABHADRAN.

## ஆபத் ஸஹாயன்.

இது பாம்புக்கடி, விஷநாய்க்கடி, தேள் கொட்டு முதலிய ஸகல விஷங்களையும் நிர்மூலமாக்கி நல்ல ஸௌகத்தைக் கொடுக்கக்கூடிய ஸஞ்சீவிக் கொப்பான ஔஷதம், என்று ப்ரான்ஸ் தேசத்தின் பிரதான பட்டணமாகிய பாரிஸ் நகரத்தில் வஸிக்கும் ஒரு யோகீச்வரர் சொல்லுகிருர். நம் நாட்டு ஜனங்களும் இதை அறிந்துகொண்டால், அதிக நன்மை உண்டாகு மென்றும், பரோபகாரமாகு மென்றும், எனக்குத்தோன்றுவதால் அடியில் இதை சற்று விஸ்தரிக்கிறேன்.

கலைமான் கொம்பைக் கொண்டுவந்து, விரல் நீளமும் விரல் கனமும் இருக்கும்படி துண்டு துண்டாய் நறுக்கி, 5 அவுன்ஸ் நிறுத்துக்கொண்டு, 4 படி ஜலம் கொள்ளத்தக்க (வாய் அகன்ற, ஒரு புதிய மட்பாண்டத்தில் அரைவாசி ஆற்று மணலைக்கொட்டி, ஷை மான் கொம்புத் துண்டுகளை அந்த மணலுக்கு நடுவில் வைத்துப் பானைக்குள் முக்கால்வாசி ஜலம் ஊற்றி, பிறகு, கருவேலம்பட்டை 1 அவுன்ஸ்; அன்னபேதி 2-திராம், ரூபர்ப் 2-திராம் ஆகிய இவைகளை நன்ருயிடித்து, அந்தப் பானையிற்போட்டு அடுப்பில்வைத்து எரித்து, நீர் வற்றி ஷை மான் கொம்புத்துண்டுகள் கறுப்பாகிறவரையில் ஒரு கரண்டியினுற் கிளறிக்கொண்டேயிருக்கவேண்டும். ஷை மான் கொம்புத்துண்டுகள் கறுப்பானவுடனே பானையைக் கீழே யிறக்கி, ஆறிய பின்பு, ஷை கொம்புகளை எடுத்து ஒரு துண்டோடு மற்ருெரு துண்டை நன்ருயத் தேய்க்கவேண்டும். அந்தத்துண்டுகள்யாவும் பாலிஷ் ஆகிறவரையில், அதாவது மிருதுவாய்ப் பளபளப்பாகிற வரையில், தேய்த்து முலைப்பால் அல்லது சீமை திராக்ஷாரஸக் காடியில் அரைமணி நேரம் அவைகளை முழுக வைத்துப் பிறகெடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

விஷந்தீண்டிய வுடனே, கடிவாயில் இந்த மான் கொம்புத் துண்டுகளில் ஒன்றை வைத்தால் உடனே அதை மான் கொம்புத் துண்டு பிடித்துக்கொண்டு, விஷம் முழுவதும் உறிஞ்சியபிறகுவிட்டுவிடும. அதன்பின அக்கொம்பை எடுத்து முன்போலவே முலைப்பாலில் அல்லது காடியில் அரைமணிநேரம் முழுகவைத்தால், அவ்விஷத்தைக் கக்கி விடும்.

சிலந்திக் கட்டிகளிலுள்ள சீழ் துர்நீர் முதலியவைகளை எடுப்பதற்கு, கட்டி பழுத்தபிறகு கொஞ்சம் கீறி விட்டு இந்தக் கொம்புத்துண்டை வைத்தால் அச்சீழ் துர்நீர் முதலியவற்றை உறிஞ்சிவிடும். அதன்பின், முன் போலப்பாலில் ஊறவைத்துச் சீழ் அல்லது துர்நீரைக் கக்கவைக்கவேண்டும். இந்தக் கொம்பைத் தண்ணீர்வார்த்து இழைத்து உள்ளுக்குக் கொடுத்தால் காக்கைவலி, குதிரைவலி முதலிய ஸகல வலிகளையும் நிர்மூலமாக்குவதோடு, வயிற்றிலுள்ள பூச்சி புழுக்களைப் போக்கி, தலை நோயையும் ஸௌக்கியமாக்குமென்று முற்கூறப்பட்டுள்ள யோகீச்வரர் மிகவும் நிச்சயமாகச் சொல்லுகிருர். இது மிகவும் ஸுலபமான பாகமானதால் யாவரும் செய்து பரீக்ஷித்துப் பார்க்கலாம்.

டி. கே. ராமபத்ரன்.

## MANURING.

### எரு விடுதல்.

களர்பூமி :—களர்பூமி உவர், சுக்கான், என இருவகைப்படும். அவைகளில் உவர்க்களர் பனே, தென்னே, இவைகளின் மட்டை, நார் இவைகளே மக்கச்செய்வதாலும், புளியமரத் தின் தழை, கொட்டை, கோது, இவைகளே மக்கச் செய்வதாலும், தண்ணீரை அடிக்கடி பாய்ச்சிக் கிளறி, வடிக்கட்டுவதாலும், மாறும். பிறகு, அதின் மேல் மனுஷர் மலத்தைப் போட்டும், பசுந்தாள் உரவித்துக்களே விளேவித்தும் உழுது பயிரிட, நல்ல வளமுள்ள பூமியாக மாறும்.

சுக்கான் களருக்கு மணலடித்தும், அவுரி, வரகு, கேழ்வரகு இவைகளின் தழைகளேயும், மஞ்சள், சேம்பு, இவைகளின் தழைகளேயும், மடிக்கச்செய்து உழுதும், இஞ்சி, கேழ்வரகு போன்ற சுண்ணும்பு மிகுதியாய் உட்கொள் ளும் பயிர்களே மாறி மாறி இரண்டு மூன்று வருஷங்களுக்கு ஸாகுபடி செய்தும்,வரவேண் டும். இப்படிச்செய்து வந்தால் களர் நீங்கி செய் கால் நிலமாய் வளம் தரும்.

கலவைப் பயிர்:—சில நிலங்களில் உரத்துக் குத்தனியே ஸாகுபடி செய்வதை விடுத்து கல வைப்பயிர செய்கிறுர்கள். அது நிலத்துக்கு உரம்வேண்டி யல்ல; ஸவான்தாரர்களின் வரும் படிக்காக. இப்படிச் செய்யும் கலவைப்பயிர் களாவன :—1 கேழ்வரகு, உளுந்து, கொட் டைமுத்து 2 கேழ்வரகு, மணிலா. 3 மணி லா, துவரை 4 எள்ளு, அவுரி. 5 எள்ளு, கடுகு, அவுரி. 6 எள்ளு மணிலா. 7 வரகும் துவரையுமாகிய பலவகைச் சேர்க்கை. இவை களேச் செய்யும் போது நிலவளம், நீர்வளம், பயிரின் ஸ்வபாவம் இவைகளே யோசித்துச் செய்தால், தீனி, தண்ணீர் இவைகளின் குறைவைத் தாங்கக் கூடியதாயும், பலன் குறை வுபடாமலும் இருக்கச் செய்யலாம்.

பரவலாக வேர் செல்லும்பயிரையும் ஆழ மாக வேர்செல்லும் பயிரையும் சேர்த்துச் செய்வது, லாபகரமாயும், மேற்சொல்லிய குணங்களே உடையதாயும் இருக்கும். இத ற்கு, துவரைப்பயிர் முக்கியமானது. ஷை பயி ரின் தழை பூமியில் உதிர்ந்து மேல்பூமிக்கு எருவாகிறது. வேர் ஆழமாய்ச் சென்று அடி மண்ணிலுள்ள ஆகாரத்தை மேலே கொண்டு வராததும், ஆகாயத்திலுள்ள உப்புவாயுவை, ஏராளமாக சேகரித்து மேல்பூமியில் வைத்த லுமாகிய இருவகை முக்கிய குணங்களே உடையது. தவிரவும், ஆழமாய் கலப்பை உழு வதற்கும் ஸாதனமாகிறது. ஆகையால் இதைக் கலவைப்பயிராக எந்த வித்துடனும் உபயோ கிப்பது நலம். தவிர தாள், மாற்றுப்பயிருக்கும் இது உதவும். மேலே சொல்லியபடி பரவல் வேர், ஆழவேர் உள்ளதை மாறி மாறிப்பயி ரிடுவது வழக்கம்.

அதனுடன் இந்திர அநிந்திரவஸ்துக்களே உணவாகக் கொள்வதில் வித்தியாஸமுள்ள பயிர்களே, மாறி மாறிப் பயிர் செய்யவேண்டும். ஒரே விதப்பயிரிடுவதால் ஒருவித உணவே அதிகமாக நிலத்தினின்று எடுக்கப்பட்டு நில வளம் குறைந்து விடும். உரச்செலவு அதிக மாகும்.

புத்திமான்களான கிருஷிகர்கள் விலையுயர் ந்த, எருக்களேவாங்கி நிலத்தில் போடுவதை விட, பசுந்தாளின் "உரமாக" நிலத்தில் பயி ரிட்டாவது, காடுகளினின்று சேகரித்தாவது, ஸமயோசிதமாய் உபயோகப்படுத்தி வருவதே, நல்ல வகையென்றும், சிலாக்கியமென்றும், நீடித்தகாலம் விரயமில்லாமல் செய்துவரக் கூடிய தென்றும், பூமிக்கு மிக்க தகுதியான தென்றும் அனுபவத்தில் காண்பார்கள்.

## MAKING A FOOTBALL.

BY

G. TATHACHARI, B.A.

### கால் பந்து செய்தல்.

தற்கால முறைப்படி கல்வி கற்பிக்கப்படும் ஒவ்வொரு கலாசாலையிலும் தேகப் பயிற்சிக்காகப் பிரத்தியேகமான இடமும் காலமும் ஏற்பட்டிருக்கின்றன. தினந்தோறும் பாடங்கள் முடிந்தவுடன் அந்திவேளைகளில் மாணுக்கர்கள் தேகாப்பியாசத்துக்காகத் தங்கள் தங்களுக்கு இஷ்டமான விளையாட்டுக்கள் ஒன்றில் போது போக்குவார்கள். க்ரிகெட், டெனிஸ், ஹாக்கி, பாட்மிண்டன், புட்பால் முதலிய பல விதமான விளையாட்டுக்கள் இருப்பினும், மாணுக்கர்கள் வெகுவாக விரும்புவது கடைசியாகக் கூறப்பட்ட கால் பந்து விளையாட்டைத்தான். அவ்விளையாட்டைப்பற்றி நாம் இங்கு விவரிப்பதாகவில்லை. அதில் உபயோகிக்கப்படும் பந்து உண்டாகும் விதத்தைப் பற்றி மட்டுமே சொல்லுவதாக எண்ணம்.

கால் பந்து ஆடுபவரில் பெரும்பான்மையோருக்கு, அப்பந்து எப்படி செய்யப்படுகிறதென்பதும், எதனுல் செய்யப்படுகிறதென்பதும், தெரியாத விஷயங்களாம். பெரிய மேளம் ஒன்றைத் தட்டியதும் சப்தம் கிளம்பக்கண்டு, அச்சப்தம் எங்கிருந்து வந்ததென்று அறியும்பொருட்டு, அம்மேளத்தைக் கிழித்துப்பார்த்த சிறுவன் சரித்திரம் நமக்கு ஞாபகத்துக்கு வருகிறது. இவ்விதமான யோசனைகூட, இந்தக் கால் பந்து ஆடுபவர்களுக்கு வருவதில்லை. கால் பந்தில் அடங்கியிருக்கும் வஸ்து என்னவென்று அவர்கள் சிந்திப்பதில்லை. அவர்கள் செய்யவேண்டியதெல்லாம் விளையாடுமிடம் சென்று முறைப்படி பந்தை உதைத்துத் தள்ளவேண்டியதே யென்று எண்ணுகிறுர்கள். இந்த அசிரத்தைக்குக் காரணம் இன்னுமொன்றுண்டு. நமக்கு ஸர்வ ஸாதாரணமாகத் தோன்றும் விஷயங்களை நாம் கவனித்துப் பார்ப்பதில்லை யல்லவா? இது போலவே, இவ்விளையாட்டும் ஸர்வ ஸாதாரணமாகிவிட்டதால் இதைப் பற்றிக் கவனம் செலுத்துவோரில்லை. ஆனதுபற்றியே, ஒரு தோல் பந்தாகமாறி விளையாட்டிடத்துக்கு வருவதில் செலவாகிற முயற்சியும் சாமர்த்தியமும் இவ்வளவென்று தெரியாமல் போகிறது.

இனி, கால் பந்தின் ஜீவ சரிதையை விசாரிப்போம்: பந்தின் கதியோ எல்லார் காலாலும் உதைபட வேண்டியதாம். ஆதலால் அதன் மேற்பாகம் இவ்வுதைகளைத் தாங்கும் வண்ணம் கெட்டியாக விருக்கவேண்டும். இதற்குத் தோலைத்தவிர வேறு உயர்ந்த பொருளில்லையாதலால், அதுவே பந்தின் மேலுறையாக உபயோகப்படுகின்றது. கால் பந்துக்கு உபயோகிக்கப்படும் தோல் பசுவின் தோலாம். பசுவின் தோல் என்ற பதத்தில் காளை மாட்டின் தோலும் அடங்கும். நமது நாட்டில் பரிசுத்தமாகக் கருதப்படுகிற ஜீவப்பிராணிகளின் தோலினுல் பந்து செய்யப்படுகிறதென்பதைக் கண்டு நம்மவர் மனங் கூசுவதிற் பயனில்லை. இன்னும் எவ்வளவோ காரியங்கள் இதைப்போலவே நடக்கின்றன. மனங்கூசினுல் பந்து விளையாட்டத்தை நிறுத்திவிட வேண்டும்.

பந்துக்காக உபயோகிக்கப்படும் தோல் ஒரு வருஷம் வரையில் பதனிடும் கிடங்கில் இருக்கும். ரஸாயன முறையால் இரண்டு மாதங்களுக்குள் பதனிடப்படுகிற தோல் நீடித்து நிற்பதில்லை. ஸாதாரணமாக ஒவ்வொரு தோலும் 7 அடி முதல் 8 அடி வரை நீளமும், $6\frac{1}{2}$ அடி முதல் 7 அடி வரை அகலமும், 25 முதல் 30 பவுன் வரை கனமும் இருக்கும். இவ்வளவு கனம் "அளவு" பந்துக்கு அதிகமாதலால், இந்தத் தோலை இரு பிளவாகக்

கிழிப்பார்கள். உரோமப்பக்கத்துத் தோல் பல முள்ளதாகையால் அதை வைத்துக்கொண்டு, தசைப்பக்கத்துத் தோலைத் தள்ளி விடுவது பதிவு. இந்த மேல்தோல் சில நாள்கள் வரையில் ஒருவிதமான பக்குவத்திலிருந்து அழுக்கற்றுச் சுத்தமாகின்றது. தோல் ஈரமாக விருக்கும் போதே அதன் மேடு பள்ளங்களைச் செதுக்கி யெறிந்துவிட்டு மடிப்புகள் இல்லாமல் பதப்படுத்துவார்கள். பாதி உலர்ந்ததும் அதன் மேல் ஒரு விதமான பசையைத்தடவுவார்கள். இப்பசையே, தோலுக்கு உணவாகின்றது. இவ்வாறு சோறு ஊட்டப்பட்டதோலை நன்ருக உலரும்படி தொங்க விடுவார்கள். உலர்ந்ததும் அது கத்தரிப்பதற்குத் தயாராகும்.

கால் பந்தைப் பார்த்திருப்போர்களுக்கு அது சிறு சிறு துண்டுத்தோலினல் தைக்கப்பட்டிருக்கு மென்று சொல்லவேண்டியதில்லை. எலுமிச்சம் பழத்தின்மேல் வரி வரியாக விருப்பதுபோல, இந்தப் பந்திலும் வரிக்குப் பதிலாக தையல் வரிசை இருக்கும். ஒவ்வொரு துண்டுத்தோலும் ஒரு ஆலிலைபோல விருக்கு மென்ருலும், அதைக் கத்தரிக்கும் விதத்தை மட்டும் தொழிற்காரர்கள் ரகஸ்யமாக வைத்துக் கொண்டிருக்கிருர்கள். "அஸோஸியேஷன" பந்து உருண்டை வடிவமாகவும், "ரக்பி" பந்து கோழிமுட்டை வடிவமாகவும் தைக்கப்படுகின்றது.

துண்டுகளைக் கத்தரிப்போன், ஒரு பலகையின் மீது தோலை விரித்துக்கொண்டு வேண்டிய அளவுள்ள ஒரு தகரத்துண்டை அதன் மேல் வைத்து, அத்தகரத்தின் ஓரம் வழியே கத்தியைக்கொண்டு இழுப்பான். உடனே தகரத்துண்டுக்குச் சரியான தோல்துண்டு துணிபட்டு விழும். இவ்விதம் கத்தரிக்கப்படும் துண்டுகளைச் சேர்த்துச் சேர்த்து உள்பக்கம் மேலிருக்கும்படியாக கையினல் தைப்பார்கள். தைத்ததும் பந்தின் மேலுறை தயாராகிவிடும்.

பந்தின் உள்ளே காற்றடைத்து வைத்திருக்கும் பை ஒன்று உண்டு. அது மிக சேர்த்தியான பாரா ரப்பரினல் செய்யப்படுகிறது. மேல் உறைக்காக பசுவின் தோல் எவ்விதமெல்லாம் செப்பனிடப்படுகிறதோ அதைக் காட்டிலும் அதிகமாகவே இந்த ரப்பர் செப்பனிடப்படுகிறது. ஸைகில் வண்டிகளுக்கு "ந்யூமாட்டிக் டையர்" என்னும் காற்றடைக்கிற பட்டை எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் கால் பந்துக்கு மேற்கூறிய ரப்பர் பையாகும். இந்த ரப்பர்பை வெகு பலங்கொண்டதாகச் செய்யப்படும். பந்து செய்வதில் இதில் தான் அதிக செலவு ஆகின்றது. இந்தப் பைக்கு ஒரு மூக்கு உண்டு. அதன் வழியாகக்காற்று உட் செலுத்தப்படும். தோல் பையில் தையல் இடாமல் விடப்பட்டிருக்கும் துவாரத்தின் வழியே இந்த ரப்பர் பையை உள்ளே நுழைத்து, கையந்திரத்தினல் காற்றடைத்து, பின்பு பந்தை நாலாபக்கங்களிலும் தட்டிக் கொடுத்து, உருட்சியில் மேடு பள்ளமில்லாமல் ஸமமாக்குவார்கள். இப்படிச் செய்தானவுடன் விற்பனைக்குப்பந்து தயாராகிவிடுகிறது.

இங்கிலாந்தில் ஜார்ஜ் ஜி புஸ்ஸி கம்பெனியார் தான் கால் பந்து செய்வதில் மிகுந்த பிரபல மடைந்தவர்கள். ஆயிரக் கணக்கான பந்துகள் வருஷ மொன்றுக்கு அவர்களால் விற்கப்படுகின்றன.

கால் பந்து விளையாடுவது முதல் முதலில் ஆங்கிலேயருடைய விளையாட்டாக விருந்தது. இப்போது உலக மெங்கிலும் அது பரவி விளையாடுவோர்க்கும், விளையாட்டைப் பார்க்கக்கூடும் திரள் திரளான ஜனங்களுக்கும் ஆனந்தமளிக்கிறது.

மேற்கூறியது தான் ஒரு உயர்தரப்பந்தின் ஜீவ சரிதையாகும். காலாலுதைபட்டுக் கிழியும் ஒரு பொருளுக்காக எவ்வளவு சிரமம்! எவ்வளவு பொருட்செலவு!

ஜி. தாத்தாச்சாரி.

# SELECTIONS.
# விசேஷத்திரட்டு.

## TOMATO.

BY

T. M. VARADACHARI.

## தக்காளி.

சாதாரணமாய் இக்காய்வர்க்கம் நம் பிரதேசங்களிற் பயிரிடப்படுவதில்லை. தற்காலத்தில், தக்காளிச் செடிகள் பெங்களூரில் அதிகமாய்ப் பயிரிடப்படுகின்றன. நம் நகரில் பெங்களூரிலிருந்து தக்காளிப்பழங்கள் கொண்டுவரப்பட்டு, ஒவ்வொரு பழமும், உருவத்திற்கேற்ப, 2 பை முதல் 6 பை வரை விற்கப்படுகின்றன.

இது குளிர்தேசத்துப் பயிராயிருந்தபோதிலும் நம் தேசத்திலும் சற்றேரக்குறைய நன்ருய்ப் பயிராகிறது. வெண்டை, கத்தரி முதலியவைகளைப் பயிரிடுவது போல இச்செடியையும் நம் குடியானவர்கள் தோட்டக்கால்களிற் பயிரிட்டால் தக்க பலனை யடைவார்களென்பதற் கையமில்லை.

தக்காளி விதைகள் பெங்களூரில் விதை வியாபாரிகளிடமிருந்து சொற்பவிலைக்குப் பெறலாம். அப்படிப் பெறச் சாத்தியமில்லாதவர்கள், சென்னையில் பெங்ளூர் காய்கறி வகையருக்கள் விற்பவர்களிடமிருந்து, ஒரு நல்ல பழத்தை வாங்கி, விதைகளை யெடுத்துத் தெள்ளிய சாம்பலிற் கலந்து உணர்த்தி யெடுத்துக்கொள்ளலாம்.

விதைகளை நன்ருக எருவிட்ட ஒரு சிறிய பாத்தியில், நிழலில், நாற்றுவிடவேண்டியது. ஐந்து ஆறு தினத்தில் விதைகள் முளைக்கின்றன. அப்படி முளைத்து 15-தினங்களானவுடன் நாற்றுகள் நடவுக்குத் தயாராகின்றன.

8 அங்குலம் சதுரமாயும், ஒரு அடி ஆழமாயும் ஒன்றரையடி தூரத்திற்கொரு குழிவெட்டி, நன்ருக எருவிட்டு, நாற்றுகளை நடவேண்டியது. தினந்தோறும் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சவேண்டிய தவசியம். பயிருக்கு ஈரம் உணராமலிருக்க வேண்டுமேயானுலும் பயிரில் தண்ணீர் தேங்கக்கூடாது. பயிருக்கு அதிக நிழல் வேண்டியதில்லை.

இச்செடி கொடியாக வளருவதன்று. செடிகளாகத்தான் வளர்கின்றன. செடியின் தண்டுகள் அதிநுட்பமானவை. செடிகள் காற்றில் ஒடிந்து ஒன்றன்மேலொன்று கீழே விழுந்து விடாதபடி, செடிகளைத் தாங்குவதற்காக தரைமட்டத்திலிருந்து சுமார் 2 அடி உயரத்தில், மூங்கிற்பத்தைகளால் ஜல்லிப்பந்தல் போடவேண்டும். பந்தலில் ஜல்லித் துவாரங்கள் 5 அல்லது 6 அங்குலம் சதுரமாயிருத்தல் வேண்டும்.

நாற்றுகள் நட்டு, சுமார் 25 தினங்களுக் கப்புறம் செடிகள் பயன்தரவாரம்பிக்கின்றன. முதலில் அவ்வளவு அதிகமாய்க் காய்ப்பதில்லை. நடவு ஆன இரண்டாவது மாதமுதல் மூன்ருவது மாத இறுதிவரை அதிகமாய்க் காய்க்கின்றன. நான்காவது மாதக் கடைசியில் பயனே யில்லையென்று சொல்லும்படியான அவ்வளவு கொஞ்சமாய் காய்க்கின்றன. இன்னும் கொஞ்ச நாளைக்கெல்லாம் செடிகள் பட்டுப்போகின்றன. இச்செடியை, ஏப்ரல், மே, ஜூன், ஜூலை முதலிய உஷ்ண மாதங்களைத் தவிர்த்து மற்ற காலங்களிற் விசேஷமாய்ப் பயிரிடலாம்.

காய்கள் கிச்சிலிக்காய்போன்ற தட்டையான உருண்டை வடிவமுள்ளனவாய், வெளிரான பச்சை நிறமுடையவை. பழங்கள் உதிரம்போற் சிவந்திருக்கும். ஒரு பெரிய டென்னிஸ் பந்து (Tennis ball) அவ்வளவு பெரிதாய் இருக்கும்.

பழங்கள் அதிக ருசியாயிருப்பதுபற்றி அனேகர் சமையல் செய்யாமலே தின்கிருர்கள். பருப்பு சாம்பாரில் சேர்த்தாவதும், அல்லது எலுமிச்சை ரஸம் கலந்து பச்சடி செய்தும் உபயோகிப்பாருமுண்டு.

தக்காளியைக் காய்களாகவே கூட உபயோகிக்கலாம். கத்தரிக்காய்கள் எவ்வெவ்விதங்களி லுபயோகப்படுகின்றனவோ, அவ்வவ்விதங்களிலெல்லாம் தக்காளிக்காய்களும் உபயோகப்படுகின்றன. தக்காளிக்காய் வற்றல் செய்யவும் உபயோகப்படுகின்றது.

தக்காளிப்பழம் தேகத்திற்குக் குளிர்ச்சியானது. இதைப் புசிப்பதனுல் தேகத்திற்கு ஆரோக்கியமே தவிர வேறில்லை.—மாதர் மனோரஞ்சனி.

## INDUSTRIES IN MADRAS.

### சென்னை மாகாணத்தில் தொழில்கள்.

சில தினங்களுக்கு முன்னால் சென்னையிலுள்ள செங்கல்வராய நாய்க்கர் தொழிற் கல்விச்சாலையின் வருஷப்பூர்த்திக் கொண்டாட்டம் நடந்தபோது, ஆனரபில் மிஸ்டர் ஏ. சாட்டர்ட்டன் இந்த மாகாணத்தில் தொழில்களின் நிலைமையைப் பற்றி ஒரு ஸாரமான பிரசங்கம் செய்தார். இந்த மாகாணம் பம்பாய் வெங்காளம் இவைகளைப்போல் பெருந் தொழில்களை ஸ்தாபித்து நடத்தும் மாகாணமல்ல. பம்பாயில் பெரிய பருத்தித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. வெங்காளத்தில் சணல் தொழிற்சாலைகளும் கரிச்சுரங்க வேலைகளும் பெருந் தொழில்களாக நடத்தப்படுகின்றன. அலகாபாத்திலும் பஞ்சாபிலும் இம்மாதிரிப் பெருந்தொழில்கள் இருக்கின்றனவென்று சொல்லலாம். சென்னை மாகாணத்தில் மட்டும் பெருந்தொழில் எதுவும் நடக்கவில்லை. இங்குள்ள ஜனங்களுள் பெரும் முதலாளிகள் இல்லை. அலுமீனியம், க்ரோம்தோல், இவைகள் புதுத்தொழில்கள். நெசவும் அது சம்பந்தமான தொழில்களும் விசைநாடாத்தறி முதலிய உபாயங்களால் முன்னைவிட அதிகமாய் நடக்கின்றனவென்று சொல்லலாம். சுமார் 10,000 நெசவுக்காரர்கள் பழைய மாதிரியான கைத்தறிகளை விட்டுவிட்டுப் புதுமாதிரியான விசைநாடாத் தறியை உபயோகப்படுத்தி, ஒன்றுக்கு ஒன்றரை சம்பாதிக்கிறார்களென்று மிஸ்டர் சாட்டர்ட்டன் சொன்னார். நமது நெசவுக்காரர்கள் விசைநாடாத் தறியை அதிகமாய் உபயோகப்படுத்தி, அவர்கள் கடனாளிகளா யில்லாமல் சிறிது பணமுள்ளவர்களாகும்படியாகச் சங்கங்கள் ஸ்தாபித்துக் கொள்வார்களானால் அவர்களின் நிலைமை ஒருவாறு சீர்ப்படுமென்பதில் சந்தேகமில்லை.

ஆயினும், இந்த மாகாணம் கைத்தொழில்கள் செய்து செல்வம் படைக்கத்தக்கதல்ல. விவசாயமே இங்கு செழிக்கத்தக்க தொழில். ஜனங்களும் முக்காற்பங்கினருக்கு அதிகமாக விவசாயத்தால் ஜீவிக்கிறவர்களாகையால், விவசாயத்தை விர்த்தி செய்வதே ஜனங்களின் முக்கிய ஜீவனோபாயமாகும். இந்த விவசாயத் தொழில் சென்ற பத்து வருஷங்களாக விர்த்தியாகி வருவதைப்பற்றியும், இனிச் சமீப காலத்தில் விர்த்தியாகக் கூடியதைப் பற்றியும், மிஸ்டர் சாட்டர்ட்டன் தைரியமாயும் நம்பிக்கையுடனும் பேசினதைப் பார்த்தால், இந்த மாகாணம் வெகு நல்ல ஸ்திதியை அடைந்து விடுமென்று நம்பக்காரண முண்டாகின்றது. இந்த மாகாணம் இப்படி நல்ல ஸ்திதிக்கு வருவதற்கு சமீபத்தில் மிஸ்டர் சாட்டர்டனுடைய முயற்சியால் விவசாயிகள் அனுஷ்டிக்கும் உபாயமே காரணமெனச் சொல்ல வேண்டியிருக்கின்றது. இந்த மாகாணத்தில் ஏற்கெனவே 500 பம்பிங் ஸ்டேஷன்கள் இருக்கின்றனவாம். அதாவது 500 ஸ்தலங்களில் ஆயில் என்ஜின்கள் உபயோகப்படுத்திக் கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைத்து விவசாயம் செய்யப்படுகின்றது. இந்த எஞ்ஜின்களால் விவஸாயம் செய்யப்படும் பூமி சுமார் 50,000 ஏக்கரா இருக்குமென்று மிஸ்டர் சாட்டர்ட்டன் சொன்னார். இந்த எஞ்ஜினுடைய உபயோகத்தையும் அவைகளால் விவஸாயம் சுலபமாய் நடந்து அதிக லாபம் தருமென்பதையும் விவஸாயிகள் நம்புகிறதற்கு அடையாளமாக விவஸாயிகள் புதிதாய் 40 இடங்களில் இந்த எஞ்ஜின்களை ஸ்தாபிக்கவேண்டுமென்று மிஸ்டர் சாட்டர்ட்டனைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த எஞ்ஜின்களின் ஒத்தாசையைக் கொண்டு 70 அரிசிகுத்தும் தொழிற்சாலைகளும் 70 பஞ்சு சுகிரும் சாலைகளும், 40 பஞ்சு மூட்டையாக்கும் சாலைகளும், பல கரும்புச்சாறு பிழியும் சாலைகளும், பல எண்ணெயாட்டும் ஆலைகளும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. பூமியின் கீழ் ஆழத்தில் நீரோட்டமிருந்து வயல்களுக்கு அதை உபயோகப்படுத்தக் கூடுமென்று விவஸாயிகள் தெரிந்துகொள்வார்களானால் ஆயில் எஞ்ஜின்களின் உபயோகம் அதிகமாகும். பாசனத்துக்கு ஆயில் எஞ்ஜின்கள் உபயோகப்பட்டால் உழுதல் விதைத்தல் களைபிடுங்குதல் முதலிய வேலைகளும் இப்போது கையினாற் செய்யப்படுவதுபோற் செய்யப்படாமல் இயந்திரோபாயங்களாற் செய்யப்படும்.

இப்படி மிஸ்டர் சாட்டர்ட்டன் விவசாயிகளின் ஊக்கத்தைப்பற்றியும் இயந்திரங்களின் உபயோகத்தைப் பற்றியும் விவஸாயமும் அதற்குற்ற தொழில்களும் விர்த்தியாவதைப் பற்றியும் பேசினது அனைவருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கும். ஆனால் இதில் ஒன்றுமட்டும் நாம் கவனிக்கத்தக்கது. விவ

ஸாயமும் அது சம்பந்தமான தொழில்களும் ஆயில் என்ஜின் முதலிய இயந்திரோபாயங்களால் நடக்கும் பட்சத்தில், விவஸாயம் செய்கிறவர்கள் அதிக மூல தனம் பெற்றவர்களா யிருக்கவேண்டும். ஆனல் விவஸாயிகளிற் பெரும்பான்மையோர் மூன்று நாலு ஏக்கராக்களைப் பயிர்செய்வோராயிருந்து மூலதனம் இல்லாதவர்களாயும் கடனாளிகளாயும் இருக்கிறார்கள். இவர்கள் இயந்திரங்களுக்கு என்ன செய்வார்கள். இவர்களைப் போன்ற சில்லரை விவசாயிகள் தங்கள் சொத்துக்களைப் பெரிய மிராசுதாரர்களுக்கு விற்றுவிட்டுப் பட்டணங்களுக்குப் போய் விடும்படி நேரிடும். இயந்திரங்களை உபயோகிப்பதால் கூலி வேலைக்காரர்கள் குறையுமாதலால் இவர்களிற் சிலரும் பட்டணங்களுக்குப் போய் விடுவார்கள். விவஸாயத்தாற் கிடைக்கும் லாபத்தை யுத்தேசித்துப் பெரிய மிராசுதாரர்கள் அக்கம் பக்கத்து நிலங்களை வாங்கி விடுவார்கள். இப்படி நடக்குமானல் நம் கிராமங்களில் விவஸாயத்தொழில் முறையில் பெரிய புரட்சி யுண்டாகும். அப்புரட்சியால் இந்திய ஜனத்தொகையின் பாகுபாடே மாறும். ஆயினும் உலகத்தில் மனிதனுக்கு நன்மைகளும் தீமைகளும் கலந்தே நேரிடுகின்றன வாகையால் நம் விவசாயிகள் அதிக லாபத்தைப்பெற்றுச் செழிக்கும் நன்மைக்கு ஈடாகப் பட்டணங்களில் ஏழைகள் போய்க் குவியும் தீமையை அனுபவித்தே தீரவேண்டும் போலும்—சுதேசமித்திரன்.

---

## CARD PLAYING.
## சீட்டாட்டம்.

சீட்டாட்டமும் குடியும் நாட்டில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக விருத்தியாகிக் கொண்டு வருகின்றன. சீட்டு ருசி கண்டவனும், குடி ருசி கண்டவனும் ரத்த ருசி கண்ட புலியும் ஸரியே. ஸ்வயமாக ஸம்பாதிக்கத் திறமை யற்றவர்களாயினும் பாடுபட்டு பெரியோர்கள் தேடி வைக்கும் சொத்தை நொடி நேரத்தில் நாசமாக்கக் கேடுகெட்ட சூதாடிகள் பிறக்கின்றனர். இப்படி யாடுவதின் பிழை, பின் தான் தெரியும். போர்த்துகல் தேசத்தவர்களின் வியாபாரம் இந்நாட்டில் விருத்தியடையாமல் போனதற்குக் காரணம் அவர்களின் சூதாட்டமே.

சீட்டும் சொக்கட்டானும் ஒரே இனத்தைச் சேர்ந்தவைகள். சீட்டாட்டத்தை தேசத்தில் பரவச்செய்யவும் சிறுவர்களுக்கு உபதேசிக்கவும் பலர் தயாராயிருக்கின்றனர். இவ்வித குருக்களுக்கு சிறுவர்களை மோசம் செய்து காசு ஸம்பாதிக்க வேண்டுமென்பதே முக்கிய எண்ணமாயிருக்கிறது. கற்றுக்கொள்பவர்களுக்கும் எல்லாரும் ஆடுகிறார்களே, நாமும் ஆடினல் என்ன, என்று ஒரு அல்ப ஆசை உண்டாகிறது. பிறகு காசும்வைத்து ஆடினல் என்ன என்று எண்ணுகிறார்கள். இப்பொழுது கிராமங்களிலும் பள்ளிக்கூடங்களிலும் பத்துப் பனிரண்டு வயதுள்ள பையன்களெல்லாரும் சீட்டாடுகிறார்களென்று பெரும்புகாரா யிருக்கின்றது. பள்ளிப்பிள்ளைகள் ஆடுவதற்குக் காரணம் அவர்கள் இலகுவாய்க் கிளப்புகளில் சாப்பிட்டுக் கண்டவர்களோடு திரியும்படி அவர்களுடைய பெற்றோர்கள் செய்வதுதான்.

பையன், சீட்டாட்டத்திற்குக் காசு வேண்டியிருந்தால் ஊருக்குப் பொய்யான விவரம் சொல்லி கடிதம் போடுகிறான். அவ்விடத்திலிருந்து கிடைக்காவிட்டால் தன்னுடைய ஸ்நேகிதர்களிடத்தில் கடன் வாங்குகிறான். அவர்கள் பணம் கேட்டால் புஸ்தகத்தை விற்றுக்கொடுக்கிறான். அல்லது, திருடவேண்டியிருக்கிறது.

சூதாடுவதிலும் திருடுவதிலும் கண்ணும் கருத்துமாயிருக்கும் பையனுக்குப் படிப்பு எப்படி விருத்தியடையும்? தலைமடையில் உடைப்பெடுத்த ஆற்றின் அல்லது வாய்க்காலின் கடைமடையில் நீர் பெருகுவது போல்தான் பெருகும். இப்படிப் பட்டவனுக்கு கௌரவம் எப்படி ஏற்படும்? தராதரம் எப்படித் தெரியும்? பிறகு குடும்பத்திற்கு இவனே பெரியவனானல் சொத்து இவன் கையில் எப்படித் தங்கும்?

ஆகவே பள்ளிப்பிள்ளைகளுக்கு ஒழுக்கப் பயிற்சி வேண்டுமென்று எல்லாரும் கதறும்போது கூட, பையன்கள் இப்படியிருப்பதை பள்ளிக்கூடத்து அதிகாரிகள்தான் கவனிக்கவேண்டும். வயதானவர்களாடினல் அவர்களைக் கண்டு பிடித்துக் கண்டிக்கப் போலீஸார் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட பையன்களுக்குச் சூதாடிப் படாதபாடுகள் பட்ட தர்மபுத்ரர், நளன் முதலியவர்களுடைய சரித்திரங்களை உபாத்தியாயர்கள் போதிக்கவேண்டும். இவர்களுக்கு சீட்டே சீர் கெடுக்கும் சனியன் என்பதையும், சீட்டே குலங்கெடுக்கும் பாபி என்பதையும் உபதேசிக்கவேண்டும். நம்மவர்கள் எப்பொழுது சீட்டைத் தீட்டென்று தள்ளுவார்களோ!—சுதேசபரிபாலினி.

## MILK FOR CHILDREN

BY

M. V. SUNDARESAN.

### குழந்தைகளுக்குப் பாலுணவு.

குழந்தைகள் பிறந்து ஒரு வருஷகாலம் வரை அவைகளுக்கு ஆதாரமாயிருந்துவருவது தாயின் பால் இதைப்போல சிரேஷ்டமான உணவு வேறொன்றில்லை. ஏனெனில், குழந்தைகளின் தேகஸ்திதிக்கு அக்காலத்தில் உணவு எப்படி யிருக்கவேண்டுமோ அப்படி இருக்கிறது இதிலுள்ள தாதுக்கள். ஆனால் எல்லாக் குழந்தைகளுக்கும் தாயின்பாலை உண்டு வளரும் பாக்கியமிருக்கிறதில்லை. ஏதோ சில காரணங்களால் குழந்தைகளுக்கு தாய்ப்பாலுக்குப் பதிலாக மாட்டுப்பாலோ, மெல்லின்ஸ் ஆகாரம் போன்ற செயற்கைப்பாலோ கொடுக்கப்படுகின்றது. இம்மாதிரி சமயங்களில் குழந்தைகளின் பெற்றோர்கள் மிக்க ஜாக்கிரதை யுள்ளவர்களாய் தாய்ப்பாலுக்கு சமமான குணமுள்ள செயற்கை உணவுகளை வாங்கி போஷித்து வரவேண்டும். சாதாரணமாய்த் தாய்ப்பாலில்லாது போனால் பசும்பாலை குழந்தைகளுக்குக் கொடுத்து நம்மவர்கள் காப்பாற்றி வருகிறார்கள். தாய்ப்பால், பசும்பால், மெல்லின்ஸ் ஆகாரம், முதலியவைகளில் என்னென்ன பொருள்களிருக்கின்றன என்ற அறிவு இருந்தால் மட்டுமே குழந்தைகளைச் சரிவரப் போஷித்துக் காப்பாற்றும் சக்தி நம் தாய்மார்களுக்கு உண்டாகும். தாய்மார்களுக்கு தேகதத்துவ சாஸ்திரமும் வைத்திய சாஸ்திரமும் நன்றாய்த் தெரிந்திருக்க வேண்டும். ஏனெனில் அப்படி யிருந்தால்தான் அவர்கள் குழந்தைகளின் தேக ஸ்திதியை அறிந்து அதற்குத் தக்கபடி நடந்துகொள்ளும் சக்தியுள்ளவர்களாய் இருப்பார்கள்.

தாய்ப்பாலில் கஞ்சி சத்தில்லை. ஆகையால் நாம் அறிந்துகொள்ளவேண்டுவது: கஞ்சி சத்துள்ள உணவுப்பொருள்கள் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படக்கூடாது கஞ்சி சத்தை ஜீரணம் செய்யக்கூடிய சக்தி குழந்தைகளுக்கில்லை. இவ்விஷயமறிந்தோ அறியாமலோ பலர் பலவிதமான உணவுகளைக் குழந்தைகளுக்குக் கொடுக்கிறார்கள். கடையிலகப்படும் பலவிதமான செயற்கை ஆகாரங்களில் குழந்தைகள் ஜீரணம் செய்ய முடியாத பொருள்கள் சேர்ந்திருக்கின்றன. இக்காரணத்தால் குழந்தைகள் பலவித நோய்களுக்குட்பட்டு மரணத்துக்குள்ளாகின்றன. நம் நாட்டில் குழந்தைகள் மாண்டு போவதற்குக் காரணம், வகைதெரியாது அவைகளுக்குக் கொடுக்கப்படும் ஆகாரங்களே.

பசு அல்லது எருமைப்பாலைக் குழந்தைகளுக்குக் கொடுக்கக்கூடாது. ஏனெனில் இதிலும், தாய்ப்பாலிலுமுள்ள பொருள்கள் வித்தியாசப்படுகின்றன.

| 100 பங்கில் | ஜலம். | அல்புமின் | கொழுப்பு | லக்டோஸ் | உப்பு |
|---|---|---|---|---|---|
| தாய்ப்பால் | 88·9 | 3·4 | 3·3 | 4·5 | ·2 |
| பசும்பால் | 87·5 | 4·2 | 3.8 | 3·6 | ·7 |

தாய்ப்பாலில் லக்டோஸ் பசும் பாலிலிருப்பதைவிட அதிகமாகவிருக்கிறது. ஆனால் பசும்பாலில் தாய்ப்பாலைவிட அதிகமான 'அல்புமின்' இருக்கிறது. ஆகையால் பசும்பாலை உட்கொள்ளும் குழந்தைகள், பாலிலுள்ள அல்புமின் சத்து இரைப்பையில் தோய்ந்து கட்டியாய் விடுவதாலும், மலக்குழாயில் அடைத்துக் கொள்வதாலும், கஷ்டத்துக்கும் நோயிக்கும் ஆளாகின்றன. காடு மேடுகளில் மேய்ந்துவரும் பசுக்களின் பால் கொட்டடியில் கட்டித் தீனிதின்னும் பசுக்களின் பாலை காட்டிலும் சிரேஷ்டமானது. ஏனெனில் முன்சொல்லிய பால் பிந்திய பாலைப்போல் குழந்தைகளுக்கு அஜீரணத்தை யுண்டாக்குவதில்லை. நாம் வாங்கும்பசும்பாலில் அனேக கோளாறுகளிருக்கின்றன. பால் விற்பவர்கள் காசாசையால் பாலை ஜலம்விட்டுப் பெருக்கிவிடுகிறார்கள். பழம் பால் கெடாமலிருக்கும்படி "போரிக்ஆசிட்" என்ற மருந்தைப் போட்டு வைத்து இரண்டு தினங்களுக்குப்பின் விற்றுவிடுகிறார்கள். எருமைப் பாலைப் பசும்பால் என்று சொல்லி ஏமாற்றிவிடுகிறார்கள். பாலிலிருந்து வெண்ணெயைப் பிரித்து எடுத்துக்கொண்டு விற்றும் வருகிறார்கள். இவ்விஷயங்களை யெல்லாம் தாய்மார்கள் அறிந்திருப்பது அவசியம். அனேக குழந்தைகள் வயிற்றில் கட்டி விழுந்து இறந்துபோவதற்குக் காரணம் மடமையால் பலவிதமான கெட்ட பாலை வாங்கி அவைகளுக்குக் கொடுப்பதேயாகும்.—பெண் கல்வி.

## THE HARROW AND ITS USES.

BY

S. SUBRAMANIA AIYAR.

## முள்பலுவும் அதன் உபயோகங்களும்.

புஞ்சை நிலம் இறைப்புப்புஞ்சை யென்றும் மானு வாரிப் புஞ்சை யென்றும் இருவகைப்படும். மானு வாரிப்புஞ்சையில் விளையும் பயிர்கள் மழையையே எதிர் பார்த்திருப்பதால் முக்கியமாய் அப்புஞ்சை நிலங்களிலுமல்லாமல் இறைப்புப் புஞ்சையிலும் கவனிக்கவேண்டிய விஷயங்களாவன :—

(1) பெய்யும் மழைஜலத்தை அதிகமாக உட்கொள்ளும்படி செய்வதும்,

(2) உட்கொண்ட ஜலத்தை கூடுமானவரையில் சூரியகிரணங்களுக்கு அகப்படாமல் பூமியில் இறுத்தி அதில் நிற்கும் பயிர்களுக்கு அந்த ஜலத்தை உபயோகமாகும்படி செய்வதுமே.

2. முதலிற் கூறிய விஷயமானது பூமியை ஆழ உழுவதனுல் அநேகமாய்க் கைக்கூடும். பூமியை ஆழ உழ இரும்புக் கலப்பைகளும் அவ்விரும்புக்கலப்பையை இழுக்க பலமான ஜோடி எருதுகளும் வேண்டுமெனச் சொல்லலாம். இரும்புக் கலப்பைகள் ஆழமாக உழுமானுலும் பெரிய மாடுகள் இல்லாதவர்கள் நாட்டுக்கலப்பைகளைக்கொண்டே நாளாவட்டத்தில் ஏறக்குறைய அப்படி ஆழவும் உழலாம். அது எப்படியெனில் முதல் ஒரு ஏர் உழ அதற்குப் பின்னுல் அந்தப் படசாவிலேயே மற்றொரு ஏரைக்கட்டி ஒட்டுவதினுல் பூமியைக் கொஞ்சம் கொஞ்சமாக ஆழப்படுத்தலாம். நாட்டுக்கலப்பையைப்போல் இருபுறமும் மண் விழாமலும் இரும்புக் கலப்பையைப்போல் பூமியை உழும்போது ஒருபுறமே மண்ணைப் புரட்டத்தக்க ஒரு மரக்கலப்பை பாலூர் சர்க்கார் விவசாயப் பண்ணையில் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. அதைக் கரம்புநிலத்தில் ஓட்டாமல் நாட்டுக்கலப்பையால் ஒரு சால் ஓட்டப்பட்ட நிலத்தில் உழுதால் ஆழமாக உழுவதல்லாமல் இரும்புக்கலப்பையைப்போல் மண்ணை ஒருபுறமாகவே தள்ளும். இதன்விலை ஒரு ரூபாயாகும். மாதிரிக்கு ஒரு கலப்பையைக் கொண்டால் சுலபமாய் நாட்டுத்தச்சர்களைக்கொண்டே அதே மாதிரி செய்துகொள்ளலாம். இப்படி பூமியை ஆழ உழுவதால், இதுவரையிலும் பயிர்களுக்கு அனுகூலப்படுத்தாமல் தன்னிடம் வைத்திருக்கும் ஆகார இரும்புப்பெட்டியை திறந்ததுபோலாகும். தவிரவும், ஆழமாயுழுவதால் பெய்யும் மழை ஜலத்தை பூமி அதிகமாக உட்கொள்ளும். இதனுல் "அகல உழுவதை விட ஆழ உழு" என்னும் பழமொழியின் பயன் விளங்குகிறது.

3. இப்படி உட்கொண்ட ஜலத்தை பூமியிலேயே நிறுத்திவைத்து அதில் வளரும்பயிர்கள் உபயோகிக்கும்படி செய்வது மிக்க அவசியம். அப்படிச் செய்வதால் மழையை நோக்கி வாடும் பயிர்களுச்கு அனுகூலம். இப்படிச் செய்ய மழை பெய்தபின் பூமியின் மேல் உண்டாகும் கம்மலே உடைத்தலே வேண்டும். கம்மலே உடைக்கக் குடியானவர்கள் அநேக கருவிகளை உபயோகப்படுத்துகிறுர்கள் :

(1) சாதாரணமாய் களைவெட்டியால் களை வெட்டுவதுடன் கம்மலே உடைப்பதுண்டு.

(2) வரகு அவுரி முதலான பயிர்களில் கலப்பை கொண்டு மேலாக உழுவதுண்டு.

(3) சில விடங்களில் "பலுகு" என்று ஒரு நீண்ட மரக்கட்டைக்கு மர ஆணிகள் அடித்து இதனுல் பயிருழவு அடித்து கம்மலுடைப்பதுண்டு.

இப்படி செய்தபோதிலும் கம்மலே உடைப்பதின் அனுகூலங்களை குடியானவர்கள் பூரணமாக அறிந்தவர்களல்ல. ஏனெனில் வரகிலாவது புழுதியில் விதைத்த நெல்லிலாவது களை வெட்டிவிட்டு வந்த மறுதினம் மழைபெய்து பூமி கம்மல்கொண்டு விட்டது எனக்கொள்வோம். இந்தப் பூமியில் குடியானவர்கள் என்னசெய்கிறுர்கள்? ஒன்றும் செய்யாமல் சும்மாயிருந்துவிடுகிறுர்களல்லவா? இந்தக் கம்மலே உடைக்க எத்தனிப்பதில்லே, ஏன்? இதற்குத் தகுந்த கருவி அவர்களிடமில்லே. இன்னமும் அவுரியில் முதல் பறியான உடன் ஏர்கட்டி உழுவதுண்டு. சில விடங்களில் வேர் அறுபட்டு செடி மிக சேதமாகுமென அப்படி உழாமல் விடுவதுண்டு. தவிரவும் கேழ்வரகு விதைத்து எட்டுதினங்களுக்குள் மழை பெய்து பூமி கம்மல் கொண்டுபோகும்பட்சத்தில், பயிர் சிறியதாகையினுல் களைவெட்ட வசப்படாமல் பயிர் வெளுத்து வளர்ச்சி குறைந்து மாசூலேக் கெடுத்துவிடுகிறது. இதற்காக சில சம்சாரிகள் (குடியானவர்கள்) மறுபடி உழுது விதைப்பதுண்டு.

இப்படிப்பட்ட சமயங்களிலும் கம்மலே உடைத்து பயிருழவு அடிக்கத்தகுந்த "முள்பலுவு" என்னுமோர் முக்கோண வடிவமுள்ள கருவி பாலூர் சர்க்

கார் விவசாயப் பண்ணையில் உபயோகிக்கப்பட்டு வருகிறது. இது இப்பண்ணைக்குப் பக்கத்திலுள்ள இதர குடிகளாலும் வழங்கப்பட்டு வருகிறது. அதன் வடிவம் கீழே குறிக்கப்பட்டிருக்கிறது :—



இதன் நீளம் 43 அங்குலம். அதாவது இப்பலுவை ஒரு தடவை பூமியில் இழுத்தால் 43 அங்குல பூமியின் கம்மலை உடைத்து பயிருழவும் அடிக்கும். இதன் மேற்சட்டங்கள் மரத்தால் 9 ஆணிகளும் இவ்வாணிகள் $\frac{3}{4}$ அங்குல எஃகு சதுரக் கம்பிகளால் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆணிகள் பூமிச்குமேல் 9 அங்குலம் (முக்காலடி) நீளமுள்ளது. இதற்கு மேழி வேண்டுவதில்லை. இந்த பலுவு முன்னுல் காட்டியிருக்கும் கொக்கியில் சங்கிலியோ அல்லது கயிறையோ கட்டி ஒரு ஜதை மாட்டைக் கொண்டு ஒரு ஆள் இப்பலுவுக்கு முன் எருதுகளுச்குப் பக்கத்திலிருந்துகொண்டு வேலை செய்யலாம். இந்தப் பலுவை சாதாரண எருதுகள் இழுக்கும். மேழியில்லாமல் பலுவுக்கு முன்னின்று ஆள் ஒட்டுவதால் உடைத்த கம்மலை ஆள் அதிகமாய் மிதிக்க வழியில்லை. மேழி பிடித்து அழித்திப்பிடிக்கும் வேலையுமில்லை. இந்தப் பலுவை ஒரு மடக்கு ஒட்டிவிட்டால் பயிர் கலைந்து பூமி கம்மல் உடைந்து பூமியில் ஈரம் காத்துக்கொண்டும் பயிருக்கு காத்தோட்டம் உண்டாகி பயிர் கறுத்தும் செழிப்பாய் வளரும். இப்பலுவு 43 அங்குல நீளமிருப்பதால் ஒரு நாளைக்குச் சாதாரணமாய் 4 ஏகரா பூமி கம்மலை உடைத்துவிடலாம்.

4. இந்தப் பலுவின் அநுகூலம் இது மட்டுமல்ல, மற்றுமுள்ளதைக் கீழ் விவரிப்போம்:—

(1) சில இருமண்பாடாயுள்ள புஞ்சை பூமிகள் மழைபெய்த உடன் அதிக சேராயும் பெய்த 3 அல்லது நாலு தினங்களில் இறுகிக் கெட்டியாயும் போய் விடும். அப்பேர்ப்பட்ட நிலங்களை சரியான பதத்தில் உழவேண்டும். அதிக பூமியுள்ளவர்களுக்கு அப்படி பச்குவ பத்தில் உழ சரிப்படாது. அந்தக்காலத்தில் பலுவை பூமியில் இழுதுத்துவிட்டால் ஈரம் காத்துக்கொண்டிருக்கும். பிற்பாடு நிதானமாய் உழுதுகொள்ளலாம்.

(2) கரம்பாயிருக்கும் பூமியை உழுதபின் அதிலிருச்கும் புல் பூண்டுகளை இப்பலுவை கொண்டு சேர்க்கவும் முடியும்.

(3) மேற்கூறியபடி கலப்பை கொண்டாவது களை வெட்டியாவது கம்மலை உடைக்கத்தகுந்த பருவமில்லாத சிறு பயிரிலும் இதை உபயோகிக்கலாம்.

(4) இப்பலுவை புஞ்சை தானியப் பயிர்களுக்கு அதாவது கம்பு, கேழ்வரகு, வரகு, சோளம், புழுதி நெல், அவுரி இப்பயிர்களுக்கு உபயோகிக்கலாம்.

(5) தவிரவும் களையில்லாத மணல் முதலான பூமிகளின் பயிரில் இப்பலுவை ஒன்றிரண்டு தரம் போடும் பட்சத்தில் களை வெட்டவேண்டியிராது.

(6) களை வெட்டவேண்டிய புஞ்சை நிலங்களில் தகுந்த பதத்தில் களை வெட்ட கூலி அதிகம் கொடுத்தபோதிலும் ஆள்கள் கிடையாமல் பூமி கம்மல்பட்டுப் போய் பயிர் வளர்ச்சி குன்றி விடுகின்றது. அவ்விடங்களில் இப்பலுவை உபயோகிக்கும் பட்சத்தில் பூமியின் ஈரத்தைக் காத்துக்கொள்ளு மாகையினுல் நிதானமாய் களை வெட்டலாம்.

(7) தவிரவும் களை வெட்டுமுன் இப்பலுவை உபயோகித்துக் களை வெட்டினுல் பூமி தளர்ந்து விட்டபடியால் களை வெட்ட ஆள் குறையும். உதாரணமாக இந்தப்பலுவால் ஒரு மனிதன் ஒரு ஜதை மாட்டைக் கொண்டு ஒரு தினத்தில் நான்கு ஏகரா பூமியை கிளரி விடலாம். ஆனுல் ஏகரா ஒன்றுக்கு களைக் கொட்டால் வெட்ட அநேக இடங்களில் 20 கூலிகள் வேண்டியிருக்கும். முள்பலுவு உபயோகிப்பதால் ஏகரா ஒன்றுக்கு ஒரு ரூபாய் மீத்துவிடலாம். முள் பலுவின் விலை ரூ. 7 ஆகிறது. இப்படி 7 ஏகரா பூமியை இதனுல் கிளரிவிடுவோமானுல் அதின் கிர

யம் கிடைத்துவிடும். இது மாத்திரமே யல்ல. கூலியாட்களுக்கு பதிலாக முள்பலுவை உபயோகிப்போமானல் இந்தக் கூலியாட்களை வேறு விவசாய வேலைகளுக்கு உபயோகிக்கலாம்.

மேற் கூறியபடி களை வெட்டிய பின்னும் இப்பலுவை பக்குவமாக பயிரில் உபயோகப்படுத்தும் பக்ஷத்தில் பூமியின் மேல்மண் கம்மல் படாமல் வைத்துக் கொள்வதனல் பூமியில் தங்கும் ஈரம் பயிருக்கு உதவியாகும்.

இவ்வளவு அநுகூலங்களைக் கொடுக்கவேண்டிய பலுவை வேண்டியவர்கள் திருச்சினப்பள்ளி தென் இலாகா விவஸாய டிப்டி டைரெக்டர் அவர்களுக்கு எழுதி பலுவுசெய்ய சிலவாகும்ரூ. 7 க்கு (ரயில் சார்ஜ அன்னியில்) பெற்றுக்கொள்ளலாம்.

---

## SOME LOWER FORMS OF LIFE

BY

N. S. JAMBUNATHA AIYAR.

## சில அற்ப ஜீவராசிகள்.

"கண் கண்டதுதான் காட்சி," என்பதற்கு ஏற்ப இருகண்ணுக்குச் சாதாரணமாய்ப்புலப்பட்டது தான் பொருள்களென்றும், அவ்வாறு புலப்படா நிற்கும் மற்ற வஸ்துக்கள் இருக்கக்கூடு மென்ற நம்பிக்கை கூடசில வருஷங்களுக்குமுன் நமக்குக் கிடையாது. "மைகிராஸ்கோப்" என்கிற பூதக்கண்ணடியின் உபயோகத்தைக் கண்டறிந்து வெளியிட்ட பின்னர்தான், கண்ணுக்குச் சாதாரணமாய்ப் புலப்படாத நுண்ணிய பொருள்களின் தோற்றங்கள் எவ்வாறிருக்கின்றனவென்றறியவிடமுண்டாயிற்று. அணுவிலோர் அணுவாயிருக்கப்பட்ட லோகப் பொருள்களும், ஜீவப்பொருள்களும் இருக்கின்ற வைபவம் இன்னதென்று அப்போதுதான் தெரியலாயிற்று. அக்கண்ணடியின் உபயோகத்தினல் தெரிந்துகொண்ட விஷயங்களின் மேம்பாடுபற்றி இதுவரையில் அந்தகாரத்தில் மூடப்பட்டிருந்தலோகத்தின் விசித்திரங்களை நமது நுண்ணிய அறிவுக்கு எளிதில் புலப்படும்படியாக ஏற்பட்ட ஒரு விசித்திர தீபம் என்றே கொள்ளலாம். இவ்வாறு பூதக்கண்ணடியின் உதவியால் நாம் அறியப்பெற்ற சில அற்ப ஜீவராசிகளின் குணங்களைப்பற்றி இங்கு விவரிப்போம்.

சென்ற வருஷம் ஜுன்மீ த்துச் சஞ்சிகையில் பிராணிகளின்முக்கிய குணதிசயங்களை விவரித்தோம். அதில் எடுத்துக் காட்டப்பட்ட அமீபா என்ற ஒரு அற்ப ஜீவராசி ஒன்றை, 500-மடங்கு பெருக்கிக் காட்டக்கூடிய பூதக் கண்ணடியின் உதவியின்றி நாம் காணமுடியாதென்றும், நமது ஏரி குளங்களில் பாசத்தோடுகூட வசிப்பதையும், அவைகளின் உயிர் வாழ்க்கை எப்பேற்பட்டதென்பதையும் சற்று விபரமாய்க் கூறினேம். அமீபாவானது, நொங்குபோல வெளுத்த பசைப்பற்ருேடு கூடிய தேக அமைப்பின் விசேஷத்தால், தன்னிலும் எளிய அற்ப ஜீவராசிகளைத் தேகத்தில் அணைத்து ஒட்டி அவ்வாறு விழுங்கித் தனது தேகத்தோடு தேகமாக அதனை ஜீரணம் செய்து கொள்ளக்கூடிய சக்தியைப் பெற்றிருக்கிறது. இவ்வாறு உயிர் வளர்த்து, தேகம் பருத்து, மக்கட்பேறு உண்டாக்கும் பருவம் வருங்கால், தானே இரண்டாகப் பிரிந்து, தன் குஞ்சுகளாகின்றது. அமீபா இனத்திலோ ஆண் பெண் என்ற வித்தியாச விவகாரங்கள் கிடையாது. வித்தியாசமற்ற பிரம்மஸ்வரூபமென்றே சொல்லலாம். அமீபாவுக்குக் காலுமில்லை கையுமில்லை, வாயுமில்லை, வயிறுமில்லை. ஆனபோதிலும் தேகத்தில் எந்தப் பாகமும் எந்தத்தொழிலையும் செய்ய வல்ல சக்தியை பெற்றிருக்கிறது.

இதுவரையில் அமீபாவில் நாம் கண்டறிந்த அவ்வளவு அற்புதச்செய்கைகளையும் நம் இரத்தத்தில் நீந்தி விளையாடும்படியான சுத்த ஸ்படிக நிறத்தோடு காணப்படும் வெள்ளைச்செதில்களில்* நாம் காணலாம். நம் தேகத்தில் அசைவின்றிக்கட்டுண்டு கிடக்கும் மற்றைச்செதில்களாகிய மாமிசம், தோல், நரம்பு, இவைகளைப்போலிராமல் தன்னிச்சையாய்த் தனித்துத் திரியக்கூடிய சக்தியைப்பெற்று, இவ்வெள்ளைச் செதில்கள், நம் இரத்தத்துக்குள் புகுந்து, தங்கள் வாழ்நாளைக்கழிக்க வந்த இதர ஜீவன்களைப்போல் காணும். ஆனல் தேகசாஸ்திரம் உணர்ந்தோர் நமது தேகத்தைப் பீடிக்கப் புகும்படியான அநேக அற்ப ஜீவராசிகளை உயிர் தொலைக்க, நமது தேகமாகிய கோட்டையைக் காத்து இரட்சிக்கும்படி ஏற்படுத்தப்பட்ட இராணுவ வீரர்கள் இவ்வெள்ளைச் செதில்களே எனக் கூறியிருக்கின்றனர்.

நமது இரத்தத்தில் காணப்படும் வெள்ளைச் செதில்கள் அமீபாவிலும் நுண்ணிய தேகவமைப்புடையன

* செதில்களைக் கண்ணரைகள் என்றும் சொல்வார்கள்.

வென்றால் அவைகள் எதிர்த்துச் சண்டையிட்டுக் கொன்று ஜீரணித்துக் கொள்ளக்கூடிய அவைகளினும் கேவல ஜீவராசிகள் உண்டா என்று ஐயம் கொள்ள சற்று இடமுண்டாகிறது. அப்பேர்க்கொத்த ஜீவராசிகளும் இருக்கின்றன. அவைகளின் இருப்பும் செய்கைகளும் பூதக்கண்ணாடியின் உதவியாலின்றி ஒருக்காலும் நாம் அறியக்கூடியனவல்ல. பதார்த்தங்கள் புளித்தல், பண்டங்கள் அழுகுதல், இவைகளின் காரணங்களைச் சற்று நோக்குங்கால் அற்ப ஜீவராசிகளின் குணதிசயங்கள் நன்றாகவிளங்கும். புளித்தலுக்கும் அழுகுதலுக்கும் காரண பூதங்களாக நிற்பன மிகவும் நுண்ணிய தேக அமைப்போடு காணக்கூடிய (Yeast) ஈஸ்டு (Bacteria) பாக்டீரியா, என்று சொல்லப்படும் ஜீவராசிகளே. இவைகள் சில நிமிஷங்களுக்குள்ளே பிறந்து வளர்ந்து மக்கட்பேறு உண்டாக்கும் திறமைபெற்றிருக்கின்றன. ஒன்று லக்ஷக்கணக்காகப் பெருகக்கூடிய இயல்பையும் அடைந்திருக்கின்றன. ஆகவே இவைகளோ, இவைகளின் முட்டைகளோ நம்மைச் சுற்றிலும் இருக்கிற காற்றிலும், ஜலத்திலும், வஸ்துக்கள் ஒவ்வொன்றிலும் நிறைந்துள்ளன. இவைகளில் அநேக ஜாதிப் பிறிவினைகள் உண்டு. இவைகளெல்லாம் நமக்குக் கொடுமை செய்ய ஆரம்பிக்குமாயின் ஒரு ஜீவராசியும் உலகத்தில் உயிர்வாழ இடமில்லை. ஆனால் அவைகளுக்கு ஏற்பட்ட காரியங்கள் உலகத்தில் காணும் பதார்த்தங்களைக் கூடிய சீக்கிரத்தில் அவைகளின் பிரதம சேர்க்கைப் பதார்த்தங்களாக வாக்குவது தான். உதிர்ந்த இலைகளோ, இறந்த பிராணிகளோ, இஜ்ஜீவராசிகளின் வேலைகளால்தான் மண்ணோடு மண்ணாய்ப் போகும்படியாகச் செய்யப்படுகின்றன. அதனாலேயே பூமிக்கு உரம் ஏற்படுகிறது. இவைகளின் செய்கையே மலைகளிற் காணக்கூடிய பெரும் பாறைகள் பலம் குன்றிப் பொறியுண்டை மாதிரி எளிதில் உதிர்ந்து பொடியாகும்படியான நிலைமைக்கு வந்து விடுவதற்குக் காரணம் என்றும் சொல்லுகிறார்கள்.

இவ்வளவு லோகோத்தமமான காரியங்களில் இராமல் மனிதருக்கு ஹிம்சை உண்டுபண்ணக் கூடிய சில அற்ப ஜீவராசிகள் இருக்கின்றன. அவைகள் தாம் அநேக வியாதிகளுக்குக் காரணபூதமென்று சொல்லப்படும் மூளைக்கிருமிகள்,

வியாதிகளுக்குக் காரணம் ஆராய்ச்சி செய்யுங்கால் வைத்திய சாஸ்திரிகள் பூதக்கண்ணாடியின் உதவியைக் கொண்டு அநேக நுட்பமான காரண விவகாரங்களைக் கண்டறிந்திருக்கிறார்கள். அநேக வியாதிகளின் மூலகாரணம் இம்மூளைக்கிருமிதான் என்று அப்பொழுது அறியலாயிற்று. மூளைக்கிருமிகளும் அநேக வர்க்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சில ஜுர மூளைக்கிருமிகள் மெலேரியா (Malaria), டைபாயிட் (Typhoid), புதிதாகக் கண்டறிந்த பிளாக்டவுன் பீவர் (Black Town Fever) என்று சொல்லப்படும் காலஹஜார் (Kalahazar) என்ற ஜுரமும் மூளைக்கிருமிகளின் விளையாட்டினால் ஏற்பட்ட விபரீதமான விஷ ஜுரங்களாம். அம்மை, காலரா (Cholera) என்ற வாந்திபேதி, இரத்த காசம் முதலிய க்ஷய ரோகங்களும் மூளைக்கிருமிகளின் செய்கைகளால் ஏற்பட்ட வியாதிகள் என்று சொல்லுகிறார்கள். சொறி, சிரங்கு, தேமல், படை, குஷ்டம் முதலிய தோலைப் பற்றிய வியாதிகளும் அற்ப ஜீவராசிகளாகிய மூளைக் கிருமிகள் நமது தேகத்தில் உண்டாக்கக்கூடிய அற்புதங்களாம். ஆகவே வியாதிகளின் மூலகாரணத்தை இன்னதென்று தெரிந்த பிறகாகிலும் மூளைக்கிருமிகளை நமது தேகத்தில் அணுகவொட்டாதபடி கூடிய வரையில் நாம் ஜாக்கிரதையுடனிருக்கவேண்டும். வியாதிக்கு ஆதாரமாக இருக்கக்கூடிய மூளைக்கிருமிகள் அநேகமாயெங்கு மிருக்கின்றன. ஆனால் அவைகள் இடமறிந்துதான் சேரும். தேகத்தின் அசுத்தத்தையோ, துர்ப்பலத்தையோ, துர்நடத்தைகளையோ, இவைகளையே பெரும்பாலும் தழுவி நிற்கும். உட்புகுந்த மூளைக்கிருமிகள் உஜ்ஜீவிக்கும் பொருட்டு உறைவிடம் தேடுகின்றன. அப்பொழுதுதான் அவை நமது இரத்தத்தில் தயாராயிருக்கும் படைவீரர்களாகிய வெள்ளைச் செதில்களால் கண்டு பிடிக்கப்பட்டு உயிர் தொலைக்கப்படுகின்றன. இரத்தத்தினுடைய வலிமை குறைந்திருப்பவர்களுடைய தேகத்தில் பிரவேசித்த மூளைக்கிருமிகளோ தங்குதடையின்றித் தாங்கள் போய்ச் சேரவேண்டிய அங்க அவயவங்களைப் பீடித்துப் பிராணஹானியை எளிதில் கொண்டுவந்து விடுகின்றன.

ஆகையால் மூளைக்கிருமிகளின் பாதையின்றி நாம் உயிர் வாழவேண்டுமானால் சுகாதார விதிகளில் முக்கியமானவைகளான, தேகசுத்தம், இரத்தசுத்தம், சுத்தமான காற்று, ஜலம், ஆகாரம், உடை இவைபோன்றவைகளை முக்கியமாகக் கவனித்தல் அவசியம். அப்படிக் கவனித்து நமது தேகத்தைப் பக்குவமான நிலைமையில் வைத்திருக்கும் பட்சத்தில், கல்பம் சாப்பிட்ட பைராகியைக் கடித்த விஷப்பாம்பானது தானே இறப்பதுபோல, நம்மையடைந்த மூளைக்கிருமிகளும் அவ்வாறே உயிர்துறக்கப் பெறுமேயன்றி நம்மை யொருக்காலும் பீடிக்கமாட்டாது என்பது நிச்சயம்.—விவேக போதினியில் என், எஸ். ஜம்புநாதய்யர்,

# AGRICULTURE.
## விவஸாயம்.

### An Agricultural Engineer for the Punjab.

பஞ்சாப்புக்த ஒரு வியவஸாய இஞ்சினீர்—பஞ்சாப் கவர்ன்மெண்டார் தம் மாகாணத்தில் ஒரு வியவஸாய இஞ்சினீயரை 2-வருஷத்திற்கு வைத்துப் பார்க்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

### Ever Milking Cows.

**எப்பொழுதும் பால் கறக்கும் பசுக்கள்.**—ப்ரான்ஸ்தேசத்தில் பசுமாடுகளுக்கு 3ம் ஈற்றில் பால் அதிகம் கறக்கும் ஸமயத்தில் கருப்பையை எடுத்து விட்டு, அப்பசு மறுபடியும் புணராமலும் கருத்தரிக்காமலும் செய்து, அது உயிருள்ளவரையில் பால் கறந்துகொண்டிருக்கும்படி செய்கிறார்கள்.

### Sun Hemp.

சணல்.—இதன் பிரயோஜனம் பல விதப்படும். (1) இதிலிருந்து நல்லநார் எடுக்கலாம் (2) இது நல்ல பசுந்தாள் உரமாகிறது (3) இதை மாடுகளுக்குத் தீவனமாய்ப்போடலாம் (4) இதை நிலங்களுக்கு மாற்றுப் பயிராகப்போடலாம். (5) இதை அடுப்புக்கு விறகாகவும் உபயோகிக்கலாம்.

### Fertilisers.

உரங்கள்.—இப்போது உபயோகப்படும் உரங்களெல்லாம், 70 வருஷத்துக்கு முந்தி லீபிக் என்பவர் எழுதிவைத்த பிரமாணங்களையே ஆதாரமாகக்கொண்டிருக்கின்றன வென்றே சொல்லவேண்டும். அந்த பிரமாணங்களாவன:—

(1) பயிர் செம்மையாய் வளருவதற்கு சில உபகரணங்கள் வேண்டும். இந்த உபகரணங்கள் போதுமான அளவாயும் ஸரியான பக்குவமாயும் இருக்கவேண்டும். இப்படி இருந்தால்தான் நிலம் செழிப்பானது என்று சொல்லலாம்.

(2) ஒருதரம் பயிர் செய்து அறுவிடையானல், மேலே சொன்ன உபகரணங்களில் சில பூமியிலிருந்து எடுபட்டுப்போகின்றன. இவைகளில் ஒருபாகம் ஆகாயத்திலிருந்து மறுபடியும் பூமியோடு சேர்கிறது. மற்றொருபாகம் அடியோடே எடுபட்டுப்போய் விடுகிறது. இந்தக் கடைசி பாகத்தைத்தான் மனுஷன் சேர்ப்பிக்கவேண்டியது.

(3) மாஸூலில் அடங்கிய உபகரணங்களை யெல்லாம் திரும்பி நிலத்தோடு சேர்த்துவிடும் பக்ஷத்தில் அதன் வளம் குறையாது. இதற்குத்தான் எருப் போடுவது.

(4) ஒரு நிலத்தின் வளம் அழியாமல் எப்போதும் ஒரேமாதிரியாக இருக்கவேண்டுமானல், வேளாண்மைத் தொழிலில் ஸாதாரணமாய்ச் சேரும் எருமாத்திரம் போதாது. ஏனென்றால், பூமியிலிருந்து தானியம், வைக்கோல், பால், ஆடு மாடு இவைகள் ரூபமாய் வெளியேறும் உபகரணங்களும் சேரவேண்டும்.

பயிர்கள் தங்களுக்கு வேண்டிய உணவின் பெரும்பாகத்தை ஆகாயத்திலிருந்து கார்பானிக் ஆஸிட்காஸ் அதாவது கரியமல வாயு ரூபமாகவும், ஜல ரூபமாகவும், க்ரஹித்துக்கொண்டு மற்ற பாகத்தை நிலத்திலிருந்தே க்ரஹிக்கின்றன. பயிர்கள் வளர்வதற்கு 14 மூலப்பொருள்கள்போல சேரவேண்டுமென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இவைகளில் முக்கியமாய் நைட்ரொஜன், அதாவது உப்பு வாயு, பாஸ்பாரிக் ஆஸிட், பொட்டாஷ் அதாவது சாம்பல் காரம், சில வேளைகளில் சுண்ணாம்பு, இவைகள்தான் அநேகமாய் நிலங்களில் குறைவாக இருக்கும். அவைகளைத்தான் எரு மூலமாக ஏற்றவேண்டும். ஆகவே எருவில் இவைகளிருக்கும் அளவுக்குத் தக்கபடியே எருவிலை இருக்கும்.

### Methods of Separating Heavy Seeds.

**பளுவுள்ள விதைகளைப் பிரித்தெடுத்தல்.**—மேல் நாடுகளில் பளுவுள்ள விதைகளை லேசான விதைகளிலிருந்து அநேக விதங்களில் பிரித்தெடுக்கிறார்கள். ஸாதாரணமாய் பளுவுள்ள விதைகளை காற்றில் ஒப்படி செய்ய எத்தனித்தால் அவைகள் பறந்துபோகமாட்டா. லேசான விதைகள் சற்று ஒதுங்கிப் பறந்து போகும். லேசான விதைகள் பதர்போகும் அவ்வளவு தூரம் போகாவிட்டாலும் நல்ல மணிகளிலிருந்து அப்புறம் போய்த்தான் விழும். லேசான விதைகளை இன்னம் ஒரு ஸுலபமான விதத்தில் அப்புறப்படுத்தலாம். ஒரு ஏனத்தில் தண்ணீர்வைத்து அத்தண்ணீரில் விதைகளைப் போட்டால் பளுவுள்ள விதைகள் தண்ணீருக்குள் அமிழ்ந்துபோய் லேசான

வைகள் மேலே மிதக்கும். இப்பேர்ப்பட்டவைகளை அப்புறப்படுத்தி அமிழ்ந்த விதைகளை உபயோகப் படுத்திக்கொள்ளலாம்.

**Lablab**

மொச்சை.—இது கொடிப்பயிர். இந்தியாவிலே எவ்விடங்களிலும் பயிரிடப்படுகிறது. இதன் பூ வெள்ளை நிறமுடையது. அவற்றுட் சிலவற்றின் பூ சிவப்பு வர்ணமாயுமிருக்கிறது. காய் அவரைக்காயை ப்போலதட்டையாயும் அகலமுள்ளதாயு மிருக்கிறது. ஒருகாயில் 3 முதல் 5 பருப்புவரையிலுமுண்டு. காய் முற்றுமுன் பிடுங்கினுல் பயற்றங்காய்போலக் கரியாய் சமைக்கவும், முற்றியபின் பருப்பை அவித்துத் தின்னவுங்கூடியது. நிலத்தில் விதைத்துப் பசுந்தாள் பசளையாய்ப் புதைப்பதற்கு மொச்சை முதல்தரமான பயிர். அது நிலத்திற் பயிராயிருக்கிறகாலத்தில் ஏராளமான இலை உதிர்ந்து நிலத்திலே ஸ்தாவரஸத்தைப் பெருக்குகிறது. இந்தியாவிலே விவஸாயிகள் ரொம்ப விருப்பத்தோடு அதை மாறு பயிராகவும், இடைப் பயிராகவுஞ் செய்துகொள்ளுகிறுர்கள். வயலில் நெல்லு வெட்டியபின் உழுது விதைக்கிறுர்கள். அந்தப்பயிரின் இலை ஆடு, மாடுகளுச்கு முதல் தரத்துத் தீனியாகிறது.

அதை வயலிலே விதைத்தால், எக்கரொன்றில் 1300 ராத்தல் பருப்பையும் அவ்வளவு நிறையுள்ள குழையையும் பெற்றுக்கொள்ளலாம். எக்கரொன்றுக்கு 50 ராத்தல் விகிதம் விதை போதியதாகும். கொடியாய்ப்படர்ந்து நிலத்தை மூடுவதினுல் களை வளரமாட்டாது. பயிர் வளர்ந்து முற்றியபின் இலைகள் உதிர்கின்றன. கொட்டையாயெடுக்க வேண்டுமானுல் அரிவாள்கொண்டு கொடியை முழுவதையும் அறுத்துக் காயப்போட்டு அடித்து கொட்டைகளைச் சேர்த்தெடுத்துக்கொள்ளலாம். பொதுவாய் முற்ற முற்ற காயைப் பிடுங்கிக்கொள்ளுகிறுர்கள். கறி சமைக்கவேண்டுமாயின் பருவம் பார்த்துக் காயாய்ப் பிடுங்கிக்கொள்ளவேண்டும். மொச்சைப் பருப்பைத் தோலோடு கூறுபாடுசெய்து பார்த்தபொழுது நீர் 13 பங்கும், பசை 55 பங்கும், நெய் 2 பங்கும், தும்பு (நார்) 5 பங்கும், சாம்பல் 3 பங்கும், தாதுபதார்த்தம் 22 பங்கும், இருக்கக் காணப்பட்டது.

**Storing of Paddy.**

நெல்லைக் கோட்டி வைப்பது.—அறுக்கும் பக்குவத்துக்கு வராத பயிர்களை யறுத்தால் அதிலிருந்து கிடைக்கும் நெல் சீக்கிரம் கெட்டுப்போய் விடும். அறுத்த கட்டுகளை ஈரமான பூமியில் போட்டுவைக்கும் பக்ஷத்தில் நெல்லின் நிறம் மாறிப்போகும். நெல்லை அளந்து விற்காமல் நிறுத்து விற்கும் சிலர் நிறையை அதிகப்படுத்துவதற்காக நெல்லில் தண்ணீரைத் தெளித்து வைக்கிறுர்கள். இப்படிச் செய்து பர்மாவிலுள்ள அக்யாப் வியாபாரிகள் ஐரோப்பாவுடன்செய்து வந்த அரிசி வியாபாரத்தை யிழக்கும்படி நேரிட்டுவிட்டது.

கிடங்குகளில் நெல்லைக் குவித்து வைத்தால் அதனுல் உஷ்ணம் உண்டாகி நெல்லின் நிறம் மாறிவிடுகிறது ஈரமுள்ள அல்லது கசிவுள்ள கிடங்குகளில் உஷ்ணம் அதிகமாகி நெல்லைக்கெடுத்துவிடும். உமி, கருக்காய், மணல், அழுக்கு, இவைகள் நெல்லிலிருந்தால் நிச்சயமாய் நெல் கெட்டுப்போய்விடும். நெல்லைச் சாக்கில் கட்டிப்போட்டு எற்றுமதி யல்லது இறக்குமதிகள் செய்கிறுர்களே தவிர, கோதுமையைப்போல் எராளமாய் சாக்கில் கட்டாமல் எற்றுமதிசெய்வதில்லை. காரணமென்ன வென்றுல், அரிசியில் ஸ்வபாவத்திலேயே ஈரமிருந்து கொண்டிருக்கிறது. இதனுல் அரிசி மில்களில் நெல்லை நன்ருய்க் காற்ருட வைக்கிறுர்கள். எற்றுமதிசெய்யும் அரிசியைக் கப்பல்களில் காற்றுப் போக்குவரத்துள்ள இடங்களில் வைக்கிறுர்கள். இந்த விஷயங்களை அனேகர் கவனிக்காமலிருப்பதால் அரிசி மட்டமென்று சொல்லித்தாழ்ந்த விலைக்கு விற்கவேண்டியிருக்கிறது. தேசத்திற்கு இவ்விதம் எற்படும் நஷ்டம் எராளமாக விருக்கிறது. மில் ஸொந்தக்காரர்களும், கப்பல் வியாபாரிகளும் அரிசி நல்ல தினுஸாக இருக்கிறதாவென்று கவனிச்கும் பக்ஷத்தில் இப்படிப்பட்ட நஷ்டம் நேரிடாது. ஆனுல், பிசகுகள் மழைகாலத்தில் நெல்லை வாங்கி ஈர பூமிகளில் சேகரம் செய்யும் மொத்த வியாபாரிகளிடத்திலிருக்கிறது. மிராசுதார்களும் நெல்லை நன்ருகக் காயப்போட்டு, கருக்காய், மண், கட்டி, முதலியவைகளில்லாமல் பரிஷ்காரமாய்த் தூற்றி வைத்து விற்ருல் தேசத்திற்கு மேற்சொன்ன நஷ்டங்களில்லாமலிருக்கும்.

# COMMERCE.
## வியாபாரம்.

### Business Enterprise in India.

இந்தியாவில் வியாபார ஊக்கம்:—இந்தியாவில் சென்ற ஏப்பிரல் மாதத்தில் அடியில்கண்ட விவரப்படி 9 கம்பெனிகள் ரிஜஸ்தர் செய்யப்பட்டன. அந்த விவரங்களைக்கொண்டு அந்த மாதத்தில் வியாபாரத்தில் ஊக்கம் எவ்வளவு இருந்தது என்பதை யறிந்து கொள்ளலாம்.

| | |
|---|---|
| 2 பாங்கிகளும் லேவாதேவி கம்பெனிகளும் | ... 3,70,000 |
| 1 கூட்டுறவுசங்கம் | ... 40, 000 |
| 1 தேயிலை பயிரிடும் கம்பெனி | ... 2,40,000 |
| 5 வியாபாரக்கம்பெனிகள் மேற்சொன்னவை களைத்தவிர | ... 12,00,000 |
| ஆக ரூ. | 18,50,000 |

### Idea Box.

யோசனைப்பெட்டி.—தங்கள் வியாபாரத்தில் நல்ல லாபம் ஸம்பாதிக்கவேண்டுமென்று அநேக வியாபாரிகள் தங்களுடைய வேலையாட்களுக்கும் ஸிப்பந்திகளுக்கும் வியாபார விஷயமாகத் தோன்றும் யோசனைகளை எழுதிப்போடும்படி ஒரு பெட்டியை வைத்திருக்கிறார்கள். வேலைசெய்யும் ஆட்களுக்கும் ஸிப்பந்திகளுக்குமே அவரவர் வேலையை எப்படி ஸுலபமாய்ச் செய்யலாமென்று தோன்று மாதலால் இப்படிச் செய்யப்பட்ட யோசனைகளால் அநேக வியாபாரிகளுக்கு வீண் செலவு குறைந்து நல்ல லாபம் வந்திருக்கிறது.

### Lancashire Cotton Industry.

லங்காஷயர் பருத்திக் கைத்தொழில்:—இங்கிலாந்தில் மற்ற வியாபாரங்களைவிட லங்காஷயர் பருத்திக் கைத்தொழில் மாத்திரம் அதிக அபிவிருத்தியடைந்திருப்பதற்குக் காரணம் இன்னதென்று லண்டனில் பிரசுரமாகும் "இகான்மிஸ்ட்" என்னும் பத்திரிகை மூலமாகத்தெரியவருகிறது. அங்கேயுள்ள மில்களின் ஸொந்தக்காரர்களெல்லாம் அந்நிய தேசங்களுக்கு இந்த மாதிரி சரக்குகள்தான் தேவை யென்று தெரிந்து கொள்ளுவதற்கு தக்க ப்ரயாஸை எடுத்துக் கொள்ளுகிறார்கள். ஆகவே, லங்காஷயர் வியாபாரிகள் தங்களுக்குஸௌகரியமாய்ச்செய்து விற்கக்கூடிய சரக்குகளை அந்நிய நாடுகளுக்கு அனுப்பாமல், அந்தந்த மார்க்கெட்டுகளில் பலநாள் அனுபோகத்திலிருந்தும், அங்கங்கே வாங்கும் ஜனங்களுடைய பிடிமானத்தை யறிந்தும் சரக்குகளைத் தக்கபடி செய்து அனுப்புகிறார்கள்.

அமெரிக்கா, ஜர்மெனி தேசத்துப் பருத்தித்தொழிலாளிகள் தங்களுடைய சரக்குகள் அந்நிய நாடுகளில் வியாபரம் நடப்பதற்காக ஊர் ஊராக ஏஜெண்டுகளை அனுப்பவேண்டியதாயிருக்கிறது. ஆனால் அந்நிய தேசங்களில் சரக்கு வாங்குபவர்களோ, லங்காஷயரினுடைய நெசவு ஸாமான்களை வாங்கி ஏற்றுமதி செய்வதற்காக லங்காஷயரிலேயே ஸ்திரமான வியாபாரச்சாலைகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

### Burma Rice.

பர்மா அரிசி:—பர்மா அரிசி இதுவரையில் இந்தியாவுக்கு வந்துகொண்டிருந்தது. இப்போது குறைந்து போயிருக்கிறது. இன்னும் வரவரக் குறைந்துபோகும். ஜப்பான் தேசத்திலுள்ள ஐந்து கோடி ஜனங்களுக்கு அத்தேசத்தில் விளையும் அரிசி போதாமல் பர்மாவிலிருந்து வாங்கத்தலைப்பட்டுவிட்டார்கள். இந்த வருஷம் அடுத்த சில மாசங்களில் ஒரு லக்ஷம் டன் அத்தேசத்துக்கு வேண்டியிருக்கு மென்றும், ஜூலை மாஸத்துக்கு மட்டும் 30,000 டன் ஏற்றுமதியாக ஏற்பாடா யிருக்கிறதென்றும், ஜப்பானன்றி ஜாவாத்தீவும் பர்மா அரிசியை வாங்கத் தலைப்பட்டு, அதற்காக அடுத்த ஆகஸ்டு முதல் அக்டோபர் வரையில் 1,50,000 டன் அரிசி வேண்டியிருக்கு மென்றும், சொல்லப்படுகிறது. இந்த இரண்டு தேசங்களையும் தவிர, பர்மா அரிசி ரங்கூன் துறைமுகத்துக்கு வராமல் வேறு ரயில்பாதைகள் வழியாய் வடகிழக்கிலுள்ள பற்பல தூர ஸ்தலங்களுக்குப் போய்விடுகின்றது. கவர்ன்மெண்ட்கணக்குப்படி 2,40,000 டன் அரிசி விற்க இருப்பதாகச் சொல்லப்படுகிறது. போன வருஷம் 3,50,000 டன் அரிசி விற்க இருந்ததாம். எப்படியானாலும் இப்போது பர்மா அரிசிக்கு இந்தியாவில் மட்டுமல்லாமல் மற்ற தேசங்களில் உண்டாயிருக்கும் கிராக்கியைப்பார்த்தால் பர்மாவிலேயே அரிசி விலை அதிகமாகி இந்தியாவுக்கு அது வராதென்பது நிச்சயம். ஆகவே இந்தியாவில் அரிசியின் அகவிலை ஏறுவதற்குக்கேட்பானேன்.

# INDUSTRY.

## கைத்தொழில்.

### The Indian Sugar Industry.

இந்தியச் சர்க்கரைத் தொழில்.—இந்தியச் சர்க்கரைத் தொழிலை என்ன உபாயங்களைச் செய்து விருத்தி செய்யலாமென்று யோசித்துவருகிற கவர்ன்மெண்டார் பனைவெல்லத் தொழில் ஸம்பந்தமாயும் ப்யூஸா விவஸாயச் சோதனைசாலையில் விசேஷ சோதனைகள் செய்து வருகிறார்கள்.

### Brush Making in Baroda.

பரோடாவில் ப்ரஷ் செய்தல்.—பரோடா ராஜ்யத்தில் பரோடா ப்ரஷ் பாக்டரி என்பதாக ஒரு கம்பெனி ஏற்பட்டு ப்ருஷ்கள் செய்யப்பட்டு வருகின்றன. இதை வீட்டுத்தொழிலாக நடத்திவருகிறார்கள். ப்ரஷுக்கு பின்மரத்தையும் நார்களையும் மயிர்களையும் பெண்டுகளிடத்தில் கொடுத்துவிடுகிறார்கள். அவைகளை பெண்டுகள் தங்கள் தங்கள் வீடுகளுக்குக் கொண்டுபோய் ப்ரஷுகளாகச் செய்து திரும்பி கொண்டுவந்து கொடுக்கிறார்கள். ப்ரஷ் ஒன்றுக்கு இவ்வளவு என்று கூலி கொடுக்கப்படுகிறது.

### A Swadeshi Exhibition.

சுதேசியப் பொருள்களின் காட்சி.—கல்கத்தாவில் இந்த வருஷம் சுதேசி மேலா அதாவது சுதேசிப் பொருள்களின் காட்சி நடக்கப்போவதாக சொல்லப்படுகிறது. இந்தக் காட்சிகளின் நோக்கம் தேசத்தில் செய்யப்படும் கைத்தொழிற் பொருள்களை ஒன்றாய்ச் சேர்த்துக் காட்டி அந்தத் தொழில்களை அதிகமாய் உற்சாகப்படுத்துவது.

### Jail and Private Industries.

ஜெயில் கைத்தொழில்களும், சொந்தக் கைத்தொழில்களும்.—ஜெயில் கைத்தொழில்கள், ஸொந்தக் கைத்தொழில்களோடு அந்தக் கைத்தொழில்களுக்குக் கேடுண்டாகும்படியாய்ப் போட்டிபோடக்கூடாதென்று இந்தியா கவர்ன்மெண்டார் மாகாணக் கவர்ன்மெண்டுகளுக்கு ஒரு ஸர்குலர் அனுப்பி யிருக்கிறார்கள். அதில் அவர்கள் மாகாண கவர்ன்மெண்டுகள், ஸொந்தக் கைத்தொழிகளுக்குக் கெடுதி விளையும்படியாய் ஜனங்களுக்குத் தேவையான பொருள்களை ஸொந்தக் கைத்தொழில் ஸ்தாபனங்களோடு போட்டி போட்டு செய்யாதபடி பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும், அப்படிப் பார்த்துக் கொள்ளாவிட்டால் இந்தியா கவர்ன்மெண்டார் தலையிட்டு நடவடிக்கைகள் நடத்தவேண்டியதா யிருக்குமென்றும் சொல்லியிருக்கிறார்கள்.

### The Weaving Industry.

நெசவுத் தொழில்.—நெசவுத் தொழிலைப்பற்றி ஆனரபில் மிஸ்டர் சாட்டர்ட்டனின் அஸிஸ்டெண்ட் மிஸ்டர் என். சுப்பிரமணிய அய்யர் சில குறிப்புகள் எழுதியிருக்கிறார். அந்தக் குறிப்புகளில் அவர், கோதாவரி, கிருஷ்ணா, செங்கற்பட்டு, நெல்லூர், குண்டூர், இந்த ஜில்லாக்களிலுள்ள நெசவுத் தொழிலாளிகள் 6528 தறிகளை விசைநாடா போட்டு ஓட்டி வேலை செய்கிறார்களென்றும், அப்படி வேலை செய்வதனால் அவர்களுக்கு ஸராஸரியில் 100-க்கு 33 அதிக வரும்படி கிடைக்கிறதென்றும், 100-க்கு 40 தொழிலாளிகள் விசை நாடாத்தறியை உபயோகிக்க ஆரம்பித்துவிட்டார்களென்றும், சொல்லியிருக்கிறார். அவர் எழுதிய குறிப்புகளின்மேல் ஆனரெபில் மிஸ்டர் சாட்டர்ட்டன் தம்முடைய அபிப்பிராயத்தையும் எழுதிச் சேர்த்து அவைகளை அப்படியே கவர்ன்மெண்டுக்கு அனுப்பினார். கவர்ன்மெண்டார் அவைகளை வாசித்துப் பார்த்துவிட்டு தங்கள் முடிவான உத்தரவை பிறப்பித்திருக்கிறார்கள். அதில் கவர்ன்மெண்டார் நெசவுத் தொழிலாளிகளின் நிலைமையை விருத்திசெய்ய மிஸ்டர் சாட்டர்ட்டன் செய்திருக்கும் சிபார்சுகளைத் தாங்கள் பொதுவாய் ஒப்புக்கொள்வதாய்ச் சொல்லிவிட்டிருக்கிறார்கள். தற்போதைக்கு ஒரு வார்ப்பிங் மில்லை அதாவது பாவுநூல் யந்திரத்தை ஒரு காட்சிப் பொருளாய் ஓரிடத்தில் பல தொழிலாளிகளும் வந்து பார்க்கும்படி ஸ்தாபனம் செய்யவேண்டு மென்றும், ஊர் ஊராய் சில நெசவுத்தொழில் வல்லோர் சென்று அங்கங்கேயுள்ள தொழிலாளிகளுக்குப் புது மாதிரி முறைகளை யனுஸரித்து நெசவுத் தொழில் செய்வதால் விளையக்கூடிய நன்மைகளை செய்து காட்டி அவர்கள் மனதில் பதியும்படி செய்ய சில சிப்பந்திகளை ஏற்படுத்தவேண்டுமென்றும், இந்த யோசனைகளுக்குத் தக்கபடி பிரேரணைகள் அனுப்பும்படிக்கும், மிஸ்டர் சாட்டர்ட்டனைக் கேட்டிருக்கிறார்கள். தவிரவும் இப்போதைக்கு ஒரு நெசவுத் தொழில் சாலையை ஸ்தாபிப்பது விரும்பத் தக்கதன்றென்று மிஸ்டர் சாட்டர்ட்டன் வெளியிட்டிருக்கும் அபிப்பிராயத்தைத் தாங்கள் ஒப்புக்கொள்வதாய்க் கவர்ன்மெண்டார் சொல்லி யிருக்கிறார்கள்.

# ECONOMICS.

# பொருளாதாரம்.

## Money Boxes.

**பணப்பெட்டிகள்.**—இங்கிலாந்தில் ராஜாங்கத்தார் ஜனங்களின் செல்வ விர்த்திக்காக ஒரு நூதன உபாயம் செய்திருக்கிறார்கள். தபாலாபீஸ்களில் சிறு பணப்பெட்டிகள் வைத்திருக்கிறார்கள். சிறுவர்கள் தங்கள் பணத்தை அந்தப்பெட்டிகளில் டிபாஸிட் செய்யலாம். ஆனால் சாவிகளை போஸ்டாபீஸாரே வைத்துக்கொள்வதால் பணத்தை நினைத்தபோது திரும்ப எடுத்துக்கொள்ள முடியாது.

## Gold Coinage in India.

**இந்தியாவில் தங்க நர்ணயங்கள் செய்தல்.**—ஸவரன்களென்றும், பவுன்களென்றும், அரை ஸவரன்களென்றும், அறைப் பவுன்களென்றும் சொல்லப்படுகிற தங்க நாணயங்களை இந்தியாவில் செய்வதைப் பற்றிய இந்தியா கவர்ன்மெண்டாரின் பிரேரணைகள் இந்தியா மந்திரி ஆபீஸுக்குப் போயிருக்கின்றன. இந்தியா மந்திரி அவ்விஷயத்தைக் குறித்து நிபுணர்களின் அபிப்பிராயத்தையும் எக்ஸ்சேஞ்ச் பாங்கிகளின் அபிப்பிராயத்தையும் கேட்டு அதன்மேல் தம் அபிப்பிராயத்தை வெளியிடுவார். நிற்க, பஞ்சாபில் எவ்வளவு தங்க நாணயங்கள் வழங்கியும் உபயோகப்பட்டும் வருகின்றன என்பதை அந்த மாஹாண கவர்மெண்டார் விசாரணைசெய்து வருகிறார்களாம்.

விசாரணையின் முக்கிய கருத்து இரண்டு விதப்படும். அவையாவன.—(1) எவ்வளவு தங்க நாணயங்கள் நாணயங்களாகவே வழங்கிவருகின்றன. (2) எவ்வளவு புதைக்கப்பட்டோ அல்லது ஆபரணங்களாக செய்யப்பட்டோ வருகின்றன என்பவையே. மிஸ்டர் கில்லன் என்பவர் தாம் விசாரணை செய்ததில் தங்க நாணயங்கள் நிரம்பவும் வழங்கிவருகின்றன வென்றும், தங்கம் ஏராளமாய் வேறு விதமாக உபயோகப்பட்டு வருவதாயும் சொல்லி யிருக்கிறார்.

பஞ்சாப் கவர்ன்மெண்டார் செய்யும் விசாரணையானது தங்கத்துக்கு எவ்வளவு செலவு இருக்கிறதென்பதையும், பண்டமாற்றுலுக்கு நாணயமாக எவ்வளவு உபயோகப்படுகிறதென்பதையும் வெளிக்குக்கொண்டு வரும். கஜானுக்கள், தபால் ஆபீஸுகள், ரயில்கள் ஆகிய இவைகள் ஸம்பந்தப்பட்ட வரையில் தங்க நாணயங்கள் எவ்வளவு மட்டில் உபயோகப்படுகின்றனவென்று ஸுலபமாய் அறிந்துவிடலாம். ஆனால், தினந்தோறும் கடைகளில் தங்க நாணயங்கள் எவ்வளவு வழங்கி வருகின்றன என்று அறிய வேண்டியதுதான் முக்கியம். மிஸ்டர் கில்லன் தம்முடைய ரிப்போர்ட்டில் தங்க நாணயங்கள் பெரிய தொகைகள் பட்டுப்பாடா செய்யும்போது ஜாஸ்தி செலவாகின்றன வென்று சொல்லுகிறார். இப்போது செய்யப்படும் விசாரணையினால் சில்லரை வியாபாரிகள் எவ்வளவுதூரம் தங்க நாணயங்களை உபயோகிக்கிறார்களென்பது வெளியாக்கும்.

## The Population of Calcutta.

**கல்கட்டாவின் ஜன ஸங்கியை.**—போன வருஷம் எடுக்கப்பட்ட ஸென்ஸஸ்படி கல்கட்டாவின் ஜன ஸங்கியையை உற்றுக் கவனிக்கும்போது ஆண்களின் தொகையே பெண்களின் தொகையைவிட விசேஷமாய் அதிகமா யிருப்பதாய்த் தெரிகிறது. கல்கட்டாவின் மொத்த ஜனத்தொகை 8,96,097 என்றும், அவ்வளவு ஜனங்களில் 6,07,674 ஜனங்கள் ஆண்களென்றும், கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. ஸரியாய்க் கணக்குப்போட்டுச் சொல்லுவதானால் மொத்த ஜனத்தொகையிலுள்ள ஒவ்வொரு பெண் பிள்ளைக்கும் இரண்டு ஆண் பிள்ளைக்கு மேலாக விகிதம் ஏற்படுகிறது. கல்கட்டா ஜனத்தொகையைப் பற்றிய வேறொரு விசேஷமென்னவெனில், அவ்வூரில் 100-க்கு 22 விகிதந்தான் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளா யிருக்கிறார்கள். வங்காள மாகாணத்துக்கு ஏற்பட்டுள்ள விகிதமோ 100-க்கு 38. சென்ற 10 வருஷத்தில் அவ்வூரில் 48,271 ஜனங்கள் அதிகமாயிருக்கிறார்கள். அவர்களில் 41,701 பேர் வேலை செய்யக்கூடிய 15-வயதுக்கு மேல்பட்டு 50 வயதுக்கு மேல் போகாத ஆண்கள். இதற்கு கூலிவேலை செய்து பிழைக்கும் ஜனங்கள் அவ்வூர் வந்து சேர்ந்திருப்பது காரணமெனப்படுகிறது. குறைந்த பட்சம் 1,74,459 வேலையாட்களாவது அவ்வூரில் வந்து குவிந்திருக்க வேண்டுமென்று கணக்கிடப்படுகிறது. சென்ற 10 வருஷங்களிலும் ஹிந்துக்களின் ஜனத்தொகை தான் விருத்தியாயிருக்கிறது. ஹிந்துக்களுள் ஏற்பட்டிருக்கும் ஜனவிருத்தியின் மொத்தத் தொகை 57,649. ஐரோப்பியர்களின் தொகை யதிகப்பட்டிருக்கவில்லை.

# CO-OPERATION.
# கோவாபரேஷன்.

**Co-operative Associations for Telegraphists**

தந்தியாபீஸ் உத்தியோகஸ்தர்களுக்காக கோவாபரேடிவ் சங்கங்கள்.—இந்தியாவிலுள்ள பெரிய தந்தி ஆபீஸ்களிலெல்லாம், அந்த டிபார்ட்மெண்டுக்கு என்றே சில ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஏற்படுத்துவதைப்பற்றி கவலையாய் யோசனையிலிருக்கிறது. இப்படி செய்வதற்கு ஒரு காரணம் என்னவென்றால், தந்தியாபீஸ் உத்தியோகஸ்தர்களில் அநேக சின்ன உத்தியோகஸ்தர்கள் கடன்பட்டிருக்கிறார்கள். இந்த சங்கங்களின் உதவியால் கடன்களை அடைத்துவிடுவதோடு இனிப் புதிதாய் கடன் வாங்க வேண்டியிருந்தால் ஐக்கிய நாணயச் சங்கங்களை விட்டு வெளியே போகவேண்டியதில்லை. அப்பேர்ப்பட்ட சங்கங்களை ஏற்படுத்த இதுவே தகுந்த ஸமயமாயிருப்பதையும் இரண்டாவது காரணமாக கூறலாம். ஏனென்றால், இவர்கள் ஜாமினுக்கக்கொடுத்திருந்த பணத்தை இவர்களுக்கு திருப்பி கொடுத்துவிட்டார்கள். அப்படி திடீரென்று ஒவ்வொருவர் கையிலும் பணம் சேர்ந்திருப்பதினாலே, கொடுபட்ட தொகைகளிலிருந்து தலைக்குக் கொஞ்சமாகப் போட்டு சேர்த்து சங்கங்களை ஏற்படுத்துவது லகுவாயிருக்கும்.

**Co-operative Registrars' Conference.**

ஐக்கிய நாணயச் சங்க ரெஜிஸ்ட்ரார்களின் கான்பரென்ஸ்.—ஐக்கிய நாணயச்சங்க ரெஜிஸ்ட்ரார்களின் கான்பரென்ஸ் இந்த வருஷம் நாகப்பூரில் கூடுமென்று காண்கிறது. அது வருஷந்தோறும் நவம்பர் மாதத்தில் கூடுவது வழக்கம். அந்தக் கான்பரென்ஸில் என்ன விஷயங்கள் யோஜிக்கவேண்டுமென்று எடுத்துக்காட்டும்படி ஐக்கிய நாணயச் சங்க ரெஜிஸ்ட்ரார்கள் கேட்டுவிடப்பட்டிருக்கிறார்கள்.

**Co-operative Conference.**

ஐக்கிய நாணயச் சங்கங்களின் கான்பரென்ஸ்.—செங்கற்பட்டு ஐக்கிய நாணயச்சங்கங்களின் கான்பரென்ஸ் போன மார்ச்சுமாதம் நடந்தபோது இம்மாகாணத்திலுள்ள எல்லா ஐக்கிய நாணயச்சங்கங்களின் கான்பரென்ஸ் ஒன்று வருஷந்தோறும் நடக்கும்படியான காலம் வந்துவிட்டபடியால் இனிமேல் ஐக்கிய நாணயச்சங்கங்களின் மாகாணக் கான்பரென்ஸ் நடத்தவேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. அந்த தீர்மானத்தை நிறைவேற்ற சென்னையிலும் வெளியூர்களிலும் ஐக்கிய நாணயச் சங்கங்களின் அபிவிருத்தியில் அக்கரையுள்ள கனவான்கள் மெம்பர்களாய்ச் சேர்க்கப்பட்ட ஒரு கமிட்டியும் நியமிக்கப்பட்டது. இவ்விஷயத்தைக் குறித்து ஐக்கிய நாணய நிதிச் சங்கங்களின் ரெஜிஸ்ட்ராரே 1910-11-ம் வருஷத்துக்குத் தாம் எழுதியிருக்கும் ரிபோர்ட்டில் ஐக்கிய நாணய நிதிச்சங்கங்கள் ஸம்பந்தமாய் மாகாணக் கான்பரென்ஸ் ஒன்று நடத்துவது உசிதமாகுமெனச் சொல்லியிருக்கிறார். பம்பாய், ஐக்கிய மாகாணம், வங்காளம், இவ்விடங்களில் ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஸம்பந்தமாய் மாகாணக் கான்பரென்ஸ்கள் நடக்கின்றனவென்றும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

**Benefits of Co-operative Societies.**

ஐக்கிய நாணயச்சங்கங்களால் உண்டாகும் நன்மைகள்.—ஸாவுகார்களிடத்தில் சிக்கிக்கொண்டு கஷ்டப்படும் ஏழை விவஸாயிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் பண உதவிசெய்வதே ஐக்கிய நாணயச் சங்கங்களின் முக்கியக்கருத்து. அச்சங்கங்களின் உதவியால் விவஸாயிகள் அதிகவட்டி கொடுக்காமலும் தங்கள் அலுவலுக்கு வேண்டிய பணத்தையும் பெறுகிறார்கள். ஐக்கிய நாணயச் சங்கங்களால் 3 வித நன்மைகளுண்டு; அவைகளாவன:—ஸாவுகார்களின் வலையில் அகப்பட்டுக்கொண்டு இருந்தவர்கள் இந்தச் சங்கங்களினால் கவலையில்லாமலும், சந்தோஷமாயும் ஜீவித்து கொஞ்சம் பணமும் சேர்க்கக்கூடும். விவஸாயிகள் தாங்கள் வாங்கின கடனுக்கு உளவடைத்துக்கொள்ளும்படி தங்கள் மாஸூலை ஸாவுகார்களிடத்தில் ஒன்றுக்கு முக்காலாகக் கொடுக்காமல், தகுந்த விலை வந்தபோது விற்று, கிடைத்த பணத்தைக்கொண்டு வருஷமுழுவதும் ஸுகமாக ஜீவிக்க ஹேதுவாகிறது. 50, 60 வருஷங்களுக்கு முன்னால் நடந்த கல்யாணங்களுக்கு வாங்கின கடனைத் தீர்க்கமுடியாமல் இருந்தவர்கள் ஏதோ சௌரவமாய் கல்யாணங்கள் செய்து பிற்காலத்தில் கடனில்லாமல் வாழ ஹேது உண்டு. நாகரிகமறியாத ஊர்களில் ஐக்கிய நாணயச் சங்கங்களால் சிக்கனம், சுத்தம் முதலிய நற்குணங்கள் பரவி வருகின்றன.

## BANKING.

## பாங்கி வியாபாரம்.

### Banking Legislation.

பாங்கி வியாபாரத்தைப் பற்றி சட்டம் செய்தல்:—பாங்கி என்று பெயர் வைத்துக்கொண்டு லேவாதேவிமட்டும் செய்யாமல் டிப்பாஸிட்டால் கிடைக்கும் பணங்களைப்போட்டு புரட்டி வேறு வியாபாரங்கள் செய்யும் பாங்கிகள் இந்தியாவில் அனேக மிருப்பதாலும், அதனுல் டிப்பாஸிட்டு செய்கிறவர்களுடையவும், ஷேர் ஹோல்டர்களுடையவும் பணங்களுக்கு பலவிதமாய் ஹானி வரக்கூடும். ஆகையால் டிப்பாசிட்டர்களுடையவும், ஷேர் ஹோல்டர்களுடையவும், பந்தோபஸ்தக்காக பாங்கிகள் வேறு வியாபாரத்தில் இறங்கமுடியாமல் ஒரு சட்டம் செய்யவேண்டு மென்று இந்தியாவில் கொஞ்ச நாளாய் பெரிய விவாதம் நடந்துவருகிறது. இதைப் பற்றி இந்தியாவில் மாஹாண கவர்ன்மெண்டார்களெல்லாம் யோசனைசெய்து வருகிருர்கள் என்று ஏற்கனவே சென்ற ஏப்ரல்மீ சஞ்சிகையில் சொல்லியிருக்கிறோம். இதைப்போலவே இங்கிலாந்திலும் அங்கேயுள்ள பாங்கிகளைப்பற்றி ஒரு சட்டம் ஏற்படவேண்டுமென்று விவாதம் நடந்துவருகிறது. சென்ற ஏப்ரல்மீ 24-ம் தேதியன்று பார்லிமெண்டின் காமன்ஸ் சபையில் மேஜர் ஒயிட் என்பவர் தற்காலத்தில் ஜனங்கள் பாங்கி என்று பெயர் வைத்துக்கொண்டு வியாபாரம் நடக்கும் முறையைப் பற்றிய சட்டமானது திருப்திகரமாய் இல்லையென்றும் அதில்மோசம் நடப்பதைத் தடுப்பதற்கு பிரயோஜனப் படவில்லையென்றும், ஏழை ஜனங்கள் மிகுந்த ஸொத்தை அப்படிப்பட்ட பாங்கிகளில் போட்டு இழப்பதை தடுப்பதற்கு ஸாதகமாய் இல்லை யென்றும், ஆகையால் பாங்கிகளில் மோசம் நடவாதபடி சீக்கிரத்தில் ஒரு சட்டம் செய்யவேண்டுமென்றும் தீர்மானம் கொண்டு வந்தார். சென்னை ராஜதானியில் சில வருஷங்களுக்கு முன்னுல் அர்பத்நட் பாங்கியில் அனேக ஏழை ஜனங்கள் பணத்தைப்போட்டு அதை இழந்து நிர்க்கதியானதுபோல் இங்கிலாந்திலும் கார்பெண்டர் என்னும் ஒருவன் சேரிங்க்ராஸ் பாங்க் என்று ஒரு பாங்கியை ஏற்படுத்தி நடத்தி ஏழை ஜனங்களின் பணத்தையெல்லாம் வாங்கி மோசம் செய்துவிட்டான். மேஜர் ஒயிட் இந்த ஸங்கதிகளை எடுத்துக்காட்டி பாங்கி என்பதை இன்னதென்று நிர்தாரணம் செய்வது கஷ்டமாய் இருந்தபோதிலும், தக்க நிபுணர்களோடு யோஜித்தால் அப்படி நிர்தாரணம் செய்வது ஸாத்யமில்லையென்றும் சொன்னுர். அனேக பாங்கிகளில் பாங்கியை நடத்துவோன் டிபாஸிட்பணங்களை மனம் போனபடி செலவழித்தும், ஸ்வயகாரியங்களுக்கு உபயோகப்படுத்தியும்வருவதால் ஜனங்களிடத்திலிருந்து டிபாஸிட்டுவாங்குகிறவன் ஒவ்வொருவனும் பணத்தை திருப்பிக்கொடுக்கக்கூடியவன்தான் என்பதற்கு ஜாமின் கொடுக்கவேண்டும். கம்பெனியாய்ச் சேர்ந்து பாங்கி வியாபாரம் நடக்கும் பக்ஷத்தில் 75 லக்ஷம் ரூபாய்க்குக் குறையாமல் முதல் இருக்கவேண்டுமென்றும், அதில் 4-ல் ஒருபங்காவது வஸூலாயிருக்கவேண்டுமென்றும் சொன்னுர். இந்தமாதிரி விக்டோரியா என்னும் ஐரோப்பிய குடியேற்ற நாட்டில் ஒரு சட்டம் இருக்கிறதாம். அங்கே ஸேவிங்ஸ் பாங்கியென்று ஒருவனும் பாங்கிக்குபெயரேவைக்கக்கூடாதாம். நாமினல் காப்பிடலை அதாவது ஷேர்கள் எடுபடாத கம்பெனியின்மூலதனத்தை மூலதனம் என்று சொல்வது குற்றமாம். பாங்கியின் டைரெக்டர்களுக்காவது, அதிலுள்ள உத்தியோகஸ்தர்களுக்காவது பாங்கியிலிருந்து பணம் கொடுக்கக்கூடாது. டிபாஸிட்டு வாங்கும் ஒவ்வொருவனும் தக்க ஆடிட்டர்களைக் கொண்டு கணக்கை பரிசோதனைசெய்யச்சொல்லி ஒரு பாலன்ஸ்ஷீட் அதாவது வரவுசெலவு லாப நஷ்டக்கணக்கு பிரசுரம் செய்யவேண்டும். இப்படி செய்தால் ஞாயமாய் பாங்கி வியாபாரம் செய்பவர்களுக்கு ஒருவித கஷ்டமும் ஏற்படாது. ஆகையால் ஏழை ஜனங்களை உத்தேசித்தும், வர்த்தக நாணயத்தை உத்தேசித்தும் தாம் கொண்டுவந்த தீர்மானத்தை காமன்ஸ் ஸபையார் அங்கீகரித்து கவர்ன்மெண்டார் அதன்படி நடக்க வேண்டுமென்று மேஜர் ஒயிட் சொன்னுர்.

மிஸ்டர் காஸெல் என்பவர் மேற்சொன்ன பிரேரணையை ஆமோதித்துப் பேசி லைப் இன்ஷியூரென்ஸ் கம்பெனிகளிடத்திலிருந்து டிபாஸிட் வாங்குவதுபோல் பாங்கி வியாபார கம்பெனிகளிடத்திலிருந்தும் டிபாஸிட் வாங்கவேண்டு மென்று சொன்னுர்.

மிஸ்டர் மார்டின் என்பவர் ஷை பிரேரணையைத் தாங்கிப் பேசும்போது கனடாதேசத்தில் ஒரு பாங்கி ஸ்தாபிப்பதாய் இருந்தால் அந்ததேசத்து பார்லி மெண்டின் அனுமதி தேவை என்று சொன்னர். மிஸ்டர் மில்ஸ் என்பவர் சொன்னதாவது, இந்த விவாதத்தில் கவனிக்கவேண்டிய விஷயம் இன்னுன் பாங்கி வியாபாரம் நடத்தலாம் என்பது அல்ல, பாங்கி என்ருல் என்ன என்ன வியாபாரம் செய்ய லாம் என்று நிர்தாரணம் செய்வதே முக்கிய கருத்து. அதிகவட்டிக்கு ஆசைப்பட்டு பணத்தை கண்ட யிடத் தில் போட்டு இழக்கும் ஜனங்களைத் தடுப்பதற்கு ஒரு சட்டமும் செய்யமுடியாது. அப்படிச் செய்தால் எண்ணின காரியம் நிறைவேருமல் தேசத்தின் வியா பாரத்திற்கும் கைத்தொழிலுக்கும் குந்தகமாகவே ஏற்படும் என்ருர்.

கடைசியாய் விவாதத்தை நடத்துவதற்கு கோரம் அதாவது ஸபையிலுள்ளவர்களின் தொகை குறை ந்து போனதால் விவாதம் நின்றுபோயிற்று.

## INSURANCE.

## இன்ஷியூரென்ஸ்.

### Payment of Premium by Cheque.

செக்குமூலமாய் ப்ரீமியம் கொடுத்தல்.—பாங்கி யில் பணம் போட்டு வாங்குகிறவர்களுக்கு "செக்" என் ருல் இன்னதென்று நன்ருய்த் தெரியும். அது செக் கொடுப்பவனுடைய கணக்கிலிருந்து குறிப்பிட்ட மனிதனுக்கு குறிப்பிட்ட தொகையை கொடு என்று பாங்கிக்காரர்களுக்கு உத்தரவிடும் சீட்டு. இந்தச்சீட் டில் யாருக்கு பணம் கொடு என்று சொல்லியிருக்கிற தோ அந்தப்பேர்வழி கையெழுத்துப்போட்டு பாங்கி யில் தாகல் செய்தால் அவர்கள் குறித்த தொகையை கொடுத்துவிடுவார்கள். ஆனல் மேல்சொன்ன சீட்டு எவருக்குப்பணம் சேரவேண்டுமோ அவன் கையில் சேராமல் வேருெருவன் கையில் அகப்பட்டு, அவன் பொய்க் கையெழுத்துப்போட்டுபாங்கியில் பணம் வாங் கிவிடக் கூடுமாகையாலும், அதனல் பணம் கொடுக்க வேண்டியவனுக்கு பணம் கொடுபடாமல் மறுபடியும் பணம் கொடுக்கவேண்டி வரும் ஆகையாலும், இப்ப டிக் செல்லாம் நேரிடாமல்படிக்கு செக்கில் இன்னு ருக்கு இவ்வளவு பணம் கொடுக்கவேண்டுமென்பதை எழுதிவிட்டு செக்கின் குறுக்கே 'க்ராஸ்' செய்து அதா வது இரண்டு கோட்டைக்கிழித்து விடுவது வழக்கம். இப்படி செக்கின்பேரில் கோட்டை இழுத்துவிட் டால் பணம் பெறுகிறவன் அவனை அறிந்த பாங்கி யின் மூலமாய்த் தான் பெறலாம். ஆகையால் க்ராஸ் செய்த செக்கினல் ஒருவனுக்கு பணம் கொடுக்கும் பக்ஷத்தில் அவனுக்கு கட்டாயம் சேர்ந்துவிடும் என்று நிச்சயமாய் எண்ணலாம்.

இங்கிலாந்தில் இன்ஷியூரென்ஸ் கம்பெனிக்கு பணம் கட்டவேண்டிய ஒருவன் மாஸம் மாஸம் ஒரு க்ராஸ் செய்த செக்கை தான் கட்டவேண்டிய ப்ரீமி யத்திற்காக கம்பெனிக்கு அனுப்புவது வழக்கம். ஒரு தடவை ஏதோ தவறுதலாய் க்ராஸ்செய்யாமல் செக்கை அனுப்பவே ஒருவன் அதைத் திருடி கம் பெனிக்காக பொய்க் கையெழுத்துப்போட்டு பணத் தை வாங்கிவிட்டான். கம்பெனி ப்ரீமியத்தைக் கே ட்டபொழுது வழக்கப்படிசெக் அனுப்பிவிட்டதினல் தான் மறுபடியும் ப்ரீமியம் கொடுக்க கட்டுப்பட்ட வனல்ல வென்றும், கம்பெனிக்கு பணம் சேராத போதிலும் அந்த நஷ்டத்திற்கு கம்பெனியே பாத்தி யப்பட வேண்டுமென்றும் பாலிஸி ஹோல்டர் வாதித் தான். அதன்மேல் என்ன தீர்மானம் செய்யப்பட்ட தென்ருல், கம்பெனி தங்களுக்குச் சேரவேண்டிய ப்ரீமியத்தை செக்கின் மூலமாய்ப் பெறுவது வாஸ்த வமே யானுலும் அவர்கள் க்ராஸ் செய்த செக்கின் மூலமாய்ப் பெற்றுவந்தார்களே யொழிய க்ராஸ் செய்யாத செக்கின் மூலமாய்ப் பெற்று வரவில்லை. ப்ரீமியம் கட்டவேண்டியவன் க்ராஸ் செய்யாத செக்கின்மூலமாய் பணம் அனுப்பினதினல் அதனல் விளைந்த நஷ்டத்திற்கு அவனே பாத்தியமாவான் என்று தீர்மானம் செய்யப்பட்டது.

### Insurance Societies in Sweden.

ஸ்வீடன் தேசத்தில் இன்ஷியூரென்ஸ் ஸொஸை ட்டிகள் :—ஸ்வீடன் தேசத்தில் இன்ஷியூரென்ஸ் ஸொஸைட்டிகள் கிராம சங்கங்கள் போல சிறு ஸொஸைட்டிகளாயில்லாமல் பெரியவை யானதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. சில இடங்களில் மட்டும் வேலைசெய்து வரும்பக்ஷத்தில் அடிக்கடி கால்நடைகள் செத்து அதனல் நஷ்டம் கொடு க்கவேண்டியதாய் வருவதற்கு ஆஸ்பதங்கள் அதிக மாயுண்டு. இன்னென்று, கால்நடைகளின் கிரயம் அதிகமாய்ப் போனதால் அங்கங்கேயுள்ள சின்ன ஸொஸைட்டிகள் அப்படிப்பட்ட பெரிய வியாபா ரத்தை நிர்வகிப்பதற்கு சக்தியில்லாமல் போயின.

# EDUCATION.

## வித்யா விஷயம்.

### A Notable Lady Student.

கவனிக்கத்தக்க ஒரு ஸ்திரீ மாணக்கர்.—கல்கத்தா யூனிவர்ஸிடியார் இப்போது நடத்திய மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேரிய தாரணிகுப்தா என்ற பங்காளி.மாதுக்கு 700 மார்க்குகளுக்கு 618 மார்க்குகள் கிடைத்தனவாம். இந்த யூனிவர்ஸிடியில் இவ்வளவு அதிகமான மார்க்குகள் இதுவரை வாங்கினவர் ஒருவருமில்லை.

### Help to Indian Students.

இந்திய மாணவர்களுக்கு ஸகாயம்.—இந்தியாவிலிருந்து இந்தியா கவர்ன்மெண்டின் ஸ்காலர்ஷிப்புப் பெற்றும், ஸொந்தச் செலவின்மேலும் இங்கிலாந்திற்குப்போய் கல்விசற்கும் மாணவர்களுக்கு அதிக ஸௌகரியங்களைச் செய்யவும், அவர்களுடைய உரிமைகளை இன்னும் பலமாய்க் காக்கவும் இந்தியா மந்திரி லார்டு க்ரு ஒரு ஸெக்ரிடரியை நியமித்திருக்கிறார். இப்படி ஒருவரை நியமித்தது இதுதான் முதல்தடவை.

### A Commercial College in Bombay.

பம்பாயில் ஒரு வர்த்தக காலேஜ்.—பம்பாய்க் கவர்ன்மெண்டார் பம்பாயில் வர்த்தக காலேஜ் ஒன்று ஸ்தாபிப்பதற்கு வேண்டிய பொருளுதவி கிடைத்துவிட, அவ்வூரில் ஒரு வர்த்தகக் காலேஜ் ஸ்தாபிக்கப் போகிறார்கள். வர்த்தகச் சங்கங்கள் மூலமாயும், கனதனவான்கள்மூலமாயும், வருஷந்தோறும் கிடைக்கக்கூடிய வரும்படி 23,000 ரூபாயாகும். கவர்ன்மெண்டார் வருஷந்தோறும் ரூபாய் 15,000 திரவிய ஸகாயம் செய்வார்கள். ஸர்கோ. வர்ஜ்ஜீவன்தாஸ் 2½ லட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறார்.

### Education in Villages.

கிராமாந்தரங்களில் வித்தியாப்பியாஸம்.—கிராம பாடசாலைகள் விஷயமாக இப்போது கவர்ன்மெண்டார் கவனித்து வருகிறார்கள். முதலில் அவைகளுக்கு வேண்டிய கட்டிடங்கள் ஸம்பந்தமாக ஒரு உத்தரவு பிரசுரித்திருக்கிறார்கள். பாடசாலை ஸ்தாபிப்பதற்கும், உபாத்தியாயர் வஸிப்பதற்கும் தேவையான ஏற்பாடுகளுடன் தங்களைத் தயாராக்கிக்கொண்டு ஸர்க்காரின் உதவியைக் கோரினால் அப்போது அதைக் கவனித்து பாடசாலைக் கட்டிடத்துக்குத் தேவையான ஸாமான்களை அடைதற்கு ஒத்தாசை செய்வார்கள். கட்டிடத்துக்காக உதவி நூறு ரூபாய்க்கும் ஸாமான்களுக்காக 50-ரூபாய்க்கும் அதிகப்படாதபடி ஸகாயம் செய்வார்கள். இது கிராமத்தின் பொது ஸொத்தாகக் கருதப்பட்டு கிராம முனிஸீப்பின்பொறுப்பிலிருக்கும்.

### Pottery.

மட் பாண்டங்கள் பண்ணுதல்.—நம் நாட்டில் மட் பாண்டங்களை குயவர் என்ற வகுப்பார் பரம்பரை வழக்கமாகத் தமக்குத் தெரிந்தவிதங்களில் செய்து வருகிறார்கள். ஆயினும், தற்காலத்திய புது முறைகளின்படி மெருகு கொடுத்தல், உயர்ந்த விதமாகத் தயாரித்தல், முதலிய நவீன அம்சங்கள் அவர்களுக்கு எட்டாமலிருக்கின்றன. இக்குறையைப் போக்க பம்பாய் கவர்னர் ஸர் ஜார்ஜ் கிளார்க்கின் முயற்சியால் மட்பாண்டங்கள் ஸம்பந்தமாக ஒரு நூதன வித்தியாசாலை ஸ்தாபிதமாயிருக்கிறது. இந்தியாவிற் கிடைக்கும் மண்முதலான ஸாமான்களை ஸயன்ஸ் பிரயோகங்களை உபயோகித்து உயர்ந்த விதமாக ஸாமான்களைத் தயாரிக்கும் வழி போதிக்கப்படும். மேல் நாடுகளிலிருந்து வரும் கோப்பைகள், கிண்ணங்கள், தட்டுகள், முதலியவைகளெல்லாம் ஒருவகை மண்ணினாலேயே செய்யப்படுகின்றன. அவற்றிலுள்ள விசேஷ அலங்காரத்திற்கும் மெருகுக்குமே விரும்பி அவைகள் அபரிமிதமாக வாங்கப்படுகின்றன. பம்பாய் கவர்ன்மெண்டார் ஆரம்பித்திருக்கும் இம்முயற்சியைச் சென்னைக் கவர்ன்மெண்டாரும் பின்பற்றுவது உத்தமமாயிருக்கும்.

### Sir N. Chandravarkar on Teaching.

ஸர் என். சந்தரவர்க்கர் படிப்பிப்பதைப் பற்றி.—கொஞ்சகாலத்துக்குமுன்னே பூனா மாணவர்களைப் பார்த்து ஸர் நாராயண சந்தரவர்க்கர் பேச நேர்ந்தபோது பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் பிள்ளைகளுக்கு வெகுமதிகள் கொடுப்பதனால் அவர்கள் தலை திரும்பிப்போவது போலவே அவர்களைத் தட்டிக்கொடுத்துப் பேசுவதும் அவர்களை கர்வம் கொள்ளும்படி செய்கிறது. பிரம்புதான் அவர்களை நல்வழிப்படுத்துவதாகும். பிரம்படி அதிக நன்மையைச்செய்கிறதென்பதே தன்னுடைய உண்மையான கொள்கையாகுமென்று சொன்னார்.

# ECONOMIC PRODUCTS.

# விலையுள்ள பொருள்கள்.

## Human Hair.

**மனுஷ்யர்களுடைய மயிர்.**—ஐரோப்பா தேசங்களில் மனிதர்களுடைய மயிருச்கு விலை கொடுத்து வாங்குகிறார்கள். ஜெர்மனி தேசத்தில் வயதான பெண்களும் ஸ்திரீகளும் தங்கள் தலைமயிரை வெகு ஜாக்ரதையாக வளர்த்து வருகிறார்கள். இந்த மயிரைக் கத்தரித்து வாங்குவதற்காக பற்பல தேசங்களிலிருந்து பற்பல வியாபாரிகள் வருஷத்திற்கு ஒரு தடவை குறித்த காலங்களில் வந்து வாங்கிப்போகிறார்கள். நல்லவிலை கிடைப்பதால் வர்த்தகர்கள் எப்பொழுது வரப்போகிறார்கள் என்று ஸ்திரீகள் ஆவலாய்க் காத்துக்கொண் டிருப்பார்களாம். ஸாதாரணமாய் ஒரு ஸ்திரீயின் தலை மயிர் 25 தோலா எடை இருக்கும். அதன் விலை ரூ. 22-8-0 முதல் 45 ரூபா வரையில் ஆகும்.

இப்படி வாங்கிய மயிர்களைக்கொண்டு பெல்ட்களும், கைக்குச் சுற்றும் கயிறுகளும், மாலைகளும், கடியாரச் சங்கிலிகளும் செய்யப்படுவதாகத் தெரிகிறது.

சில பேர்கள் இறந்துபோன ஸ்நேகிதர்கள் பந்துக்கள் இவர்களுடைய ஞாபகார்த்தமாக விநோதமான ஸாமான்களை மயிரால் செய்கிறார்களாம். நாடகசாலைகளில் மீசைக்காகவும் தாடிக்காகவும் ரொம்ப செலவாகிறதாகத் தெரிகிறது.

இந்தியர்களுடைய தலைமயிர் தடிப்பாயும் கெட்டியாயும் இருப்பதால் மேல்சொன்ன வேலைகளுக்கு உபயோகப்படுவதில்லை. ஆட்டு ரோமத்தோடு சேர்த்து கம்பளிகள் நெய்ய கொஞ்சம் உபயோகப்படுகிறது. சில காலமாக இந்தியர்களுடைய மயிரைக் கொண்டு ஸமுத்திரத்தில் உபயோகப்படும் கயிறுகள் திரிப்பதாகத் தெரிகிறது. இப்படிச் செய்த கயிறுகள் ராப் பகல் முழுதும் ஸமுத்திர ஜலத்தில் கிடந்தாலும் தென்னைநார், சணல்நார், இவைகளால் செய்த கயிறுகளைவிட ஜாஸ்திகாலம் தாங்குகின்றனவாம்.

## Uses of the Castor Bean.

**கோட்டை முத்தின் உபயோகங்கள்.**—கொட்டைமுத்து எண்ணெய் முக்கியமாக பேதிக்கு சாப்பிடுவதற்கு உதவுகிறது. அதின் நாற்றத்தை அடிப்பதற்கு அதை வேறு சில பதார்த்தங்களோடு கலந்து சாப்பிடுவது வழக்கம். இந்தியாவில் கொட்டைமுத்து எண்ணெயை யந்திரங்களுக்குப் போடுவதுண்டு. ஆனால் அது ரொம்பவும் பிடித்துக்கொள்வதால் சீதள தேசங்களில் அதை யந்திரங்களுச்கு உபயோகிப்பதில்லை. இருந்தபோதிலும், யந்திரங்க்ளில் அதிவேகமாகப் புரண்டு தேய்ந்துபோகும் பாகங்களுக்கு இந்த எண்ணெயை உபயோகிப்பது நலமே. கொட்டைமுத்து எண்ணெயை உபயோகித்து செய்யும் ஸோப்பு நன்றாய் அழுக்கைப்போக்கும். ஆனால், இந்த எண்ணெயை வேறுவித கொழுப்புகளோடு சேர்த்தே உபயோகிப்பது வழக்கம். ஸோப் ஓசெய்வதில் ஆமணக்கெண்ணெயைச் சேர்ப்பதால் ஸோப்பு பளபளப்பாகும். கொட்டைமுத்து யெண்ணெயை கந்தக திராவகம் ஸோடா முதலியவைகளோடு சேர்த்துப் பக்குவப்படுத்தி வர்ண எண்ணெய்கள் செய்கிறார்கள். ரெஸின் என்னும் ஒருவித பாஷாணம் கொட்டை முத்தில் இருப்பதால் கொட்டைமுத்துப் பிண்ணாக்கை மாட்டுக்கு தீனியாகப் போடுவதில்லை. இந்தப் பிண்ணாச்கு முக்கியமாய் எருவாகவே உபயோகப்படுகிறது. இந்தியாவில் ஆமணக்கெண்ணெயை தோலை மெதுவாக்குகிறதற்கு உபயோகப்படுத்துவதுண்டு. எண்ணெய் எடுத்த பிறகும் பிண்ணாக்கில் இன்னும் நிறைய எண்ணெய் இருப்பதால் அதை மிதியடித் தோலை பக்குவப்படுத்துவதற்கும், கட்டிடம் கட்டுவதில் உபயோகப்படும் மரங்களைப் பக்குவப்படுத்துவதற்கும், விறகாகவும், உபயோகப்படுத்துவதுண்டு.

## Maize.

**மக்காச்சோளம்.**—மகம்மதிய வைத்தியர்கள் மக்காச்சோள மாவை அதிக ஸத்துள்ள போஜனம் என்றும், க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்ட ஜனங்களுக்கு அது தகுந்த ஆகாரமென்றும், அதிசாரபேதியால் அவஸ்தைப்படுகிறவர்கள் அதைச் சாப்பிட்டுவந்தால் வியாதி குணமாய் விடுமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். க்ரீஸ் தேசத்திலும் அமெரிக்காவிலும் மச்காச்சோளக் கதிரில் தொங்கும் பட்டுநூல் குஞ்சம் போன்ற வஸ்துவைக் கஷாயம் வைத்துக் கொடுத்தால் நீர்ச்சுறுக்கு முதலான வியாதிகள் குணமாவதாகச் சொல்லுகிறார்கள். மக்காச்சோளக் கதிரில் உள்ள தானியத்தை உதிர்த்த பின்னுள்ள கத்தையை எரித்த சாம்பலுடன் ஸாதாரண உப்புக்கலந்து கொடுத்தால் நெஞ்சுச்சளியும், அதனாலுண்டான கக்குவான் என்னும் இருமலும் குணமாகின்றனவாம்.

# BUSINESS METHODS.
## வியாபார முறைகள்.

### Hindus as Hotel Managers.

ஹிந்துக்கள் ஹோட்டல் மனேஜர்களாக.—இந்தியா, ஸிலோன், ஸுமாட்ரா முதலிய கீழ் தேசங்களில் ஹோட்டல் வைத்திருக்கும் சில ஹிந்துக்கள் ஐரோப்பாவிலுள்ள ஸ்விட்ஸர்லெண்ட் தேசத்திற்குப் போய் அங்கேயுள்ள ஹோட்டல்கள் நடத்தும் விதங்களைப்பார்த்து வருகிறார்களாம். மேற்சொன்ன ஹிந்துக்களுடைய ஹோட்டல்களுக்கு இங்கிலீஷ்காரர்களும் ஜப்பானியர்களுமே விசேஷமாய் வருகிறார்களாம். இவர்களுக்குத் தக்கபடி தங்களுடைய ஹோட்டல்களை முதல்தரமாய் நடத்துவதற்கு தாங்கள் எவ்வளவோ இன்னும் அறியவேண்டியிருக்கிறது என்று சொல்லுகிறார்களாம்.

### The Secrets of Success.

முன்னுக்குவர ரஹஸ்யங்கள்.—இங்கிலாந்தில் பிரசுரமாகும் "ஸ்ட்ராண்ட்" என்னும் மாஸாந்திரப் பத்திரிகையில் மேற்சொன்ன விஷயமாக வியாபாரத்தில் தேர்ந்த அனேகர் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைக் கொடுத்திருக்கிறார்கள். உலகத்தில் தற்காலம் எல்லாரையும் விட பணக்காரரான ராக்பெலர் என்பவர் தாம் முறைதவறாமல் ஒவ்வொரு சிறு ஸமாசாரத்தையும் பார்த்துவந்ததால் தாம் தனவந்தரானதாகச் சொல்லுகிறார். இன்னொருவர் எடுத்த காரியத்தில் வித்தி பெறுவதற்கு அந்தக்காரியத்தில் முதல் முதலாக ஆசையிருக்க வேண்டுமென்றும், பிறகு அதை சுறுசுறுப்பாயும், முறை தவறாமலும் செய்யவேண்டுமென்றும் சொல்லுகிறார். இன்னொருவர், தாம் மனம் போனபடி வேலைசெய்து வந்ததாகச் சொல்லுகிறார். இன்னொருவர், "ஒவ்வொரு இலாகாவின் தலைவனையும், அவனுடைய இலாகாவில் காரியம் ஸரியாய் நடப்பதற்கு பொறுப்புக் கட்டிவிடு" என்றார். இன்னொருவர் முன்னுக்கு வருவதற்கு ஒருவனுடைய திறமையை விட அவனுடைய யோக்யதையே முக்கியமென்றார். திறமை நாடோடியாய் யுள்ளவர்கள் எடுத்த காரியத்தை நிறைவேற்றுவதில் ஸாதாரணமாய் பிடிவாதமுள்ளவர்களாய் இருப்பார்கள். ஆகையால் அவர்கள் கடைசியில் வெற்றிபெற்று விடுகிறார்கள். இன்னொருவர் சொல்லுகிறதாவது, முன்னுக்கு வருவதற்கு இன்னதுதான் வழியென்று சொல்ல முடியாது. அதற்கு உறுதியான தீர்மானமும், தளரா முயற்சியும், இமை கொட்டா கவனமும், ஸமயங்கள் வாய்ந்தபோது அவைகளைக் கைப்பற்றி காரியங்களை ஸாதித்துக்கொள்ளும் திறமையும், வேண்டுமென்றார். இன்னொருவர், "எடுத்துக்கொண்டவேலையை விளையாட்டைப்போல் செய்" என்றார். அதாவது, தொழிலை ஸந்தோஷமாய்ச் செய் என்பது போலும். இன்னொருவர் "வேலை செய்யவேண்டிய காலங்களில் வேலையைச் செய், விளையாடவேண்டிய காலங்களில் விளையாடு" என்றார்.

### Baron Rothschild's Advice.

ராத்ஸ்சைல்டு ப்ரபுவின் போதனை,

கெட்டவர்களோடு சேராதே.

சொன்னசொல் தவறாதே.

பிறத்தியார் பெயரையும் வியாபாரத்தையும் கெடுக்காதே.

நல்ல ஸகவாஸமே செய்.

துர் எண்ணங்களெல்லாம் எண்ணாதே.

என்ன வருமானம் வந்தாலும் பொய் சொல்லாதே.

ரொம்பப் பேர்களோடு ஸ்நேகம் செய்யாதே.

உன் ஸ்திதியும் ஸ்வபாவமும் எப்படியோ அப்படியே வெளியாருக்கும் காண்பித்துக்கொள்.

எப்பொழுதும் மரியாதையாயிரு.

கடன் கொடுக்க வேண்டியிருந்தால் உடனே கொடுத்துவிடு.

ஒரு ஸ்நேகிதன் ஒன்று சொன்னால் அது நிஜந்தானா வென்று கேட்காதே.

பெற்றோர்கள் சொல்லும் புத்தியைக்கேள்.

பணம்போனால் போகட்டும். உன் வித்தாந்தத்தை விடாதே.

எல்லா விஷயத்திலும் மிதமாயிரு.

ஒய்வுகால மிருந்தால் உன்னை மேம்படுத்தக்கூடிய காரியங்களைச் செய்.

அநியாயத்தில் புகாதே.

உன்னுடைய ஆசாபாசங்களை ஜாக்ரதையாய் கவனித்துவா.

யாரைக்கண்டாலும் நமஸ்காரம் சொல்.

பிறர் சொல்வதைக்கேட்டு மனந்தளரவேண்டாம்.

ஸத்காரியத்தில் தீவிரமாய் வேலை செய்.

# FRAUDS AND FAKES.
## மோசங்களும் பித்தலாட்டங்களும்.

### Adulteration of Cotton.

பருத்தியில் கலப்படம் செய்தல்.—விந்து மாகாணத்தில் பருத்திப்பயிர் விசேஷமாய்ச் செய்யப்பட்டு வருவதால் பருத்தியை விற்றுப் பணம்பெறும் விவஸாயிகள் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. என்னவெனில், அவர்கள் பருத்தியை மூட்டைகளாகக் கட்டும்போது அதை ஜலத்தில் நனைத்தும், இலை, புழுதி முதலியவற்றுடன் கலந்தும், கட்டுக்கட்டுகிறார்கள் என்று அறிகிறோம். இந்தப் பேராசையாலும் மூடத்தனத்தாலும் விந்துப் பருத்திக்கு விலை குறைந்துபோயிற்றென்பது ஆச்சரியமல்ல. இந்தக் கெட்ட வழக்கத்தைத் தடுக்கவேண்டும் என்று கவர்ன்மெண்டுக்கு அம்மாகாணத்து ஆங்கிலேய வியாபாரிகள் விண்ணப்பஞ் செய்துகொண்டிருக்கிறார்கள். வியாபாரச் சரக்குகளில் கலப்பு கலக்கக் கூடாதென்று தடுக்கும்படியான சட்டம் இப்போது ஸரியாய் ஏற்பட்டிருக்கவில்லை. ஏற்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், இந்தியத் துறைமுகங்களில், ஜப்பான் துறைமுகமாகிய டோக்கியோவில் செய்யப்படுவது போல செய்யப்பட்டு வரவேண்டும். என்னவெனில், கவர்ன்மெண்ட் அறிந்த ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு, அந்தச்சங்கத்தார் ஏற்றுமதியாகும் சரக்குகளில் சில மூட்டைகளைப் பரிசோதித்துப் பார்த்து அவர்களின் முத்திரையுடன் அவைகள் கப்பலேற்றப்படவேண்டும். ஜப்பான் வர்த்தகர்கள் சில காலத்திற்கு முன்னால் இந்திய வர்த்தகர்களைப் போல மூடத்தனமாய் சரக்குகளில் கலப்புக் கலந்து விற்கத் தலைப்பட்டார்கள். அதனால் அன்னிய தேசங்களில் ஜப்பானியச் சரக்குகளில் நம்பிக்கையில்லாமல் அவைகளின் விலை குறைந்துபோயிற்று. அதைக் கண்ட ஜப்பானியத் தேசாபிமானிகளும் கவர்ன்மெண்டும் சேர்ந்து, மேற்கண்டவாறு துறைமுகங்களில் சங்கங்களை ஸ்தாபித்து அவைகளின் முத்திரையுடன் சரக்குகள் கப்பலேற்றவே இப்போது மறுபடியும் அச்சரக்குகளுக்கு ஸரியான விலை கிடைக்கிறது. அப்படியே இந்தியாவிலும் நேரிடும். இந்திய வர்த்தகர்கள் அறியாமையினாலும் பேராசையினாலும் கலப்புக் கலப்பதால் வீண் நஷ்டப்படுகிறார்கள். இந்த வழக்கத்தைத் தடுப்பது எவ்விதத்திலும் அவசியம்.

### Cement.

சிம்மட்டி.—இந்தியாவில் ஸர்க்கார் கட்டிடங்களுக்கும் ரெயில்வே கட்டிடங்களுக்கும் விலை உயர்ந்த தினுஸு சிம்மட்டியை உபயோகிக்கிறார்கள். மற்றவர்கள் இரண்டாந்தரமும் மலிவுமான தினுஸுகளை உபயோகிக்கிறார்கள். ஆகையால் இந்தியாவில் உயர்ந்த தினுஸு சிம்மட்டியும் மட்டதினுஸு சிம்மட்டியும் விலையாகின்றன. இன்னும் சொல்லப்போனால் மட்டதினுஸு அதிகமாக செலவாகிறது. எல்லாரும் இங்கிலீஷ் சிம்மட்டியையே வாங்கப் பிரியப்படுகிறார்கள். வேறு ஐரோப்பிய தேசங்களிலிருந்து இறக்குமதியாகும் சிம்மட்டிகள் ஒரேமாதிரி இருக்கிறதில்லை யாகையால் அதைப்பற்றி ஜனங்கள் ஸந்தேகப்படுகிறார்கள். இருந்தபோதிலும் அவைகளை இந்தியாவில் விற்பதற்கு பலவித யுக்திகள் செய்யப்படுகின்றன.

முதலாவது, இங்கிலீஷ் அல்லாத வேறு ஐரோப்பிய தேசத்து சிம்மட்டிக்கு இங்கிலீஷ் பெயரைக் கொடுக்கிறார்கள். லண்டன் நகரத்தில் அவைகளை விற்பதற்கு ஏஜெண்டுகளை நியமிக்கிறார்கள். அந்த ஏஜெண்டுகளின் பெயரை பளிச்சென்று தெரியும்படியாய் லேபிலில் அச்சடித்து சிம்மட்டிப் பீப்பாயின் மேல் ஒட்டிவிடுகிறார்கள். இந்த லேபில்கள் உருவத்தையும் நிறத்தையும் பார்த்தால் இங்கிலீஷ்காரர்கள் உபயோகிக்கும் லேபில்களைப்போலவே காண்கின்றன. சட்டப்படி இதர தேசங்களிலிருந்து இறக்குமதியாகும் சரக்கு ஒவ்வொன்றின் மேலும் எந்த தேசத்தில் செய்யப்பட்டதென்பது குறிப்பிடவேண்டியது கட்டாயமாய் இருந்தபோதிலும், தேசத்தின் பெயரை ரொம்ப சின்ன எழுத்தில் அச்சடித்து, லண்டன் ஏஜெண்டின் பெயரையும், அதில் முக்கியமாய், லண்டன் என்னும் வார்த்தையை பெரிய எழுத்தில் அச்சடித்து விடுவதால், ரொம்பவும் கவனித்து பார்த்தாலொழிய லண்டன் சரக்கென்றே முதலெடுப்பில் தோன்றும்.

ஒரு ஸமயம் பம்பாயில் ஒரு வேலைக்கு ஏராளமாக சிம்மட்டி வேண்டியிருந்தது. அந்த வேலைக்குஅதிபதிகள் இங்கிலீஷ் சிம்மட்டியைத் தவிர வேறொன்றையும் வாங்குவதில்லை என்று சொன்னதால், எப்படியா

வது இங்கிலீஷ் அல்லாத வேறு ஐரோப்பிய சிம்மட்டிகளையும் வாங்கச்செய்யும்படி ஒரு லண்டன் ஏஜெண்ட் ஒரு யுக்தி செய்தார். அதாவது, அவர் இங்கிலீஷ் சிம்மட்டியையே பீப்பாய்களில் அடைத்து இங்கிலீஷ் அல்லாத வேறு சிம்மட்டி என்று பரீக்ஷித்துப்பார்க்கச்சொல்லி, அந்த சிம்மட்டி நன்ருய் இருந்தபடியால் அதை நம்பி அந்த அயல்தேசத்து சிம்மட்டிகளுக்கே ஆர்டர் கொடுத்தார்கள். ஆனால் அவைகள் ஒரு தினுசைப்போல வருவதில்லை. இருந்தாலும் அவைகளில் நல்ல வியாபாரம் நடந்தே வருகிறது. இவ்விதமாக மோசம் நடக்காதபடி எந்த தேசத்திலிருந்து சிம்மட்டி செய்துவருகிறதோ அந்த தேசத்தின் பெயரை பளிச்சென்று தெரியும்படியாய் லேபிலில் அச்சடிக்கும்படி கட்டாயப் படுத்தவேண்டுமென்றும், வேறு சில நிபந்தனைகள் ஏற்படுத்தவேண்டுமென்றும், ஒரு பத்திரிகை எழுதுகிறது.

---

# MACHINERY AND INVENTION.
## யந்திரங்களும் நூதன கற்பிதமும்.

### An Electric Cradle.

மின்ஸார சக்திந் தொட்டில்:—மின்ஸார சக்தியினுல் எவ்வளவோ அற்புதவேலைகள் நடந்து வருவதைக் கண்ணுல் பார்க்கிறோம். தற்போது பாரிஸ் நகரத்தில் மின்ஸார சக்தி யமைக்கப்பட்ட தொட்டில் ஒன்று செய்திருக்கிருர்களாம். அத்தொட்டிலில் படுக்கவைக்கப்படும் குழந்தை அழுதால் உடனே மின்ஸார யந்திரங்கள் வேலைசெய்யத் தொடங்கி தொட்டிலை அசக்கி ஆட்டிக்கொண்டிருக்குமாம். அப்போது அதில் அமைக்கப்பட்டுள்ள கிராமபோன் வாத்தியம் தாயார் பாடுவதுபோல பாட ஆரம்பித்து குழந்தையின் அழுகை ஒய்ந்து நித்திரை செய்யும் வரைக்கும் தொட்டிலாடிக்கொண்டும் கிராமபோன் பாடிக்கொண்டு மிருக்குமாம். இதனுல் தாய்மார்களுக்கு எவ்வளவோ அநுகூலமாயிற்றென பாரிஸ் பத்திரிகை யொன்று சந்தோஷங் கொண்டாடுகிறது.

### Silk Out of Flesh.

மாமிஸத்தினின்று பட்டுநூல் செய்தல்:—ஜெர்மானிய தேசத்தின் ரஸாயன சாஸ்திரியார் ஒருவர், இறந்துபோன குதிரை மாமிஸத்தை சில திராவகங்களால் பிரித்து, நூலிழைபோன்ற மெல்லிய பளபளப்பான வெண்மையான நரம்புகளை உண்டுபண்ணுகிருர். அவைகளைச் சில ஸாமான்களால் பதனிட்டு பக்குவப்படுத்தி பட்டாக அமையும்படி செய்கிருர். இப்பட்டு நூற்கள் காட்டிலுள்ள பட்டுப்பூச்சிகளால் உண்டாக்கப்படும் பட்டைப் போலவும், இரண்டு அங்குலம் நீளமுள்ளவைகளாகவும், உறுதியாகவும், நீடித்த காலம் இருக்கக்கூடியவையாகவும் இருக்கின்றனவாம். இப்பட்டு நூற்களால் செய்த வஸ்திரங்களின் இழை நெருக்கமாக இருக்கின்றமையால், காற்று, ஜலம் முதயலிவைகளை வெளிப்போகாமல் வைத்துக்கொள்ள பைகள் முதலியன செய்யக்கூடியதாக இருக்கிறது. ஆகாச கூண்டுகள் முதலியவைகளுக்கு இப்பட்டுநூற்பை முதலிய அழகுகள் மிகவும் உபயோகமானவை.

### Synthetic Rubber.

சேர்க்கை ரப்பர்.—பைஸிக்கில்களுக்கும்மோட்டார்கார்களுக்கும் இன்னும், சில கைத்தொழில்களுக்கும் ரப்பர் அதிகமாக தற்காலத்தில் உபயோகப்படுவதால் அதன் விலை ஜாஸ்தியாய்விட்டது. ஆகையால் வாஸ்தவ ரப்பரைப்போலவே, மூலப்பொருள்களைச் சேர்த்து சேர்க்கை ரப்பர் செய்யக்கூடாதா என்று இங்கிலீஷ் ரஸாயன சாஸ்திரிகளும், ஜெர்மன் தேசத்து ரஸாயன சாஸ்திரிகளும் கண்டுபிடிக்க முயன்று வந்தார்கள். ஸமீபத்தில் இங்கிலீஷ் ரஸாயன சாஸ்திரிகள் சேர்க்கை ரப்பர் செய்வதைக் கண்டுபிடித்து அதற்கு பேடெண்டு என்னும் உரிமைப்பத்திரங்களையும் வாங்கிவிட்டார்களாம். இந்த சேர்க்கை ரப்பர் செய்வதற்காக புதிதாய் ஒரு கம்பெனி ஏற்படப்போவதாகவும் தெரியவருகிறது.

### A Calculating Machine.

ஒரு கணக்குப்போடும் யந்திரம்.—இங்கிலாந்தில் மிஸ்டர் விலியம் ஸ்கூலிங் என்பவர் ஒரு கணக்குப் போடும் யந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிருர். அது ரெயில்வே கம்பெனிகளுக்கும், நிலக்கரிவெட்டி எடுக்கும் கம்பெனிகளுக்கும் ரொம்ப உபயோகமாயிருக்கும். இந்த யந்திரத்தால் கூட்ஸ் வண்டிகளில் ஏற்றிய ஸாமான்கள் இவ்வளவு நிறை யிருக்கின்றனவென்று ஸுலபமாய்க் கண்டுபிடித்து விடலாம். வண்டியின் நம்பரையும், அதில் ஸாமான்கள் ஏற்றுவதற்குமுன் வண்டி மட்டும் என்ன நிறையிருக்குமோ அதையும், ஸாமான் ஏற்றியபிறகு வண்டியின் நிறையையும், வரிசையாக வைத்து யந்திரத்திலுள்ள ஒரு கைபிடியைப் பிடித்திழுத்தால், ஸாமானின் நிறையை யந்திரம் இவ்வளவு என்று காண்பித்து அதை ஒரு காகிதத்தில் டைப் அடித்தும் விடுகிறது. இந்த யந்திரத்தை உபயோகிக்கும் பக்ஷத்தில் தப்புக்கணக்கு போட நியாயமில்லை.

# LAW.

## சட்டம்.

### Joint Family.

அவிபக்த குடும்பம்.—ஒரு ஹிந்து தகப்பனும் அவர் பிள்ளைகளோ அல்லது ஹிந்துஸகோதரர்களோ ஒருமிக்கச் சேர்ந்திருந்து எல்லாரும் ஸம்பாதிக்கும் பக்ஷத்தில் அந்த ஸொத்தெல்லாம் பூர்வீக ஸொத்து இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவிபக்த குடும்ப ஸொத்தேயாகும். ஒரு தகப்பனும் அவருடைய பிள்ளைகளும் சேர்ந்து இருக்கும்பொழுது அவர்களுக்கு உள்ள ஸொத்து அவிபக்த குடும்ப ஸொத்தா இல்லையா என்று சொல்வது அதை ஆண்டுவருபவர்களுடைய எண்ணத்தைப் பொருத்ததாகும். ஒரு தகப்பனுக்கு ஒரு ஆஸ்தியும் இல்லாமல் அவன் ஸம்பாதிக்க ஆரம்பித்து பணம் சேர்க்க ஆரம்பிக்கும்பொழுது அவனுக்கு குழந்தைகளிருந்து அவைகளை அவன் போஷித்து ஸம்ரக்ஷணை செய்கிறதைமட்டும் கொண்டு அவன் ஸம்பாதிக்கும் ஸொத்தையெல்லாம், அவிபக்த குடும்ப ஸொத்தாக எண்ணக்கூடாது. ஆனால் குழந்தைகள் பெரியவர்களாகி அவர்களும் தகப்பனுருடன்கூட வியாபாரம் செய்தோ அல்லது வேறுவிதமாயோ ஸம்பாதித்து வரும்பக்ஷத்தில் ஸொந்த ஸம்பாத்யமாயுள்ள ஸொத்து எப்பொழுது அவிபக்த குடும்ப ஸொத்தாக மாறிற்று என்று சொல்வது கஷ்டந்தான். அதைக் கண்டுபிடிக்க ஒரு வழியுண்டு. தகப்பனும் பிள்ளைகளும் எல்லாரும் ஸம்பாதித்த ஸம்பாத்யங்களை யெல்லாம் ஒன்றாகச் சேர்த்து காரியங்களை நடத்தும் பக்ஷத்தில் அது அவிபக்த குடும்ப ஸொத்தேயாகும். ஸகோதரர்களாய் இருந்தாலும் இப்படியே. குடும்பத்திற்கு தலைவர் இருக்கும் பக்ஷத்தில் பாகம் கேட்கிறவன் பாகம் கேட்கும்பொழுது ஸொத்து எந்த ஸ்திதியிலிருக்கிறதோ அதிலேதான் பாகம் கேட்கலாம். ஏனென்றால் பாகம் கேட்கிறவர்கள் மேஜர்களாய் இருக்கும் பக்ஷத்தில் குடும்பத்தலைவன் செய்த செலவுகளை யெல்லாம் ஒப்புக்கொண்டதாகவே எண்ணவேண்டும். பாகஸ்தர்கள் மைனர்களாக இருக்கும்பக்ஷத்தில் மேற்சொன்ன ரூலே எப்பொழுதும் பிரயோகிக்கமுடியாது.

### Unchaste Wife.

கற்பில்லாத பெண்சாதி.—இந்து லா பிரகாரம் கற்பில்லாத விதவை இறந்த புருஷன் ஸொத்துக்கு வார்ஸாக அடைய பாத்தியமில்லை யென்றாலும், புருஷன் இருக்கும்பொழுது அவனுக்கு தெரிந்து கற்பில்லாமல் நடந்துவந்த ஸ்திரீ விதவையாகும் பக்ஷத்தில் கற்பில்லாதவளானதால் புருஷன் ஸொத்தை அடையபாத்தியமில்லை என்று சொல்லமுடியாது. ஏனென்றால், புருஷன் இருக்கும்பொழுது ஒரு ஸ்திரியை அன்னியர்களை கற்பு இல்லையென்று சொல்லவிடுவது ரொம்ப கெடுதல்களுக்கு ஹேதுவாகும்.

### Suits by the Secretary of State.

இந்தியா மந்திரியின்பேரால் வியாஜ்யங்கள்:—சென்ற ஏப்ரல் மாதம் கூடிய சென்னை சட்டஸபை மீட்டிங்கில் காலஞ்சென்று விட்ட திவான்பகதூர் ஆர். ரகுநாதராவ் கவர்ன்மெண்டுக்காக இந்தியா மந்திரியின் பேரால் வியாஜ்யங்கள் போடுவதற்கு முன்னே அட்வோகேட் ஜெனரலோ, அல்லது வேறொரு சட்ட உத்தியோகஸ்தரோ, இவர்களின் உத்தரவில்லாமல் போடக்கூடாதென்று கொண்டுவந்த தீர்மானத்தை, அதுவிஷயமாய் கவர்ன்மெண்டார் ஓர் உத்தரவு பிறப்பிப்பார்களென்று உறுதி கூறப்பட்டதன்மேல், வாப்ஸ் வாங்கிக்கொண்டார். கவர்ன்மெண்டார் உறுதி கூறினபடி இப்போது ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தியா மந்திரியின் பேரால் கவர்மெண்டுக்காக வியாஜ்யம் போடுவதற்கும் அவர்கள்மேல் போடப்பட்டிருக்கும் வியாஜ்ய ஸம்பந்தமாய் எதிர்க்கட்சி யாடுவதற்கும் முன்னே, ஜில்லா கலெக்டர்களும் ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர்களும் கவர்மெண்ட் ப்ளீடரைக் கலந்து யோசிக்கவேண்டுமென்றும், ரெவினியூ போர்டாரும் இலாகாத் தலைவர்களும் வெளியூர் வியாஜ்யங்களாயிருந்தால் சென்னை கவர்ன்மெண்ட் ப்ளீடரையும், சென்னை நகரைச்சேர்ந்த வியாஜ்யங்களா யிருந்தால் கவர்ன்மெண்ட் ஸொலிஸிடரையும் கலந்து யோசிக்கவேண்டுமென்றும் உத்தரவு செய்திருக்கிறார்கள். இலாகாத் தலைவர்கள் அட்வோகேட் ஜெனரலைக் கலந்து யோசிக்கலாமென்றும், ஆனால் வெகு முக்கியமான கேஸ்களைப் பொறுத்தமட்டில் தான் அவரைக் கலக்கவேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

# MEDICINE.
## வைத்தியம்.

### Improvement of Sanitation.

ஸுகாதார அபிவிருத்தி.—1912-13-ம் வருஷத்தில் ஸுகாதார அபிவிருத்திக்காக 22.68 லட்சம் ரூபாயை, டிஸ்ட்ரிக்டு போர்டுகளுக்கும் முனிஸிபாலிடிகளுக்கும் பங்கிட்டுக் கொடுத்துச் செலவழிக்கும்படியாய் சென்னை கவர்ன்மெண்டார் ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்.

### Vegetarianism.

சாகபட்சணம்.—லண்டன் கந்தமூலபலாதி பட்சண சங்கத்தின் ஸெக்ரிடரி மிஸ்டர் எப். நிக்கல்ஸன் என்பவர் தாம் சென்ற 21 வருஷங்களாக மச்சம், மாமிசம், கோழி என்னும் இவைகளை சாப்பிடுவதில்லையென்றும், தினந்தோறும் பதினொன்கு மணி நேரம் வேலை செய்வது தமக்கு வழக்கமாயிருக்கிறதென்றும் சொல்லுகிறார். 1908-ம் வருஷத்தில் ஆறுமாதகாலம், லண்டன் பட்டணத்தில் 10,000 குழந்தைகளுக்கு மிஸ்டர் நிக்கல்ஸனால், பரீக்ஷார்த்தமாய், மரக்கறி யுணவளிக்கப்பட்டு வந்ததென்றும், மற்றோரிடத்தில் லண்டன் கவுண்டி கவுன்ஸிலால் அதே தொகையுள்ள குழந்தைகளுக்கு மாம்ஸ உணவு கொடுக்கப்பட்டு வந்ததென்றும், ஆறு மாதம் முடிந்தவுடன் மேற்படி இருவகுப்புக் குழந்தைகளையும், வைத்திய சாஸ்திரிகளைக்கொண்டு பரீக்ஷித்துப் பார்த்ததில், மரக்கறி யுணவுண்ட குழந்தைகள் மற்றவைகளைப்பார்க்கிலும், அதிக தேக ஸௌக்கியமுள்ளனவாயும், சரீரகனம் அதிகமானவைகளாயும், பலசாலிகளாயும், தோல் சுத்தமானவைகளாயுமிருந்தனவென்றும் ருஜுவாயிருக்கிறது. ஆகவே மாம்ஸ உணவிலும், மரக்கறியுணவு சிறந்ததென்று ஏற்படுகிறது.

### Remedies for Scorpion Sting.

தேள்கொட்டு மருந்து.—1 தீக்குச்சியை நீரில் சந்தனக்கல்லில் தேய்த்துக் கொட்டின விடத்தில் தடவவும். 2 புளித்த காடியை கொட்டினவிடத்தில் அடிக்கடி வைத்துத் தேய்க்கவும். 3 கொட்டப்பட்டவர் திடீரென ஒருவருடனும் சொல்லாமல் நீர் நிறைந்த தடாகத்திலோ ஆற்றிலோ அமிழ்ந்து ஸ்நானஞ்செய்யவும். 4 ஸரியானபடி ஜபித்த மந்திரமும் உருவெடுத்து வேலைசெய்யுமென்பது பெரியவர்களது துணிபாதல் பற்றியும், மெஸ்மரிஸம் என்னும் இக்கொள்கையினால் தேள் கொட்டலும் நிவாரணமாகிறது. (5) தேள்கொட்டின இடத்திலே படிகாரத்தை எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்துப் பற்றுப்போட்டு அதற்குச் சமீபத்தில் நெருப்புத் தழலைப் பிடித்தால் வலி நின்றுவிடும். (6) உள்ளிப்பூண்டின் தோலை யெடுத்து விட்டு பருப்பை யரைத்துக் கொட்டினவிடத்திலே பற்றுப்போட்டால் இருபது நிமிஷத்தில் வலி நின்றுவிடுமாம். இரண்டாந்தரம் போட்டால் அங்கு புண்ணாய்விடுமாம். நண்டு வாய்க்காலி கொட்டினாலும் இந்தப் பற்றினால் குணப்படுமாம். தேகப் போக்குப் படியும் ஸமயோசிதப்படியும் செய்துகொள்ளவும்.

### Gingelly Oil.

நல்லெண்ணெய்.—நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், தேங்காயெண்ணெய், இலுப்பெண்ணெய், கடலையெண்ணெய் முதலிய எத்தனையோ எண்ணெய்களிருந்தாலும், நல்ல என்ற பேர் எள்ளிலிருந்து எடுக்குந் தைலத்துக்கே கொடுக்கப்பட்டுப் பிரவித்தமாய் நல்லெண்ணெய் என்று விளங்குகிறது. இந்த நல்லெண்ணெயின் குணம் மஹாவிசேஷமானது. பதார்த்தகுண சிந்தாமணிக்காரர் இதைப்பற்றி கூறும் செய்யுள்.

> புத்திநயனங் குளிர்ச்சி பூரிப்பு மெய்ப்புளகம்
> சத்துவம்காந்தி தனியிளமை—மெத்தவுண்டாம்
> கண்ணோய் செவிநோய் கபாலவழல் காசமிவை
> புண்ணோய்போம் எண்ணெய்யாற் போற்று

ஆகையால் இந்த எண்ணெயைத் தேய்த்து தலை குளித்துவந்தால் மேல்கூறிய ஸுகத்தை யடையலாம். இந்தக் காரணத்தைக் கொண்டே "வைத்தியனுக்குக் கொடுக்கும் காசை வாணியனுக்குக் கொடு" என்று நம்முடைய முன்னோர்கள் கூறுகின்றார்கள். ஆகையால் நல்லெண்ணெயை நமது தேசத்திலுள்ள எல்லோரும் வாரம் இருமுறை முழுகிவந்தால் எந்த வியாதிக்கும் பயப்படவேண்டியதில்லை. 'சனிநீராடு, சனி புத நீராடு,' என்ற பழமொழிகளும் இதற்காகத்தான் கூறப்பட்டிருக்கின்றன. பம்பாயில் ப்ளேக் வியாதி வந்தகாலத்தில் நல்லெண்ணெயைக் கையாண்டு கொண்டிருந்த வாணியத்தெருவில் அந்தநோய் பிரபலமடைய வில்லை என்று ஓர் இங்கிலீஷ் டாக்டர் வெகு உறுதியாய்ச் சொன்னதாக நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

**205 Burglaries.**

205 கன்னக் களவுகள்.—சில தினங்களுக்கு முன்பு லண்டன் போலீஸ் கோர்ட்டில், போர்ச்சலர் என்ற ஆங்கிலேயன் ஒருவன் திருட்டுக் குற்றத்திற்காக விசாரணை செய்யப்பட்டு மூன்று இடத்தில் அவன் திருடினதாக ருஜு ஏற்பட்டதின்பேரில் அவன்மேல் அக்குற்றங்கள் சாட்டப்பட்டன. குற்றப்பத்திரிகையை வாசித்தவுடன் குற்றவாளி உளம் பூரிக்க நகைத்துப் பின்வருமாறு கூறினன் :—

" மூன்று கன்னக்களவா ! இது ஒரு அதிசயம் ! என் பதினேழாவது வயதிலிருந்து இது வரையில் 205 கன்னக்களவுகள் செய்திருக்கிறேன். எனக்கு இப்பொழுது வயது இருபத்தைந்துதானுகிறது.

மாஜிஸ்ட்ரேட் இவன் கூறியதை நம்பாமல், வாடகைக்கு வண்டியொன்றை யமர்த்தி அதில் குற்றவாளியையும் ஏற்றிக்கொண்டு அக்களவுகளை ரூபிக்கும்படி அழைத்துச் சென்றார்.

அவன் மாஜிஸ்ட்ரேட்டை தான் திருடிய 205 இடங்களுக்கும் அழைத்துப்போகவில்லை. ஆனல் அநேக இடங்களுக்கு அழைத்துப்போய் விசாரிக்கும்படி செய்ததில் ஒவ்வொன்றும் உண்மைதானெனத் தெரியவந்தது. இவ்வளவு கன்னக்களவுகளிலும் தனக்குக் கிடைத்தது 1000 பவுன் தான் என்றும், திருட்டு ஸொத்துக்கு அதிகவிலை கொடுப்பவரில்லை யென்றும் சொல்லிக்கொண்டான்.

திருடிய ஸாமான்களின் விவரக்கணக்கும் மாஜிஸ்ட்ரேட்டினிடத்தில் கொடுத்தானும். அதாவது :—

990-கடியாரங்கள்.

1432 காதிலணியும் ஆபரணங்கள்

192 டெஜன் வெள்ளிக்கரண்டிகளும் முள்ளுகளும்.

32 விளக்குகள்.

93 ஸெட் சட்டைப் பொத்தான்கள்.

கடியாரங்கள் மாத்திரம் குறைந்தது 2000 பவுனுக்கு அதிகமாகவே பெறக்கூடியவை யென்றும், மிகக் குறைந்த விலைக்கு விற்று விட்டதாகவும் கூறினன். போலீஸாரும் கோர்ட்டாரும் இவனைப் பார்ப்பதும் நகைப்பதுமாக யிருந்தார்களாம்.

**Make the Change Wanted.**

வேண்டிய மாறுதலைச்செய்.—கராச் கடை கிருஷ்ணய்யர் சுக்கஞ்செட்டி வைரப்பசெட்டியாருக்கு அனேகவித உயர்ந்த வஸ்திரங்களை வியாபாரத்திற் சனுப்பினர். வைரப்ப செட்டியார் ஒர் வஸ்திரத்தை யெடுத்துக்கொண்டு " இது எனக்குப் பிடித்திருக்கிறது. இதில் எவ்வித மாறுதல்கள் வேண்டுமென்று நான் சொல்லுகிறேனே அவ்விதமாறுதல்களைச் செய்து தருவீர்களா ?" வெனக் கேட்டார். ஸரியென்று ஒப்புக்கொண்டதின் பேரில் வைரப்ப செட்டியார் அந்த ஐம்பது ரூபாய் வஸ்திரத்தை இருபத்தைந்து ரூபா யென்று மாற்றி விலைக்குக்கொடுக்கச் சொன்னர்.

**The Teacher's Mistake.**

உபாத்தியாயர் செய்த குற்றம்.—ஓர் பையன் இரண்டு மூன்று மாதங்களாக கணக்கில் ஏராளமான மார்க்கு வாங்கிக்கொண்டுவந்து தன் தகப்பனுருக்குக் காண்பித்தான். தகப்பனும் பையன் ஸாமர்த்தியத்தைக் கண்டு மெச்சினர். திடீரென்று பையன் ஸைபர் வாங்கிக்கொண்டு வந்தான்.

தகப்பன்.—நீ இப்பொழுது ஸைபர் வாங்கிக்கொண்டு வருவதற்குக் காரண மென்ன ?

பையன்.—உபாத்தியாயர் செய்த பிசகால்.

தகப்பன்.—அதெப்படி ?

பையன்.—என் பக்கத்திலுட்கார்ந்து கொண்டிருந்த பையனை உபாத்தியாயர் வேறிடத்திற்கனுப்பி விட்டார்.

**The Doctors' Ways.**

வைத்தியர்களின் வழி—மெலிந்த வியாதியஸ்தன்:—ரத்தமும் சதைப்பற்றுதலும் உண்டாவதற்கு ஏதாவது மருந்துகொடுங்கள்.

வைத்தியன்.—(ஒர் பெரிய சீஸாவிலிருந்து மருந்தையெடுத்துக் கொடுத்து) கோதுமை, ரொட்டி, உருளைக்கிழங்கு, பழங்கள், மாமிசங்கள் முதலியவற்றை ஏராளமாகப் புசி. அதிக சிரமத்தைக்கொடுக்கக்கூடிய தேக அப்பியாசங்களைச் செய்யாதே !

கொழுத்த சரீரமுள்ளவன்.—என்னிடத்தில் சதை அதிகமாக விருந்து தொந்திரவு செய்கிறது. ஏதாவது மருந்து கொடுங்கள்.

வைத்தியன்.—(அதே பெரிய சீஸாவிலிருந்து மருந்தை யெடுத்துக்கொடுத்து) கோதுமை, ரொட்டி, உருளைக்கிழங்கு, பழங்கள், மாமிசங்கள், இவைகளைச் சாப்பிடாதே. அதிக சிரமத்தைக்கொடுக்கக்கூடிய தேக அப்பியாசங்களைச் செய்.

# CURIOSITIES.
## விநோதங்கள்.

### A Child with Four Eyes.

நான்கு கண்களுடைய குழந்தை.—சில தினங்களுக்கு முன் பாலக்காட்டைச்சேர்ந்த காயல் மன்னம் என்னுமிடத்தில் ஒரு ஸ்திரீக்கு நான்கு கண்களுள்ள ஒரு குழந்தை பிறந்திருக்கிறதாம். திரளான ஜனங்கள் வேடிக்கை பார்க்கச் செல்கின்றார்களாம்.

### A Luminous Tree.

ஜோதி விருக்ஷம்.—ப்ரேஸில் தேசத்தில் 7 அடி உயரமுடைய ஒரு ஜோதி விருக்ஷ மிருக்கிறது; அதன் பிரகாசம் ஒருமைல் தூரம் வீசுகிறது. அந்தப் பிரகாசத்தில் எவ்வளவு சிறு வெழுத்துள்ள புஸ்தகத்தையும் படிக்கக்கூடுமாம்.

### Needle.

ஊசி.—தைக்கும் ஊசி 1545-ம் வருஷத்தில் உபயோகத்திற்கு வந்தது.

### The First Newspaper in England.

இங்கிலாந்தில் முதல் பத்திரிகை.—இங்கிலாந்தில் 1588-ம் வருஷத்தில் முதல் பத்திரிகை வெளிவந்தது.

### The Telescope.

தூரதிருஷ்டிக் கண்ணடி.—தூரதிருஷ்டிக்கண்ணடி 1590-ம் வருஷம் கண்டுபிடிக்கப்பட்டது.

### Glass Windows.

கண்ணடி ஜன்னல்கள்.—8-வது நூற்றாண்டில், இங்கிலாந்தில் கண்ணடி ஜன்னல்கள் வைக்க ஆரம்பித்தார்கள்.

### Men of Years.

தீர்க்காயுசுள்ள மனிதர்கள்.—ஜெர்மனி தேசத்தில் பில்ஸ் என்னும் பிரபு தமது புத்தகத்தில் கீழ்க்கண்டபடி குறித்துவைத்திருக்கிறார்:—

| | ஜீவித்திருந்த வருஷம் |
|---|---|
| டிமோகிரேட்டிஸ், இவர் பலகலை பயின்றுள்ள பாவலராயிருந்து | 109 |
| ரோம்பட்டணத்திலுள்ள ஓர் ஸ்திரீ நாடகசாலையில் நடித்து | 104 |
| மேற்படி மற்றொரு ஸ்திரீ | 112 |
| ஒரு பிரான்ஸ் தேசத்திய நாடகமாடும் ஸ்திரீ | 111 |
| ஒரு சுவேத தேசத்து போர்வீரர் 97 வருஷம் இராணுவத்திலமர்ந்து உத்தியோகம் செய்தார். அக்காலத்தில் 17 யுத்தங்களுக்குச் சென்றிருந்தார். கொஞ்சகாலம் கடுமையாய் சிறையில் அடைபட்டிருந்தார். இவர் இரண்டாவது விவாஹம் 110-வது வயதில் செய்துகொண்டு | 112 |
| அபிங்ஹாம் என்னும் ஓர் ஆங்கிலேய படைவீரர் | 140 |
| தாமஸ் பார் என்பவர் வெகு சாந்த முள்ளவர். சார்ல்ஸ் மஹாராஜாவால் கொடுக்கப்பட்ட ஓர் நல் விருந்தருந்தியதால் இறந்தார். இவர் | 152 |
| நார்வே தேசத்து டிரேக்கன்பர்க் என்பவர் துருக்கியர்களால் 15 வருஷம் காவலில் வைக்கப்பட்டிருந்தார். இன்னும் அடிமையாகவு மிருந்து 130-வது வயதில் விவாஹம் செய்துகொண்டார் இவர் | 146 |
| ஜோசப் செரிங்டன் என்பவர் இறக்கும்பொழுது, இவர் முதல்குமாரனுக்கு வயது 108. இரண்டாவது குமாரனுக்கு வயது | 100 |
| ஹங்கேரி தேசத்தின் பாபின் என்பவர் 1720-ல் இறக்கும்பொழுது அவர் மனைவியின் வயது 164. அவர் குமாரன் வயது 115. இவர் | 172 |
| ஒரு ருஷியா தேசத்தவர் 1623ம் ஆல் பிறந்து, 1825 ஆல் இறந்தார் | 202 |
| ஒரு ஆங்கிலேய பயிர்த்தொழில் செய்பவர் தமது நூற்றிருபதாவது வயதிலும் கடினமான வேலை செய்துகொண்டிருந்தார். இவர் | 172 |
| ஒரு ஆங்கிலேய பிரபு 1500-வருஷத்தில் பிறந்து 1670-வருஷத்தில் இறந்தார். | 170 |
| ஒரு டென்மார்க் தேசத்தவர் 1624-வருஷத்தில் பிறந்து 1770-வருஷத்தில் இறந்தார். இவரது முதல் விவாஹம் 111-வது வயதில் நடந்தது. அப்பொழுது அவர் மனைவியின் வயது 60. இவர் | 146 |

ஹங்கேரிய நாட்டிலுள்ள ஒருவர் 1724-வருஷத்தில் இறந்தார். அப்பொழுது அவருக்கு வயது 185.

தாமஸ் கார்ன் 1588-வருஷத்தில் பிறந்து 1795 வருஷத்தில் இறந்தார். இவர் 207

இவரது ஜீவிய சரித்திரம் ஸெண்ட் லெனார்டு சர்ச்சில் (கோவிலில்) குறித்திருக்கிறதாம்.

# HINTS AND RECIPES.
## யுக்திகளும் முறைகளும்.

### Sinking Wells.

**கிணறுகள் வெட்டுதல்.**—கிணறுவெட்ட உத்தேசிப்பவர்கள் ஆகர் முதலிய ஆயுதங்களைக்கொண்டு பரிசோதித்துப் பார்ப்பதோடு தண்ணீர் அகப்படுமா என்பதை வேறு விதமாயும் கண்டுபிடிக்கலாம். உதாரணமாக, ஒரு நேரான கோட்டில் இரண்டு நல்லதண்ணீர்க்கிணறுகளிருந்தால் அவைகளுக்கிடையிலும் நல்லதண்ணீர்க்கிணறு அகப்படுமென்று அனுமானிக்கலாம். அந்த நேர் கோட்டுக்குத் தூரமான இடத்திலும் நல்லகிணறு வாய்க்கக்கூடும்.

### To Convert Sour into Sweet Pomegranates.

**புளிமாதளையைத் தித்திப்பு மாதளையாக்கும் வகை.**—சிலப்பயிராக நாட்டப்பட்ட புளிமாதளங்கன்றுகளை ஒரு வருஷத்துக்குப்பின் அக்கன்றுகளைச் சுற்றிவரவுள்ள வேர்களிலே செறியத்தக்கதாக ஒரு மாஸ காலத்துக்குத்தினந்தோறும் மனுஷமூத்திரத்திற்காற்படி ஊற்றிவர, அம்மாதளை காய்க்கும்பொழுது இனிப்பதிகமான காயாகக் காய்க்குமென்று அறிகிறோம். இதைச் சோதனைச்செய்து பார்க்கவும்.

### Lime.

**எலுமிச்சை.**—எலுமிச்சையில் புளிப்பு அதிகம் இருக்கவேண்டுமென்று பயிரிடுகிறார்கள். அதைச் செடியிலே பழுக்கவிட்டால் இனிப்பு உண்டாகிறது. முற்றின காய்களை ஜாக்கிரதையாய்ப் பறித்து காற்று நுழையாத அறைகளில் வேர்வை விடும் வரையில் அடைத்து வைத்து வேர்வையைத் துடைத்து நிழலில் உலர்த்தி வைக்க, புளிப்பு அதிகமுண்டாகிறது. தோல் மெல்லியதான பழங்களில் புளிப்பதிகம்.

### Fly Trap.

**ஈப்பொறி.**—குண்டான்போலும் வாயகன்ற பாத்திரத்திற் கழுத்துமட்டத்துக்கு நீரூற்றி, நீரின்மேற்பரவியிருக்கத்தக்கதாக ஆமணக்கு எண்ணெயிற் சிறிது ஊற்றி, காகிதமட்டையொன்றைச் சேகரித்து அதன் மத்தியிலே கால்அங்குல நீளக் குறுக்களவுள்ள துளை வைத்து, அத்துளையைச் சுற்றிவரத் தகரப்பாவில் அல்லது தேனிலே ஒருபக்கத்தில் மாத்திரம் பூசி, அப்பக்கம் உட்பக்கமாக இருக்கத்தக்கதாகக் குண்டான் வாயைமுழுதும் மூடிவிட, காகிதமட்டையிற் பூசிய இனிப்பைத்தேடி அம்மட்டையிலுள்ள துளைவழியாய் ஈக்கள்பறந்து உள்ளே துளைக்குள்ளே செல்லும்பொழுதே குண்டானின் நீரின்மேலுள்ள எண்ணெயில் விழுகின்றன. பால் இனிப்புப் பண்டம் முதலியவை பிரயோகிக்கப்படுமிடங்களிலே இவைகள் பீடையை விளைக்கின்றனவாதலாலும், ஒட்டுநோயைப் பரவச் செய்வதில் இவைகள் பிரதான ஹேதுக்களாயிருப் பதினாலும் இவைகளைக் குறைப்பதற்கு இது லகுவான வழியேயாம்.

### To Make Grey Hair Dark.

**நரைத்தமயிர் கருக்க.**—டி. எஸ். ஸ்வாமிநாத செட்டியார் எழுதுகிறார்:—மிருதார்சிங்கி களஞ்சி 3, சாக்குகட்டி என்று சொல்லுகிற சீமைச்சுண்ணாம்பு களஞ்சி 2, தாளித்தகல் சுண்ணாம்பு களஞ்சி 1, ஆகக் களஞ்சி 6, நன்றாக தூள்செய்து தண்ணீர்விட்டு, அரைத்து, குழம்புபோல் கிளாஸில் எடுத்து வைத்துக்கொண்டு, ராத்திரிக்கு, படுக்கைக்கு போகுமுன் நரைத்த ரோமத்தில் நன்றாய்த்தடவி வெற்றிலையாவது அல்லது வாழை இலையாவது மேலேகட்டி இலை விழாதபடி துணியால்கட்டி படுத்துக்கொள்ள வேண்டியது. காலமே யெழுந்து இலையையும் துணியையும் அவிழ்த்துபோட்டு விட்டு மருந்துதடவின ரோமத்தில் நன்றாக நல்லெண்ணெய் தடவி கசக்கித்தேய்த்து பிழிந்துவழித்தால் மருந்தும் யெண்யுமாகச் சேர்ந்து களிபோல வரும். அதை தூரப்போட்டு விட்டு அரைத்த சீயக்காய் தேய்த்து ஸ்நானஞ்செய்து போடவேண்டியது. ஷை ரோமத்தை உணர்த்திபார்த்தால் கைக்கு முரமுரப்பா யிருந்தால் கொஞ்சம் பதமாகயெண்ணெய் தடவி சீப்பினால் சீவிக்கொள்ள வேண்டியது. இதில் கண்டமுறைப்படி தவறாமல் செய்துபார்த்தால் ரோமமானது ஆச்சரியமாய் சாலவித்தை செய்ததுபோல கருப்பு பட்டுக்குச்சுக்கு ஸிகராகவும், நவ்வபழம்போல பளபளப்பாயிருக்கு மென்பதில் ஆட்சேபணை இல்லை, நான் ஷை முறைப்படி செய்து அனுபோகத்தில் உள்ளதை பிழைக்கும் வழியில் தெரிவித்திருக்கிறேன்.

# ECONOMIC LITERATURE.

## பொருளாதார ஸம்பந்தமான பிரசுரங்கள்.

### Agricultural Proverbs.

வேளாண்மையை யோட்டிய பழமொழிகள்.

1. அகல உழுகிறதைவிட ஆழ உழு.
2. ஆடி ஒரு குழி அவரை போட்டால், கார்த்திகை ஒரு சட்டிக் கறி.
3. ஆடிப்பட்டம் தேடிவிதை.
4. ஆடிப்புழுதி ஆவணி சேறு.
5. ஆடு மிதியாக்கொல்லையும் ஆணில்லாப்பெண் ணும் வீண்.
6. ஆழ உழுதாலும் அடுக்க உழு.
7. ஆனி அடைசாரல், ஆவணி முச்சாரல்.
8. ஆனி அரை ஆறு, ஆவணி முழு ஆறு.
9. உடையவன் பாராப் பயிர் ஆகுமா.
10. உரம் ஏற்றி உழுவு செய்.
11. உழவுக்கேற்ற கொழு.
12. உழுகிறநாளில் ஊரைவிட்டுப் போனால், அறுக் கிற நாளில் ஆளே தேடவேண்டாம்.
13. உழுது அலர்ந்தது பழுதாகாது.
14. எருது இளைத்தால் எல்லாம் இளைக்கும்.
15. ஐப்பசி மாதத்தில் நடவு நட்டால் ஆனைக்கொ ம்பு விழும்.
16. ஐப்பசி மாதத்து வெயிலில் அன்று உரித்த தோல் அன்றைக்கே காயும்.
17. ஓதுவாரெல்லாம் உழுவான தலைக்கடையில்.
18. களை எடுக்காதான் கபோதி.
19. குடி உயர முடி உயரும்.
20. குடியானவனே முடியானவனே.
21. குப்பை உயர்ந்தால் குடி உயரும்.
22. கொள்ளு வெள்ளாமை கொள்ளை வெள்ளாமை.
23. கார்த்திகை பிறந்தால் கைநாற்றை எறிந்துவிடு.
24. சித்திரை பத்துக்குமேல் பிறந்த பெருங்காற்று ஐப்பசி மாதத்திலடங்கும்.
25. சித்திரை மழை பெய்தால் பொன்னேர் கட்ட லாம்.
26. சித்திரை மாதத்துப் புழுதி பத்தரை மாத்துத் தங்கம்.
27. சோளப்பயிரை மேய்ந்த எருதுக்கு ஸ்வர்க்க லோகம் வேண்டுமா ?
28. தண்ணீரில்லாத வெள்ளாமையும் தானுழாத நிலமும் தரிசு.
29. தாயைப் பார்த்து மகளைக் கொள் பாலைப்பார் த்து பசுவைக் கொள்.
30. தென்றலும் வாடையும் சிறக்கும் பயிர்கள்.
31. தை ஈனுப்புல்லுமில்லை, மாசி ஈனு மரமும் இல்லை.
32. நடவுக்குத் தூவல் நாலிலொரு பங்கு.
33. நாத்து முப்பது, சாத்து முப்பது.
34. நீர் பெருத்தால் நெல் சிறுக்கும்.
35. பங்குனி மழை பத்துக்கும் நஷ்டம்.
36. பயிர் பார்க்காமல் கெட்டது கடன் கேட்காமல் கெட்டது.
37. பரணி பெய்தால் தரணி விளையும்.
38. பருவத்தில் பெற்ற சேயும், புரட்டாசிப் பாதி சம்பா நடுகையும்.
39. பருவத்திலே பயிர்செய்.
40. பாழில் போட்டாலும் பட்டத்தில் போடு.
41. புரட்டாசி பெய்ந்தாலும் பேயும், காய்ந்தாலும் காயும்.
42. மாசி எள் மடியிற் பணம்.
43. மாசிப்பனி மச்சையும் துளைக்கும்.
44. மாரி தென்றல் அடித்தால் மாட்டைவிற்று ஆட்டை வாங்கு.
45. மார்கழி மழை மண்ணுக்குதவாது.
46. முடிச்சு முடிச்சாய் நட்டால் கோட்டை கோட் டையாய்க் காய்க்குமா (அல்லது) விளையுமா !
47. மூலமழை பெய்தால் நவதானியத்துக்குக்கேடு.
48. யமன் ஒருவனைக் கொல்லும் ஏற்றம் ஐவரைக் கொல்லும்.
49. விசாகத்தில் மழை பெய்தால் பயிர்களுக்குப் புழு உண்டாகும்.
50. விதை முதல் அகப்பட்டாலும் வேளாண்மை யை விடாதே.
51. வேலியிட்டு வேளாண்மையிடு.
52. வையாசி எள் வாயிலே.

# TAMIL LITERATURE.
## தமிழ்க் கல்வி.

**The Life of H. M. King-Emperor George V.**

ஐந்தாவது ஜார்ஜ் சக்ரவர்த்தியின் சரித்திரம்.
விலை அணா. 8

**Indian Fairy Tales.**

இந்திய மாயா விநோதக் கதைகள்.
விலை அணா. 4

இவை சென்னை திருவல்லிக்கேணி மாதர் மனோ ரஞ்சனி பத்திராதிபர் வி. எஸ். ராமஸ்வாமி ஐயரால் எழுதப்பட்டவை.

ராமஸ்வாமி ஐயர் பெண்களுக்கும், குழந்தைகளுக்கு மான பத்திரிகையை நடத்திவருகிறவரானதால், அவர் எழுதியிருக்கும் இரண்டு புஸ்தகங்களும் வய தானவர்களோடு, சிறுவர்களும் சிறுமிகளுங்கூடப் படித்துப் பயன்பெறலாம். இந்தப் புஸ்தகங்கள் பள்ளிக்கூடங்களிலும் உபயோகமாயிருக்கும்.

**Mohan Das K. Ghandi.**

மோகன்தாஸ் காந்தி.—இது தென் ஆபிரிக்காவில் இந்தியர்களுக்குத் தலைவராயிருந்து இந்தியர்கள் அங்கேபடும் பாடுகளுக்கு மோட்சம் பிறக்கவேண்டு மென்று மனம் சலியாமலும், தன்னன்மையைப்பாரா மலும் உழைத்துவரும் இந்திய தேசாபிமானிகளில் ஒருவராகிய காந்தியின் சரித்திரம். இந்த சரித்தி ரத்தைப் படிப்பதால் தேசாபிமான மென்பது இன்ன தென்பதும், தன் மறுப்பென்றால் இன்னதென்பதும் நன்றாய் விளங்கும். தென் ஆபிரிக்கா இந்தியர்களின் நிலையைப்பற்றி பெரிய விவாதங்கள் நடந்து வருவ தால் அதை நடத்திவரும் தலைவரின் சரித்திரம் ஸம யோசிதமாயே வெளிவந்திருக்கிறதென்று சொல்ல வேண்டும். புஸ்தகத்தின் விலை அணா 8. அதை எழு திய ஆர். நாராயணஸாமி ஐயரிடத்தில், சென்னை அரண்மனைக்காரன் தெருவு, 44 நெம்பர் வீட்டில் கிடைக்கும்.

**The Madura Tamil Sangam.**

மதுரைத் தமிழ்ச்சங்கம்.—இச்சங்கத்தின் 11-வது வருஷோற்சவம் மே மாதம் 24-ந் தேதியன்று சேது பதி ஹைஸ்கூலில், ராமநாதபுரம் ட்ரெஷரி டிப்டி கலெக்டர் ராவ்பகதூர் எம். ஆறுமுகம்பிள்ளை அவர் கள் அக்ராஸனத்தின் கீழ் கொண்டாடப்பட்டது.

தமிழ் உலகத்திற்கு இச்சங்கம் மிகவும் உபயோக மாக இருந்து வருகிறதென்றும், அச்சுக்கூடம், சாப் பாடு போட்டுக் கல்வி கற்பிக்கும் கலாசாலை, மாதாந் தர சஞ்சிகை, இவைகள் இச்சங்கத்தில் ஏற்பட்டு ஸரிவர நடந்து வருகின்றன வென்றும், இந்த வரு ஷம் வரவுசெலவுபோக மிகுதியாக இருக்கும் 800 ரூபாய் மிகவும் சொற்பத்தொகை யென்றும், தமிழ றியும் ஒவ்வொருவரும் காலணா வீதம் உதவிவந்தால் இச்சங்கத்திற்குப் பெருத்தலாபமாகும் என்றும், இச் சங்கத்திற்கு பண்டு வஸூல் செய்வதில் உபாத்தி மார்கள் உழைத்துவர வேண்டுமென்றும், சேர்மென் பேசினார். 25-ந்தேதி யன்று, அநேக உபந்யாஸங்கள் செய்யப்பட்டன.

**The Imperial Durbar at Delhi.**

ஜார்ஜ் சக்ரவர்த்தியின் டெல்லி தர்பார்.— சென்னை சுதேசமித்திரன் ஆபீஸில் கிடைக்கும். விலை அணா 12.

1911-ம் வருஷம் டிஸம்பர் மாஸம் 12-ந் தேதி யன்று டெல்லியில் ஜார்ஜ் அரசரின் மகுடாபிஷேக தர்பார் விஷயங்களை இந்தியர்கள் எப்பொழுதும் ஞாப சத்தில் வைத்திருப்பார்கள். ஜார்ஜ் சக்ரவர்த்தி வந்து போன காலத்தில் நடந்த விவரங்களையும், அவர் நமக்கு என்ன செய்திகள் சொல்லி நமக்குத் தைரிய மும், சந்தோஷமும் உண்டாகும்படி செய்தாரோ அந்தப்பேச்சுக்களையும், டெல்லி தர்பார் நடத்தினபோது அவர் நம் பிரஜைகளுக்கு அருளின நன்கொடைகளையும், நம்மவர் மனதில் அழியாமலிருக்கும்படி செய்ய, அவைகளை ஒரு புஸ்தக ரூபமாய் எழுதிப் பிரசுரிப்பது ஜனங்களுக்குச் சந்தோஷமா யிருக்கு மென்று இந்தப் புஸ்தகம் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. டெல்லிக்குத் தலைநகரை மாற்றினதையும், வங்காளப்பிரிவினையை வேறுபடுத்திப் புது மாகாணங்கள் உண்டு பண்ணினதையும பற்றி இந்தியா கவர்ன் மெண்டுக்கும் லார்ட் க்ரூவுக்கும் நடந்த கடிதப்போக்கு வரத்து இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. சக்ரவர்த்தியின் பேச்சுக்கள் வெகு ஜாக்கிர தையுடன் கஷ்டப்பட்டு தமிழில் மொழி பெயர்த்து எழுதப்பட்டிருக்கின்றன. சக்ரவர்த்தி தம்பதிகளும், குழைந்தைகளும், லார்ட்க்ரூ, லார்ட் ஹார்டிஞ்ஜ், டெல்லிதர்பார் கொலுமண்டபம், முதலிய படங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மொத்தத்தில், இந்த புஸ்தகம் நம் தமிழ்தேசத்தில் ஒவ்வொரு குடும்பத்தி லும் ஞாபகார்த்தமாகவும் அதன் பிரயோசனத்தை உத்தேசித்தும் இருக்கவேண்டும்.

# MISCELLANEOUS NEWS.
## நாநா ஸங்கதி.

### Bachelors and Maids in Simla.

ஸிம்லாவில் கல்யாணமாகவேண்டிய 275 ஆங்கில ஸ்திரீகளிருக்கிறார்களென்றும், ஆனால் பிரம்மசாரிகளோ 63 பேர்தான் என்றும் ஒரு பத்திரிகை எழுதுகிறது.

### The Prices Enquiry Committee.

அகவிலை விசாரணைக் கமிட்டி:—உணவுப் பொருள்களின் விலையேற்ற விசாரணைக் கமிட்டி யார் வேலையை அடுத்த மார்ச்சுமாதத்தோடு முடித்து விடுவார்களென்று சொல்லுகிறார்கள்.

### Lottery Circulars.

லாட்டரிகள் ஸம்பந்தமான ஸர்க்குலர்கள்.—இந்தியன் போஸ்டாபீஸ் ஆக்டுபிரகாரம் லாட்டரிகள் ஸம்பந்தமான ஸர்க்குலர்களை உள்நாட்டுத் தபாலில் அனுப்புதல் தடுக்கப்பட்டிருக்கிறது. தபாலில் போய்க் கொண்டிருக்கும் உருப்படிகளில் இவ்வித ஸர்க்குலர்களடங்கி யிருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டால் அந்தத் தபால் உருப்படிகள் அனுப்பினவருக்கு வாபஸ் செய்யப்படும்.

### An Indian Lady Graduate.

பி. ஏ. பரீட்சையில் தேர்ந்த ஒரு இந்திய ஸ்திரீ. மிஸ் எலிஸபெத் ஸாமுவேல் பி. ஏ. பரீட்சைக்கு சரித்திரபாடம் எடுத்துக்கொண்டு அதில் முதல் வகுப்பில் தேர்ந்திருக்கிறார். அவர் மெட்ரிக்குலேஷன் பரீட்சையில் தேர்ந்த இரண்டாவது வருஷத்திலேயே எப், ஏ. பரீட்சையில் தேர்ந்துவிட்டார். அவர் திருவனந்தபுரம் மகாராஜா பெண் பாடசாலையில் வாசித்து வந்தார். மதுரையிலுள்ள தென் இந்திய தமிழ்ச் சங்கத்தார் அந்த ஸ்திரீயின் தமிழ்ப் பாண்டியத்தைக் கண்டு, அவருக்கு ஒரு மெடல் சில வருஷங்களுக்கு முந்தி பரிசளித்திருக்கிறார்கள்.

### A Lady Municipal Commissioner,

ஒரு ஸ்திரீ முனிஸிபல் கமிஷனர்.—டார்ஜீலிங்க் முனிஸிபாலிடியில் மிஸ்ஸஸ் ஹேம்லாலா ஸர்க்கார் என்ற இந்திய மாது ஒரு கமிஷனராயிருந்து வருகிறார். அந்த அம்மாள் டார்ஜீலிங்கு முனிஸிபாலிடியில் ஒரு கமிஷனர் ஸ்தானம் வகிக்க ஆரம்பித்தது முதல் அந்த முனிஸிபாலிடி நடத்திவரும் நடவடிக்கைகளில் ஒருவித சுறுசுறுப்பு காணப்பட்டு வருகிறதென்றும், அந்த அம்மாள் அவ்வூர் முனிஸிபல் கமிஷனர்களில் ஒரு முக்கியஸ்தரா யிருந்து வருகிறாரென்றும் ஒரு கல்கட்டா பத்திரிகை கூறுகிறது. அந்த அம்மாள் பண்டித சிவநாத் சாஸ்திரி என்ற வங்காள நாட்டு ஸம்ஸ்க்ருத வித்வானின் குமாரத்தியாம்.

### Lord Clive's Statue.

லார்ட் க்ளைவின் உருவச் சிலை.—இந்தியாவில் ஆங்கில அரசாட்சியை நிலை நிறுத்தியவரும், ஆரம்பத்தில் வெகு ஸாதாரண குமாஸ்தாவாயிருந்து பின் உலகப் பிரஸித்தி பெற்றவருமான லார்ட் க்ளைவுக்கு இந்தியாவில் இதுவரையில் சிலா ஸ்தாபனம் செய்யப்படவே இல்லை. சில காலத்திற்குமுன் இவருக்கு ஒரு சிலா விக்ரஹம் செய்துவைக்க வேண்டுமென்று முயற்சி செய்ததின்மேல், இங்கிலாந்திலிருந்து க்ளைவின் சிலாவிக்ரஹம் கல்கத்தாவுக்குப் பத்திரமாய் வந்து சேர்ந்துவிட்டது. இப்பொழுது அது கல்கத்தா கவர்ன்மெண்ட் ஹவுஸில் வைக்கப்பட்டிருக்கிறது. அதை விக்டோரியா மிமோரியல் ஹாலில் வைப்பதாய் உத்தேசம். ஆனால் அந்த ஹால் இன்னும் கட்டி முடியவில்லையாதலால் முடிந்ததும் அங்கு அது ஸ்தாபிக்கப்படும்.

### Madrasis in the Tata Iron Works.

டாட்டா இரும்பு வேலைகளில் சென்னையார்.—பெங்கால், நாக்பூர் ரயில்வேயில் காலிமட்டி ஸ்டேஷனுக்கு அருகில்தான் டாட்டா இரும்பு வேலைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவைகளை அமெரிக்கன் எஞ்ஜினீர்களும் ஜெர்மென் எஞ்ஜினீர்களும் நடத்தி வருகிறார்கள். ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் இரண்டு பேருக்குமேல் இல்லை. இவைகளை யொட்டி குமாஸ்தாக்களும் மற்ற விதமாய்க் கடித வேலைகள் செய்யும் சிப்பந்திகளுமாய்ப் பலபேர் வேலை செய்வதில், சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் 200-பேர் இருக்கிறார்களென்றும், அவர்களில் 30-பிராம்மணர்களென்றும் சொல்லப்படுகிறது. கன்ஸ்ட்ரக்ஷன் டிபார்ட்மெண்ட் என்ற ஒரு இலாகா முழுவதும், ஒரு சிறு மலையாள இஞ்ஜினீர் மிஸ்டர் கே. எஸ். பாண்டலே பி. ஏ. என்பவரால் நடத்தப்பட்டு வருகிறது.

### The Richest Man in the World.

உலகத்தில் மகா பணக்காரன்.—அமெரிக்கா ஐக்கிய நாட்டில் இப்போது 51 குபேரர்களிருக்கிறார்கள். இவர்களது சொத்தின் தொகை உலகத்திலுள்ள சொத்துக்களில் மூன்றிலொரு பங்காகுமாம்.

உலகமுழுவதிலும் மிக்க தனவானென்று பிரவித்தி பெற்ற ராக் பெல்லர் என்பவர் தற்சமயம் 18 கோடி பவுன் முதலாக வைத்து நடத்தப்பட்டு வருகிற ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனியின் தலைவர். ஒருகாலத்திலும் இவ்வளவு ஆஸ்திவான் உலகத்தில் இருந்ததில்லை யென்று சொல்லப்படுகிறது. ராக் பெல்லருக்கு வருஷம் ஒன்றுக்கு ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பேனியிலிருந்து, 80 லட்சம் பவுனும், மற்ற சில்லரையாக 40 லட்சம் பவுனும் வரும்படி வருகிறது. இப்படியாக, வருஷம் ஒன்றுக்கு 1 கோடியே 20 லட்சம் பவுன் வரும்படி வருகிறது, அதாவது வாரம் ஒன்றுக்கு 230,869 பவுன் அல்லது நிமிஷம் ஒன்றுக்கு 23 பவுன் வரும்படி கிடைக்கிறது.

### The Pudukottai Municipality.

புதுகோட்டை முனிஸிபாலிடி.—புதுக்கோட்டை டவுனை ஒரு முனிஸிபாலிடி யாக்கிவிட்டார்கள். அதற்கு ஒரு சம்பளம் பெற்ற சேர்மன் நியமிக்கப் படுவார். அவருக்கு உதவியாய் 8 கவுன்ஸிலர்கள் புதுக்கோட்டை தர்பாரால் நியமிக்கப்படுவார்கள். அவர்களில் சிலர் உத்தியோகஸ்தர்களாயும், சிலர் உத்தியோகப் பற்றில்லாதவர்களாயு மிருப்பார்கள். இப்போது 4 உத்தியோகஸ்தர்க ளல்லாதவர்களும் கவுன்ஸிலர்களாய் நியமிக்கம்பட்டிருக்கிறார்கள். வீட்டு வரி உத்தியோகவரி முதலானவரிகள் புதுப்பிக்கப் பட்டிருக்கின்றன. அவைகள் அடுத்த பஸலிமுதல் வஸூல் செய்யப்படுமென்று தெரிகிறது. புதிய முனிஸிபாலிடி ஏற்பாடு ஜனங்களுக்கு எவ்வளவு தூரம் ஸௌகரியத்தை உண்டாக்குமோ தெரிய வேண்டும். காலக்கிரமத்தில் அந்த ஸமஸ்தான கவர்ன்மெண்டார் வரி செலுத்துவோருக்கு சில கௌன்ஸிலர்களைத் தெரிந்தெடுக்கும் ஸ்வதந்தரத்தைக் கொடுப்பார்கள்போலும்.

### A Marriage Case.

ஒரு விவாக கேஸ்.—நெல்லூர் ஜில்லா காவலி தாலூக்கா அண்ணவரத்திலிருக்கும் வரதவிகோட்டியா என்பவர் சித்தூரிலுள்ள ஒரு பிராமணனும் அவர் மனைவியுஞ் சேர்ந்து தன்னை ஏமாற்றி வஞ்சிதுவிட்டதாக ஒரு விநோதக்கேஸ். சித்தூர் கோர்ட்டில் நடக்கிறது. கேஸின் விவரம் பின்வருமாறு:—ஷை அய்யர் வீட்டில் 12 வயதுள்ள ஒரு பெண்ணிருப்பதாக தனது மைத்துனனால் தெரியவந்தது. தான் சித்தூர் சென்றதாகவும், அய்யர் தமது வீட்டிலிருந்த பெண்ணைக்காட்டி விவாகமும் நிச்சயிக்கப் பட்டதாகவும், அதன்பேரில் ஸ்ரீ தனத்தில் ஒரு பாகமாக ரூபா 100 தான் ஷை அய்யரிடம் கொடுத்துவிட்டுப் போனதாகவும், அப்பால் முகூர்த்ததேதி குறிப்பிடப் படவே பெண்ணின் தாய் தகப்பன் சுற்றத்தார் யாவரும் அண்ணவரம் சென்று குறித்த முகூர்த்தத்தில் விவாகம் நடந்தேரியதாகவும், விவாகம் நடந்த சிறிது தினங்கட்குப்பின் ஷை பெண் சூத்திரப் பெண்ணென்று தெரியவந்ததாகவும் கேஸ்.

### A Reform Marriage.

ஒரு திருந்த ஹிந்து விவாகம்.—திருநெல்வேலி ஜில்லா ஸால்ட் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் பி. ஏ. மாதவய்யாவின் குமாரத்தியான ஸௌபாக்கியவதி விசாலாக்ஷிக்கும், மிஸ்டர் ஜஸ்டிஸ் டி. ஸதாசிவ அய்ரின் குமாரரான மிஸ்டர் டி. எஸ். விஸ்வநாதனுக்கும் ஸமீபத்தில் திருநெல்வேலியில் விவாகம் நடந்தது. இவர்களுள் மிஸ்டர் மாதவய்யர் வடம வகுப்பைச் சேர்ந்தவர். மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸதாசிவ அய்யரோ ப்ரஹசரண வகுப்பைச் சேர்ந்தவர். இப்படி விவாகம் நடப்பது பிராமணர்களுள் புதிது. மிஸ்டர் ஸதாசிவ அய்யருடைய அந்தஸ்து அவருக்குப் பெரும்பலம். அவர் நமது மாதாசாரங்களில் ஸாமான்ய பிராமணர்களைவிட யுக்திபுத்திக்கு உற்றவாறு பக்தி வைத்திருப்பவர். அவர்பேரில் நம்மவர்கள் எவ்வித தோஷமும் சொல்லமுடியாது.

### A Puri Festival.

பூரியில் பிம்பபிரதிஷ்டை.—அடுத்த மாஸம் பூரி அல்லது ஜெகன்னாத க்ஷேத்திரத்தில் ஸ்வாமியைப் புதுப்பிக்கச் செய்யும் ஸம்பந்தமாய் ஒரு பெரிய திருவிழா நடைபெறும். பூரி என்பது இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் கல்கத்தாவுக்கும் விசாகபட்டணத்திற்கும் மத்தியிலுள்ள ஓர் சிறந்த க்ஷேத்திரம். துஷ்டநிக்ரகம், சிஷ்டபரிபாலனம் செய்வதற்காக மகாவிஷ்ணுவே துவாபரயுகத்தில் ஸ்ரீ கிருஷ்ணனாக அவதாரம் செய்தார். அவர் எந்தக் காரியத்தை உத்

தேசித்து அவதாரம் செய்தாரோ அக்காரியம் முடிந்து உடனே தமதுதேகத்தை விட்டுவிட்டு மூலரூபத்துடன் ஐக்கியமாயினர். அந்த தேகத்தை அருச்சுனன் தகனஞ் செய்ததாகவும் சொல்லப்படுகிறது. அந்த ஸமயம் ஸமுத்திரம் பொங்கித் துவாரகையை மூழ்கச் செய்துவிட்டதாம். அவருடைய தேகத்தின் ஒரு சிறியபாகம் ஸமுத்திரத்தில் அடித்துக்கொண்டு கிழக்குக்கரையிலுள்ள ஜெகன்னாத க்ஷேத்திரத்தின் கடலில் மிதந்துவர அதை எடுத்து அவ்வூரார் மரத்தால் செய்த ஜெகன்னாத ஸ்வாமியின் பிம்பத்திற்குள் வைத்து பூஜை செய்துகொண்டு வருகிறதாகவும், பன்னிரண்டு வருஷத்துக் கொருமுறை ஜெகன்னாத ஸ்வாமியின் மரக்கட்டையால் செய்த பிம்பத்தைப் புதுப்பித்து ஸ்ரீ கிருஷ்ணனுடைய தேகத்தின் ஒருபாகத்தை அதில் நுழைத்துவைத்துப் பூஜித்து வருவதாகவும் சொல்லப்படுகிறது. வருகிற மாஸம் அந்த ஸ்வாமியின் பிம்பத்தைப் புதுப்பிப்பார்கள். அதற்காக லட்சக்கணக்கான ஜனங்கள் அந்த மகோற்சவத்தைப் பார்க்க வருவது வழக்கம். இந்த ஜகன்னாத க்ஷேத்திரம் இந்தியாவிலுள்ள புண்ணிய ஸ்தலங்களுள் ஒன்று.

---

# OPENINGS FOR BUSINESS.

## வியாபாரம் நடக்கக்கூடிய இடங்கள்.

[அடியில்கண்ட வியாபாரங்களில் அக்கரையுள்ளவர்கள் "பிழைக்கும் வழி"யையும் அந்தந்த நம்பரையும் குறிப்பிட்டு வேண்டிய விவரங்களுக்கு கல்கத்தாவில் டைரெக்டர் ஜெனரல் ஆப் கம்பர்ஷியல் இன்டெலிஜென்ஸ் என்னும் அதிகாரிக்கு எழுதவும். தக்கவியாபாரி என்பதற்கு அடையாளமாக தாம் பத்து வரவு செய்யும் பாங்கிக்காரர்களை குறிப்பிட்டு எழிதினல் சீக்கிரத்தில் பதில் கிடைக்கும்.]

### Hosiery Machines.

**பனியன் முதலிய துணிகள் நெய்யும் யந்திரங்கள்.**—பனியன் முதலிய துணிகள் நெய்யும் யந்திரங்களைப் பற்றி விவரங்கள் தெரியவேண்டுபவர்கள் பிழைக்கும்வழி ஆபீஸுக்கு எழுதிக்கொண்டால் தெரிவிக்கப்படும்.

### Coir and Kapok.

**தென்னைநாரும் இலவம்பஞ்சும்.**—லண்டனில் உள்ள ஒரு வியாபாரிக்கு தென்னை நாரும் இலவம் பஞ்சும் ஏற்றுமதி செய்பவர்களுடைய விலாஸம் தேவையாம். B. 25.

### Jute Sacks.

**கோணிச் சாக்குகள்.**—லண்டனிலுள்ள ஒரு வியாபாரிக்கு கோணிச்சாக்குகள் ஏற்றுமதி செய்பவர்களுடைய விலாஸம் தேவையாம். (B 26)

### Coir Door Mats.

**தென்னைநாரால் செய்யப்பட்ட வாசல்படியில் போடும் மிதிகம்பளம்.**—கனடா தேசத்திலுள்ள ஒரு லிமிடெட் கம்பேனிக்கு தென்னைநாரால் செய்யப்பட்ட வாசல்படியில் போடும் மிதி கம்பளங்கள் ஏற்றுமதி செய்பவர்களுடைய விலாஸம் தேவையாம். B 29.

### Cotton Seed Oil Machinery.

**பருத்திக்கோட்டை எண்ணெய் யந்திரம்.**—அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களிலுள்ள யந்திர நிபுணர் ஒருவர் பருத்திக்கொட்டை யெண்ணெய் யந்திரத்தைப்பற்றியோ அல்லது அது ஸம்பந்தமாயோ விவரங்கள் தெரிந்துகொள்ள பிரியப்படுவர்களுடைய விலாஸம் வேண்டுமென்றுர். (B 34)

### Musk.

**கஸ்தூரி.**—கல்கட்டாவிலுள்ள ஒரு வியாபாரிக்கு கஸ்தூரி விற்பவர்களுடைய விலாஸம் தேவையாம். (B 43.)

### Aloe Fibre.

**கற்றாழைநார்.**—பம்பாயிலுள்ள ஒரு வியாபாரிக்கு கற்றாழைநார் வாங்குகிறவர்களுடைய விலாஸம் தேவையாம். (B 36)

### Mango Chutney.

**மாங்காய் ஊறுகாய்.**—லண்டனிலுள்ள ஒரு வியாபாரிக்கு தித்திப்பு மாங்காய் ஊறுகாய் செய்கிறவர்களாயிருந்தாலும் அல்லது ஏற்றுமதி செய்கிறவர்களாயிருந்தாலும் ஸரி அவர்களுடைய விலாஸங்கள் தேவையாம். (B 71)

## MADRAS MARKET REPORTS.

## மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.

தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்று சொல்லப்படும் வர்த்தகச் சங்கத்தாரின் ஜுன்மாஸம் 5-ம் உ ரிப்போர்ட்டுப்படி

**Produce Market**.--விளைபொருள்கள்

| | |
|---|---|
| | ரூ. |
| ஆவாரம்பட்டைபாரம் 1-க்கு... | 20 முதல் 25 |
| கொன்னைப்பட்டை ஷை ... | 13 முதல் $13\frac{1}{2}$ |
| கடப்பை கடுக்காய் ஷை ... | 13 முதல் 14 |
| சேலம் ஷை ஷை ... | 17 முதல் 18 |
| நல்லெண்ணெய் ஷை ... | 100 முதல் 110 |
| புங்கம் எண்ணெய் ஷை ... | 75 முதல் 85 |
| எட்டிக்கொட்டை ஷை ... | 12 முதல் 18 |
| விளக்கெண்ணெய் ஷை ... | 76 |
| கொட்டை முத்து 164 ராத்தல் | $10\text{-}10\frac{1}{4}$ |
| | ரூ. அ. பை. |
| பந்தர் பச்சை அரிசி 44 படி ... | 8 முதல் $9\frac{1}{2}$ |
| நெல்லூர் அரிசி 31 படி ... | 7 10 முதல் 7 14 |
| கோதுமை 4 படி ... | |
| கொள்ளு 195 ராத்தல் ... | |
| வெங்காயம் (தாட்பத்திரி) பாரம் ... | 10 0 0 |
| ஷை (பல்லாரி) ஷை ... | 13 0 0 |
| பங்களூர் உருளைக்கிழங்கு ... | 27 முதல் 30 |

**Metals.**—உலோகங்கள்

| | |
|---|---|
| பித்தளைத் தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷ—ம் | ரூ. |
| பாரம் ... | 240 |
| செப்புத் தகடுகள் பாரம் ... | 298 |
| செப்புக்கட்டி ஷை ... | 250 |
| நாகம் ஷை ... | 90 |
| ஷை (உள்ளூர்) ஷை ... | 80 |
| ஈயம் ஷை ... | 60 |
| காரீயம் ஷை ... | 70 |
| வெள்ளீயம் ஷை ... | 207 வராகன் |

**Iron.**—இரும்பு.

| | |
|---|---|
| மருக்கி சட்டம் 2 செ. பாரம் | ரூ. 25 முதல் 26 |
| சீமை ... | 42 முதல் 45 |
| மருக்கி தகடு 6--9, 12—13, | 26—40 |
| பீப்பாய்க் கட்டு ... | 30 |
| 8 பட்டை எஃகு ... | 23 முதல் 30 |
| எஃகு வில்கட்டு ... | 35 |
| திரணைக் கம்பி மருக்கி 2 செ. ... | 24—29 |
| சீமை ... | 42—49 |

## SEASON.

## காலஸ்திதி.

**Rainfall.**

மழை.—1912ஞு ஏப்ரல்மீ 1உயிலிருந்து 1912ஞு ஜுலைமீ 1உ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம்,ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 3·99 | 8·89 |
| வால்டேர் | 1·76 | 7·87 |
| காக்கினடா | 2·92 | 6·72 |
| மசூலிப்பட்டணம் | 0·77 | 6·66 |
| நெல்லூர் | 1·49 | 2·41 |
| மதராஸ் | 1·78 | 3·72 |
| கூடலூர் | 2·24 | 3·13 |
| நாகப்பட்டணம் | 0·94 | 3·92 |
| பாம்பன் | 2·00 | 2·00 |
| கொழும்பு | 48·99 | 28·71 |
| திருவநந்தபுரம் | 33·31 | 26·65 |
| கொச்சி | 63·23 | 45·66 |
| கள்ளிக்கோட்டை | 54·89 | 46·85 |
| மங்களூர் | 39·47 | 45·90 |
| மெர்க்காரா | 29·53 | 35·21 |
| ஐதராபாத் | 3·91 | 6·46 |
| ரெய்ச்சூர் | 3·54 | 5.42 |
| பல்லாரி | 1·93 | 4·98 |
| கர்நூல் | 1·57 | 5·00 |
| கடப்பை | 1 82 | 5·32 |
| ஹாஸ்ஸான் | 6·28 | 11·69 |
| பெங்களூர் | 5·27 | 8·70 |
| கொடைக்கானல் | 19·76 | 14·09 |
| உதகமண்டலம் | 13·56 | 16·53 |
| கோயம்புத்தூர் | 2·90 | 5·74 |
| வேலூர் | 1·56 | 6·70 |
| சேலம் | 5·47 | 10·19 |
| திருச்சிணுப்பள்ளி | 11·23 | 6·51 |
| புதுக்கோட்டை | 4·69 | 4·87 |
| மதுரை | 5·88 | 6 55 |
| திருநெல்வேலி | 5·10 | 4·90 |